# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2194/74 - 2020 සැප්තැම්බර් මස 25 වැනි සිකුරාදා - 2020.09.25

*3194/74 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் முறையே 43(1), 44(2) மற்றும் 46(1) (அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து என்னால் 2020, ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலானது 2020,செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி.*


1A - G 32650 — 370 (2020/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பொருளடக்கம்**


| | | | பக்க இல |
|---|---|---|---|
| I | அறிவித்தல் | | 1 |
| II | அமைச்சரவை அமைச்சரொருவருக்கு தனது அமைச்சு சார்பில் ஒப்படைக்கப்படும் பொதுப் பணிப்பொறுப்பு | | 2 |
| III | அமைச்சரவை அமைச்சரொருவருக்கு தனது விடய எல்லைக்கு உரிய இராஜாங்க அமைச்சு சார்பில் ஒப்படைக்கப்படும் பொதுப் பணிப்பொறுப்பு | | 3 |
| IV | இராஜாங்க அமைச்சரொருவருக்குத் தமது விடய எல்லைக்கு உரிய இராஜாங்க அமைச்சு சார்பில் ஒப்படைக்கப்படும் பொதுப் பணிப்பொறுப்பு | | 3 |
| V | அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களது பொறுப்புக்கள் | | 3 |
| VI | அமைச்சரவைக் கட்டமைப்பு | | 4 |
| VII | சனாதிபதி அலுவலகம் - தேசிய முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டம் | | 6 |
| VIII | அமைச்சரவை அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் | | |
| | 1.0 | **பாதுகாப்பு அமைச்சர்** | 7 |
| | | 1.1 உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் | 9 |
| | 2.0 | **நிதி அமைச்சர்** | 11 |
| | | 2.1 நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் | 14 |
| | | 2.2 சமுர்த்தி, உள்ளக பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 15 |
| | 3.0 | **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்** | 16 |
| | | 3.1 தேசிய மரபுரிமைகள், அருங்கலை மற்றும் கிராமியக் கலைநுட்ப மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் | 18 |
| | 4.0 | **நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்** | 19 |
| | | 4.1 நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருட்கள் அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் | 20 |
| | | 4.2 கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு' இராஜாங்க அமைச்சர் | 21 |
| | | 4.3 தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் | 22 |
| | 5.0 | **நீதி அமைச்சர்** | 23 |
| | | 5.1 சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் | 25 |
| | 6.0 | **வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்** | 25 |
| | | 6.1 பிராந்திய உறவு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் | 26 |
| | 7.0 | **அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்** | 27 |
| | | 7.1 மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் | 29 |
| | 8.0 | **கல்வி அமைச்சு** | 30 |
| | | 8.1 மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்விப் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் | 32 |
| | | 8.2 கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் | 33 |
| | | 8.3 திறன்கள் அபிவிருத்தி தொழில்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சர் | 34 |
| | | 8.4 அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வீ இராஜாங்க அமைச்சர் | 36 |

9.0 **சுகாதார அமைச்சர்** 37

9.1 மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் 39

9.2 சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சர் 40

10.0 **தொழில் அமைச்சர்** 41

10.1 வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் 42

11.0 **சுற்றாடல் அமைச்சர்** 43

12.0 **வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்** 44

12.1 வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தீ இராஜாங்க அமைச்சர் 44

13.0 **கமத்தொழில் அமைச்சர்** 45

13.1 நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் 47

13.2 பசளை உற்பத்தி மற்றும் விநியோகங்கள், இரசாயனப் பசளைகள் மற்றும் கிரிமிநாசினி பயன்பாட்டு ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் 48

13.3 கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் 49

14.0 **நீர்ப்பாசன அமைச்சர்** 50

14.1 மகாவலி வலயங்கள் சார்ந்த கால்வாய்களின் அகழிகள், வாய்க்கால்கள் மற்றும் வாழ்விடங்கள், பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் 51

14.2 கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அவை சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் 51

15.0 **காணி அமைச்சர்** 52

15.1 காணி முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் 54

16.0 **கடற்றொழில் அமைச்சர்** 55

16.1 அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன்கள் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் 56

17.0 **பெருந்தோட்ட அமைச்சர்** 56

17.1 கம்பனித் தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் 58

17.2 தென்னை, கித்துல் மற்றும் பனஞ் செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மற்றும் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் 59

17.3 கரும்பு,சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் 60

| | | |
|---|---|---|
| 18.0 | **நீர்வழங்கல் அமைச்சர்** | 61 |
| | 18.1 கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 61 |
| 19.0 | **மின்சக்தி அமைச்சர்** | 62 |
| | 19.1 சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 63 |
| 20.0 | **வலுசக்தி அமைச்சர்** | 64 |
| 21.0 | **துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்** | 65 |
| | 21.1 களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள் மற்றும் இயந்திப் படகுகள் மற்றும் கப்பற்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 65 |
| 22.0 | **நெடுஞ்சாலைகள் அமைச்சர்** | 66 |
| | 22.1 கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் | 67 |
| 23.0 | **போக்குவரத்து அமைச்சர்** | 67 |
| | 23.1 வாகனங்களை ஒழுங்குபடுத்தல், பஸ் வண்டி போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் | 68 |
| 24.0 | **இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்** | 69 |
| | 24.1 கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் | 70 |
| 25.0 | **சுற்றுலாத்துறை அமைச்சர்** | 71 |
| | 25.1 விமானச்சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 73 |
| 26.0 | **வர்த்தக அமைச்சர்** | 73 |
| | 26.1 கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் | 74 |
| 27.0 | **கைத்தொழில் அமைச்சர்** | 75 |
| | 27.1 பத்திக், கைத்தறித் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சர் | 77 |
| | 27.2 இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் | 77 |
| | 27.3 பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் | 78 |
| 28.0 | **வெகுசன ஊடக அமைச்சர்** | 79 |
| | 28.1 தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 80 |

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் முறையே 43(1), 44(2) மற்றும் 46(1) (அ) (ஆ) ஆகிய உறுப்புரைகளுக்கமைய என்னால் அமைச்சரவை மற்றும் அமைச்சரவை அல்லாத அமைச்சர்கள் உட்பட அமைச்சுக்களின் எண்ணிக்கையும் சொல்லப்பட்ட அமைச்சரவை மற்றும் அமைச்சரவை அல்லாத அமைச்சர்களுக்கான விடயங்களும் பணிகளும், திணைக்களங்களும், அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் குறித்தொதுக்கப்படுதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால்,

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கமையும் வகையில் சொல்லப்பட்ட அமைச்சரவை மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுக்களினால் பூர்த்திசெய்ய வேண்டிய மக்கள்மையமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட முன்னுரிமைகள் உட்பட ஒவ்வொரு அமைச்சரிடமும் ஒப்படைக்கப்படும் விடயங்கள் மற்றும் பணிகளும், தொடர்புடைய நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளும் அதற்கு மேலதிகமாக அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்களின் கொள்கைரீதியான வழிகாட்டலின்கீழ் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்படும் அமைச்சுக்கள், விடயங்கள் மற்றும் பணிகளும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் என்பனவும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இருக்க வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலும், அமைச்சரவை மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுக்களுக்காக வெவ்வேறாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதோடு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 52(1) இற்கமைய நியமிக்கப்படும் அமைச்சுச் செயலாளரொருவரால் அமைச்சரவை அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக அமைச்சரவை அமைச்சரின் அமைச்சுக்களும் அமைச்சரவையினால் நியமிக்கப்படும் செயலாளரொருவரால் அமைச்சரவை அமைச்சரின் கொள்கைரீதியான வழிகாட்டலின்கீழ் தொடர்புடைய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சரின் அமைச்சுக்களும் வழிநடத்தப்படும்.

மேலும் அமைச்சரவைக் கட்டமைப்பு கிராமிய மக்கள் வாழ்வு, மற்றும் கமத்தொழில் பொருளாதாரம் என்பன ஒட்டுமொத்தச் சமூகப் பொருளாதார விருத்தியின் பிரிக்கமுடியாத முன்னுரிமைகளாக ஏற்றுக்கொள்ளக்கூடியதால் சகல அமைச்சுச் செயலாளர்களும் அனைத்து அமைச்சர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதலின்கீழ் கிராமிய அத்துடன் பிரதேச அலுவலகங்களின் சேவைகள் வலுப்பெறும் வகையில் நகர அத்துடன் கருத்திட்டப் பணித்தொகுதிகளை அமைப்பதில் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

மேலும் அமைச்சரவை அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுச் செயலாளர்கள் ஆகியோர் பிரதம கணக்களிப்பு உத்தியோகத்தராகச் செயற்படுவதற்காக நிதி அமைச்சரினால் அதிகாரம் வழங்கப்படும். அதன்வண்ணம், அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுக்கும் அமைச்சரவை அமைச்சின் கீழான திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பவற்றுக்குப் பிரதம கணக்களிப்பு உத்தியோகத்தர் ஆவர். அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுச் செயலாளர் தனது அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பவற்றுக்கான பிரதம கணக்களிப்பு உத்தியோகத்தர் ஆவார்.

மேலும், அமைச்சரவை அமைச்சுச் செயலாளர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுச் செயலாளர் ஆகிய இருவரும் முறையே தமது அமைச்சரவை அமைச்சுக்கள் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுக்களின் அலுவலகங்களுக்கான கணக்களிப்பு உத்தியோத்தர் ஆவர்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

### அட்டவணை

### அமைச்சரவை அமைச்சரொருவருக்கு தனது அமைச்சு சார்பில் ஒப்படைக்கப்படும் பொதுப் பணிப்பொறுப்பு

i. சகல அமைச்சருக்கும் ஒப்படைக்கப்படும் விடயஎல்லைக்குரிய அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சரவைக்கும் சட்டதிட்டங்களை சட்டவாக்கத்துறைக்கும் சமர்ப்பித்தலும் அதற்குரிய முன்நோக்கிய செயற்பாட்டுமுறைகளைப் பின்பற்றுதலும்.

ii. பல்வேறு விடயங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கிடையில் கூட்டிணைப்பு மற்றும் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பைப் பாதுகாத்தல்.

iii. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கமைய தமது அமைச்சின் விடய எல்லைக்குரியதாக வருடாந்த வரவுசெலவு மூலம் வழங்கப்படும் ஒதுக்கீட்டினுள் துறைசார் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வழிநடத்தல், நிதி ஒதுக்கீடுகளை உச்சகட்ட பயனுறுதியான வகையில் வழங்குதலும் மேற்பார்வை செய்தலும்.

iv. தேசியக் கொள்கைகளுள் அமைச்சின் நோக்கு, பணி மற்றும் நோக்கங்களை மக்களின் தேவைகளை இலக்காகக் கொண்டு இற்றைப்படுத்துதல்.

v. அமைச்சின் விடய எல்லையை செயற்படுத்துவதற்குத் தேவையான சிறந்த பதவியணியினரைத் தீர்மானித்தல், கிராமிய மற்றும் பிரதேச தேவைகளுக்கு ஏற்ப பணிற்றொகுதியை தேவையான இடங்களுக்கு அனுப்புதல் மற்றும் பல நிறுவனங்களுக்கு / பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ள பதவியணிக்கு குறிப்பிட்டவாறு பொறுப்புக்களைக் கையளித்தல்.

vi. அமைச்சின் கீழுள்ள இராஜாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது தூரநோக்கு மற்றும் பணி நிறைவேறும் வகையில் செயற்படுவதற்காக வழிகாட்டுதலும் கண்காணித்தலும்.

vii. அமைச்சு மற்றும் அதன்கீழுள்ள அனைத்து நிறுவனங்களதும் நிர்வாகப் பணிகள், கணக்கு நடைமுறைகள், பெறுகை அலுவல்கள் என்பவற்றை உரிய தரத்துக்கமைய மேற்கொள்ளுவதில் பொறுப்பாக இருத்தலும், கணக்காய்வுப் பணிகளுக்கு உதவி வழங்குவதற்காக கணக்களிப்பு உத்தியோகத்தராக அமைச்சுச் செயலாளருக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வழிகாட்டுதலும்.

viii. மாகாணசபைகளுக்கும் மாகாண நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தும்போது அப்பணிகளை பயனுறுதியான வகையில் நிறைவேற்றுவதற்கு நல்லதோர் கூட்டிணைப்பைப் பேணுதல் மற்றும் நடைமுறைப்படுத்தும் போது இரட்டைமயப்படுவதைத் தவிர்த்துக்கொள்வதன் மூலம் நிர்வாகத் திறமுறைகள், ஒழுங்குவிதிகள், அனுமதிப் பத்திரங்கள் மற்றும் உத்தரவுப்பத்திரங்கள் என்பவற்றை மக்கள் நேயமாக எளிதாக்கி மக்களை மையமாகக் கொண்ட பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றதக்க ஒழுங்குகளைச் செய்தல்.

அரசியலமைப்பின் 42(2) மற்றும் 44(4) ஆம் உறுப்புரைகளுக்கமைய அமைச்சரவை அமைச்சரும், இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

**அமைச்சரவை அமைச்சரொருவருக்கு தனது விடய எல்லைக்கு உரிய இராஜாங்க அமைச்சு சார்பில் ஒப்படைக்கப்படும் பொதுப் பணிப்பொறுப்பு**

i. *தனது விடயஎல்லைக்கு உரிய இராஜாங்க அமைச்சுக்காக கொள்கைரீதியான வழிகாட்டலை வழங்குதல்*

ii. *தனது விடயஎல்லைக்கு உரிய இராஜாங்க அமைச்சுக்களின் அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சரவைக்கும் சட்டதிட்டங்களைச் சட்டவாக்கத் துறைக்கும் சமர்ப்பித்தலும் அதற்குரிய வருங்காலச் செயற்பாட்டு முறைகளைப் பின்பற்றுதலும்*

iii. *தனது விடயஎல்லைக்கு உரிய இராஜாங்க அமைச்சுக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை மற்றும் தொடராய்வு செய்தல்*

**இராஜாங்க அமைச்சரொருவருக்குத் தமது விடய எல்லைக்கு உரிய இராஜாங்க அமைச்சு சார்பில் ஒப்படைக்கப்படும் பொதுப் பணிப்பொறுப்பு**

1. *இராஜாங்க அமைச்சுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சகல பணிகளுக்குமான அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரிப்பதற்குரிய தகவல்கள் மற்றும் குறித்த அலுவல்களை இராஜாங்கச் செயலாளர் ஊடாக அமைச்சரவை அமைச்சின் செயலாளருடன் ஒருங்கிணைந்து அமைச்சரவை அமைச்சருக்கு உதவியளித்தல்.*

2. *இராஜாங்க அமைச்சுக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளுக்குரிய நிறுவனங்களுடன் செயற்படுதலும் இற்றைப்படுத்தலும் அமைச்சரவை அமைச்சருக்கு முன்னேற்றத்தை அறிக்கையிடுதலும்.*

**அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களது பொறுப்புக்கள்**

*(1)* **நிதிசார் அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் கையளித்தல்**

*நிதிஒழுங்குவிதி III ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றும் திணைக்களங்களின் நிதிஒழுங்குவிதி 124 (2) இற்கமைய தலைமை கணக்களிப்பு உத்தியோகத்தரிடம் திறைசேரியின் ஏற்பாடுகளின் கீழ் நிதி நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொறுப்பு நிதி அமைச்சரால் ஒப்படைக்கப்படும்.*

*அப்பொறுப்பை எய்துவதற்காக தலைமை கணக்களிப்பு உத்தியோகத்தரால் உரியவாறு ஏற்பாடுகளைச் செய்தலும் கணக்களிப்பு உத்தியோகத்தர் என்ற வகையில் நிறுவனத் தலைவர்களுக்கு வழிகாட்டுதலும் தலைமை கணக்களிப்பு உத்தியோகத்தரின் முக்கிய பொறுப்பாகும்.*

*நிதி ஒழுங்கு 127 இன் கீழ் தனது அமைச்சின் கீழான அனைத்து திணைக்களங்களின் நிதி நிருவாகத்தின் அளவினை உறுதிப்படுத்தல் தொடர்பாக தலைமை கணக்களிப்பு உத்தியோகத்தர் நிதி அமைச்சருக்கு வகை கூறல் வேண்டும்.*

*நிதி ஒழுங்கு 125 (1) (ஆ) இற்கமைய ஒவ்வொரு அமைச்சுச் செயலாளரும் தனது அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் தலைமை கணக்களிப்பு உத்தியோகத்தராவதற்கு மேலதிகமாக தனது அமைச்சு அலுவலகங்களுக்காகவும் கணக்களிப்பு உத்தியோகத்தராவார்.*

*நிதிஒழுங்கு விதி 125 (1) (அ) இற்கமைய திறைசேரியினால் மற்றுமொரு ஒழுங்கு செய்யப்பட்டாலேயன்றி ஒவ்வொரு திணைக்களத்தினது தலைவரும் தனது திணைக்களத்தின் அனைத்து நிதி அலுவல்கள் தொடர்பாக கணக்களிப்பு உத்தியோகத்தராவார்.*

*அதன்போது அமைச்சரவை அமைச்சின் செயலாளர் தனது அமைச்சருக்குரிய முழுமொத்த விடயஎல்லை, அதாவது அமைச்சரவை அமைச்சுக்குரிய திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசு அமைச்சுக்கள் என்பவற்றிற்காகவும் தலைமை கணக்களிப்பு உத்தியோகத்தராவதுடன், இராஜாங்க அமைச்சுச் செயலாளர் தனது விடய எல்லைக்குரிய திணைக்களம் தொடர்பாக மட்டும் தலைமை கணக்களிப்பு உத்தியோகத்தராவார்.*

*(2)* **நிருவாகம் மற்றும் அலுவலகப் பணிகள்**

*நிருவாகச் செயற்திட்டங்கள், கடிதக் கொடுக்கல்வாங்கல்கள் செய்யும் வழிகள், அலுவலகப் பதிவுகள், அதிகாரப்பகிர்வு மற்றும் செயற்படுத்தல் அடங்கலாக கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக தாபன விதிக்கோவையினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல் நெறிகளைப் போன்று அரசியலமைப்பின் VI ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச கொள்கைகளைச் செயற்படுத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் என்பவற்றை கடைப்பிடிப்பதை ஒட்டுமொத்த அரச சேவையினுள் தாபிப்பதற்காக அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

## அமைச்சரவைக் கட்டமைப்பு

### அமைச்சரவை அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள்

| | அமைச்சு | | இராஜாங்க அமைச்சு | |
|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்பு | | உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் | 01 |
| 02 | நிதி | I | நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி சீர்திருத்தம் | 02 |
| | | II | சமுர்த்தி, உள்ளக பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், தொழில் அபிவிருத்தி | 03 |
| 03 | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் | | தேசிய மரபுரிமைகள், அருங்கலை மற்றும் கிராமியக் கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் | 04 |
| 04 | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு | I | நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் | 05 |
| | | II | கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு | 06 |
| | | III | தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் | 07 |
| 05 | நீதி | | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு | 08 |
| 06 | வெளிநாட்டலுவல்கள் | | பிராந்திய உறவு அலுவல்கள் | 09 |
| 07 | அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | | மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் | 10 |
| 08 | கல்வி | I | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் | 11 |
| | | II | கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு | 12 |
| | | III | திறன்கள் அபிவிருத்தி தொழில்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் | 13 |
| | | IV | அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர் | 14 |
| 09 | சுகாதாரம் | I | மருந்து உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் | 15 |
| | | II | சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதாரம் | 16 |
| 10 | தொழில் | | வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் | 17 |
| 11 | சுற்றாடல் | | | |
| 12 | வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு | | வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி | 18 |
| 13 | கமத்தொழில் | I | நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் | 19 |
| | | II | பசளை உற்பத்தி மற்றும் விநியோகங்கள், இரசாயனப் பசளைகள் மற்றும் கிருமிநாசினி பயன்பாட்டு ஒழுங்குபடுத்தல் | 20 |
| | | III | கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் | 21 |
| 14 | நீர்ப்பாசனம் | I | மகாவலி வலயங்கள் சார்ந்த கால்வாய்களின் அகழிகள், வாய்க்கால்கள் மற்றும் வாழ்விடங்கள், பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 22 |
| | | II | கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அவை சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி | 23 |

| | அமைச்சு | | இராஜாங்க அமைச்சு | |
|---|---|---|---|---|
| 15 | காணி | | காணி முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி | 24 |
| 16 | கடற்றொழில் | | அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன்கள் ஏற்றுமதி | 25 |
| 17 | பெருந்தோட்ட | I | கம்பனித் தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாடு | 26 |
| | | II | தென்னை, கித்துல் மற்றும் பனஞ் செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மற்றும் பல்வகைப்படுத்தல் | 27 |
| | | III | கரும்பு,சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு | 28 |
| 18 | நீர் வழங்கல் | | கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி | 29 |
| 19 | மின்சக்தி | | சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி | 30 |
| 20 | வலுசக்தி | | | |
| 21 | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை | | களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள் மற்றும் இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்தொழில் அபிவிருத்தி | 31 |
| 22 | நெடுஞ்சாலைகள் | | கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் | 32 |
| 23 | போக்குவரத்து | | வாகனங்களை ஒழுங்குபடுத்தல், பஸ் வண்டி போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் | 33 |
| 24 | இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை | | கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு | 34 |
| 25 | சுற்றுலாத்துறை | | விமானச்சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி | 35 |
| 26 | வர்த்தக | | கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு | 36 |
| 27 | கைத்தொழில் | I | பத்திக், கைத்தறித் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் | 37 |
| | | II | இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் | 38 |
| | | III | பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாடு | 39 |
| 28 | வெகுசன ஊடக | | தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி | 40 |

## சனாதிபதி அலுவலகம் - தேசிய முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டம்

*01.* **விடய எல்லை**

*அனைத்துத் துறைகளதும் உயர்மட்டத் தகவல்களை தொழில்நுட்பப் பயன்பாட்டினுள் இயங்குநிலையை எளிதாக்கி தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான இலத்திரனியல் தொடர்புகள் மற்றும் கூட்டிணைப்புக்களினூடாக உற்பத்திப்பெருக்கமிக்க மக்கள்மையமான சேவைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதலும் வறுமையை ஒழித்துக்கட்டி, கட்டுக்காப்பான ஒரு நாட்டை உருவாக்குவதற்காகப் பொருளாதார மற்றும் சமூகரீதியில் ஊக்குவிப்பதற்கான உபாயமுறையிலான அணுகுமுறைகளை நோக்கித் தேசியரீதியில் வழிகாட்டுதல்.*

*02.* **விடயங்களும் பணிகளும்**

*சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கமைவாக மற்றும் அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படையின்கீழ் சனாதிபதி செயலணிகளதும் பங்களிப்பைப் பெற்றுக்கொண்டு தொடர்புடைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து மற்றும் உரிய சட்டதிட்டங்களுக்கமைவாகப் பின்வரும் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டச் சபைகள், நிறுவனங்கள் மற்றும் மேற்போந்த செயலணிகளை உத்தேச இலக்குகளை நோக்கி வழிநடத்துதலும் கண்காணித்தலும் தொடராய்வு செய்தலும்.*

*03.* **தேசிய முன்னுரிமைகள்**

*1.* *தேசியப் பாதுகாப்பு, கொவிட்-19 தொற்றுநோய் பரவும் ஆபத்தை ஒழித்தல், போதைப்பொருட்களை ஒழித்துக்கட்டுதல், தொல்பொருள்களைப் பேணிக்காத்தல், கல்விச் சீர்த்திருத்தங்கள், வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதாரப் புத்தெழுச்சி என்பன சார்பில் உள்ள சனாதிபதி செயலணிகளுடன் இணைந்து சகல அமைச்சுக்களும் தமது விடயத்துறைகளுக்குரிய பணிகளை ஒருங்கிணைத்தலும், செயற்படுத்துதலும்.*

*2.* *அரசபொறிமுறை மற்றும் வர்த்தகத்துறைகளின் செயற்பாட்டை இலகுபடுத்தி வினைத்திறமைமிக்க அத்துடன் மக்கள்மையமான சேவை வழங்குதலும் அறிவைப் பரிமாறிக் கொள்ளும் கருவியாகத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு டிஜிட்டல் அரசமுறையை விரிவாக்கலும்*

*3.* *தேசங்களுக்கிடையிலான இலத்திரனியல் வணிகம் மற்றும் சர்வதேச இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளைத் தாபித்தல்*

*4.* *தரவுப் பாதுகாப்புகள், சைபர் பாதுகாப்பு, புலமைப் பரிசில்களின் உரித்துத் தொடர்பாகப் புதிய சட்டங்கள் மற்றும் தாபன ரீதியான கட்டமைப்புக்களைத் தயாரித்தல்*

*5.* *சுற்றாடலில் உணர்வுபூர்வம், தகவல் தொழில்நுட்பம், அறிவு மற்றும் திறன்கள், சுற்றுலாச் சேவைகள் மற்றும் விளையாட்டுத்துறைகளில் இலங்கையின் முக்கியத்துவத்தை உயரச்செய்து கொழும்பு நகரத்தைச் சர்வதேச வாணிப வர்த்தக மற்றும் நிதிசார் மையமாக அமைப்பதற்காகத் தேவையான சட்டரீதியான அத்துடன் தாபனரீதியான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல்*

*6.* *“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வறுமையை ஒழித்துக்கட்டி அனைத்து கட்சிகளுக்கும் நலன்கிடைக்கும் ஏற்றுமதி இறக்குமதி உற்பத்தி பொருளாதாரத்திற்காக உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டு வசதிகளை விரிவாக்குதல்.*

*7.* *கொழும்பு அம்பந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளை பல்துறை தேசிய மற்றும் சர்வதேச மத்திய நிலையங்களாகவும் கண்டி, அநுராதபுரம், கம்பஹா, இரத்தினபுரி, காலி, பதுளை, மன்னார், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளை தேசிய நிலையங்களாகவும் அபிவிருத்தி செய்வதன் மூலம் ஒட்டுமொத்த தேசிய பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான வேறு அபிவிருத்தி மையங்களை விரிவாக்குதல்*

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *நிறுவனங்கள் /சபைகள்* | *நடைமுறைப்படுத்தப்பட சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| *1. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இணைந்த நிறுவனங்கள்*<br>*2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை மற்றும் இணைந்த நிறுவனங்கள்* | • *ஸ்ரீலங்கா தொலைத்தொடர்புச் சட்டம்(1991 இல 25)*<br>• *தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம் (2003 இல 27)* |

| | |
|---|---|
| 3. இலங்கை கணனி திடீர் பதிலளித்தல் ஒன்றியம்<br>4. இலங்கை முதலீட்டுச் சபை<br>5. கொழும்பு துறைமுக நகர கருத்திட்டம்<br>6. இலங்கை டெலிகொம் கம்பனி மற்றும் அதன் நிர்வாகக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள்<br>7. அனைத்து தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள்<br>8. முப்படை உறுப்பினர்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காக அனைத்து படைகளினால் எடுக்க வேண்டிய செயன்முறைகளை கற்றாராய்ந்து சொல்லப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்குவதற்கான சனாதிபதி செயலணி<br>9. பாதுகாப்பான நாடு, ஒழுக்கப் பண்புமிக்க, குணநெறிமிக்க சட்டத்தை மதிக்கும் சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணி<br>10.கொவிட் 19 அமைச்சுக்களின் செயலணி<br>11.கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமையை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணி<br>12.இலங்கை கல்வி நடவடிக்கைகள் தொடர்பான சனாதிபதி செயலணி<br>13.பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான சனாதிபதி செயலணி. | • மத்திய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச்சட்டம் முதலீட்டுச் சட்டம் (1978 இல. 4)<br>• இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டம் (2006 இல. 19) |

## 1. பாதுகாப்பு அமைச்சர்

### 01. விடய எல்லை

தேசியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதை முன்னுரிமையாகக்கொண்டு இலங்கையின் சகல மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி குற்றவியல் மற்றும் சமூகவிரோத, பயங்கரவாதச் செயல்கள் அற்ற சட்டமும் ஒழுங்கும் தாபிக்கப்பட்டுள்ள ஒரு நாட்டை உருவாக்குதல்.

### 02. கடமைகளும் பணிகளும்

1. 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாகவும் அரசினால் செயற்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கைகளுக்கு அமைவாகவும் "பாதுகாப்பான நாட்டினை" உருவாக்குவதற்காக உரிய இராஜாங்க அமைச்சுக்களுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளுக்கு அமைய பாதுகாப்பு விடயத்துடன் தொடர்பான கொள்கையாக்கங்கள் தேசிய வரவு செலவு அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி எனும் வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை ஆக்குதலும் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்.
2. தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
3. அனைத்துப் பிரசைகளும் பயம், அச்சம் இன்றி சுதந்திரமாக வாழ்வதற்குத் தகுந்த சுற்றாடலை உருவாக்குவதன்மூலம் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
4. அரசாங்க மற்றும் தனியார் பொருளாதார செயற்பாடுகளினுள் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகளை விரிவாக்கும் பாதுகாப்புச் சூழலை நாட்டினுள் உருவாக்குதல்.

### 03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. போதைப்பொருள் இடையூறிலிருந்து விடுபட்டதொரு நாட்டை உருவாக்குவதற்காகப் போதைப்பொருட்கள் இந்நாட்டுக்கு உள்வருவதைத் தவிர்த்தல், போதைப்பொருள் இடையூறைக் கட்டுப்படுத்தல், போதைப்பொருள் இடையூறுகளுக்குப் பலியாவதைத் தவிர்த்தல், போதைப்பொருள்கள் இடையூறுகளுக்கு ஆளானவர்களுக்குப் புனர்வாழ்வளித்தலுடன் தொடர்பான சனாதிபதி செயலணியுடன் இணைந்து செயற்படுதல்.
2. முப்படைகள், பொலிஸ், சிவில் பாதுகாப்புச் செயலணிகளில் சேவையாற்றும் ஓய்வுபெற்ற, மரணித்த, வலதுகுறைந்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் அங்கத்தவர்கள் தொடர்பான நிர்வாக, வழங்கல்கள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ளல்.

*04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்*

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. பாதுகாப்புப் பதவிநிலைத் தலைவரின் அலுவலகம்<br>2. இலங்கைத் தரைப்படை<br>3. இலங்கைக் கடற்படை<br>4. இலங்கை வான்படை<br>5. ரக்னா ஆரக்சன லங்கா லிமிட்டெட்<br>6. இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தைச் செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை<br>7. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்<br>8. அரச புலனாய்வுச் சேவை<br>9. இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்<br>10. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை<br>11. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்<br>12. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரி<br>13. பாதுகாப்புச் சேவைகள் பாடசாலை<br>14. தேசிய பயிலிளவல் சிறப்பணி<br>15. தேசிய பாதுகாப்பு நிதியம்<br>16. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்<br>17. இலங்கை தேசியப் பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம்<br>18. இலங்கை தேசியப் பாதுகாப்புக் கல்லூரி<br>19. ரணவிருசேவை அதிகாரசபை<br>20. அபி வெனுவென் அப்பி நிதியம்<br>21. பல்செயற்பாட்டு அபிவிருத்தி செயலணி திணைக்களம்<br>22. தொல்பொருளியல் திணைக்களம்<br>23. மிலோதா நிறுவனம் (ACADEMY OF FINANCIAL STUDIES) | • (2009ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம்<br>• தரைப்படைச் சட்டம் (1949 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க)<br>• கடற்படைச் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க)<br>• வான்படைச் சட்டம்(1949 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க)<br>• (1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) புறத்தொப்படைத்தல் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) இரசாயன ஆயுதங்கள் சமவாயம் தொடர்பான சட்டம்<br>• (2008ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க)பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம்<br>• (2009ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டம்<br>• (1998ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க) தனியார் பாதுகாப்புமுகவர் நிலையங்கள் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) வெடிப்பொருட்கள் சட்டம்<br>• (1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுடுபடைக்கலன்கள் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) துப்பாக்கிச்சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்<br>• (1985ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) பயன்பாடுகள் மற்றும் குறைநிரப்புச் சட்டம்<br>• (1966ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்<br>• (2001ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) கடற்கொள்ளைச் சட்டம்<br>• (1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்<br>• (1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க)பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) போதையூட்டும் பொருட்களில் தங்கி வாழும் ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்<br>• தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)<br>• (1981ஆம் ஆண்டின் 68ஆம் இலக்க) சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரிச் சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டம்<br>• (2008ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க) அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களை அடக்குதல் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க) கடல்சார் கடற்செலவின் பாதுகாப்புக்கெதிரான சட்டமுறையற்ற செயல்களை அடக்குதல் சட்டம்<br>• (1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) தொல்பொருள் கட்டளைச் சட்டம் |

## 1.1 உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

### 01. கடமைகளும் பணிகளும்

பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் 'பாதுகாப்பான நாட்டை' உருவாக்குவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ விடயத்துடனும் அதற்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவியளித்தல் தேசிய வரவுசெலவு அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நிதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தல் தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.

### 02. அதிவிசேட முன்னுரிமைகள்

1. மாவட்டங்கள் மற்றும் பிரதேசச் செயலகங்களின் ஊடாக நிறைவேற்றப்படும் மக்களை மையமாகக்கொண்ட சேவைகளை வலுப்படுத்துதல்

2. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் இலங்கை பொலிஸ் சேவையின் சேவைத் தரத்தை உயர்த்துதல், அரசு சாராத அமைப்புக்களின் ஏற்பாடுகளை ஒழுங்குறுத்தல், குடிவரவு குடியகல்வு நிர்வாகப் பணிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை பேணுதல்.

3. இயற்கை அனர்த்த ஆபத்துக்களை நேரகாலத்துடன் இனங்காணுதல், அனர்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளுதல், சேதங்களைக் குறைவடையச் செய்தல் மற்றும் சேதங்களுக்கு ஆளானோர்களைப் பலப்படுத்தப்படுவதை செயற்றிறனாக்குவதற்கு அபாய முகாமைத்துவ நிலையங்கள் மற்றும் நிவாரணச் சேவை நிலையங்கள் என்பவற்றைக் கூட்டிணைத்துத் தாபனரீதியான கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்.

4. அனர்த்த நிலைமைகள் பற்றி சீரான முன்மதிப்பீடுகள் செய்யக்கூடியவாறு புதிய தொழில்நுட்பம் மற்றும் அறிவினால் வளிமண்டலவியல் திணைக்களத்தை வலுப்படுத்துதல்.

5. அனர்த்தங்களுக்குப் பாத்திரமான பிரதேசங்கள், தொடர்ந்து அனர்த்தங்களுக்குப் பாத்திரமாகும் ஆபத்துடன் கூடிய பிரதேசங்கள், அனர்த்தங்களுக்கு ஆளான நபர்கள், சொத்துக்கள், வியாபாரங்கள் மற்றும் கமத்தொழில் சார்ந்த காணிகள் முதலிய சகல விபரங்களும் உள்ளடங்கிய 'தேசிய அனர்த்த தரவுகள், களஞ்சியமொன்றைத் தாபித்தல்.

*03.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. சகல மாவட்டச் செயலகங்களும் சகல பிரதேச செயலகங்களும்<br>2. இலங்கை பொலிஸ்<br>3. தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம்<br>4. பதிவாளர் நாயகத் திணைக்களம்<br>5. ஆட்பதிவுத் திணைக்களம்<br>6. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்<br>7. அரச சார்பற்ற அமைப்புகளுக்கான செயலகம்<br>8. அனர்த்த முகாமைத்துவ தேசிய மன்றம்<br>9. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்<br>10. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்<br>11. வளிமண்டலவியல் திணைக்களம்.<br>12. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு | • (1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) அதிகாரமளித்தல் (பிரதேச செயலாளர்கள்) சட்டம்<br>• (1971ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) விடுமுறைகள் சட்டம்<br>• ((1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) பொலிஸ் கட்டளைச் சட்டம்<br>• (2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச் சட்டம்<br>• (1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) மலைநாட்டு விவாக மற்றும் மண நீக்கற் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) முஸ்லிம் விவாக, மண நீக்கற் சட்டம்<br>• (1907 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டம்<br>• (1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம்<br>• (1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) சாதாரண விவாகப் பதிவு கட்டளைச் சட்டம்<br>• (1917 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) நம்பிக்கைபொறுப்புக் கட்டளைச் சட்டம்<br>• (2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) காணிகள் (உடமை வழங்குதல் வரையறைச்) சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) தண்டப்பணம் அதிகரிக்கும் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) இரத்துச்செய்ய முடியாத நன்கொடை உரித்துப்பத்திரங்களை நன்றியின்மை காரணமாக இரத்துச்செய்தல் சட்டம்<br>• 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டம்<br>• (1902 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) அட்டோர்னி தத்துவப் பத்திரம் பதிவுசெய்தலுக்கான கட்டளைச் சட்டம் (122 ஆம் அத்தியாயம்)<br>• (1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க) கொன்சல் காவற் தூதுப் பணிகள் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் இறப்புப் பதிவுசெய்தல் தற்காலிகச் சட்டம்<br>• (2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) இறப்புப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) உரித்துக்கள் பதிவுச்சட்டம்<br>• (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்<br>• (1948 ஆம் ஆண்டில் 20 ஆம் இலக்க) குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்<br>• (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) குடியுரிமைச் சட்டம்<br>• (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இந்திய வம்சாவளி ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம்<br>• (1986 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) உள்நாட்டவரல்லாதோருக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க)உள்நாட்டவரல்லாதோருக்கு பிரசாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொண்டர் சமூகசேவை அமைப்புக்கள் (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டம்<br>• (2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) இலங்கை அனர்த்த முகாமைச் சட்டம் |

*2. நிதி அமைச்சர்*

*01.* **விடய எல்லை**

பேரினப் பொருளாதாரக் கொள்கைகள், வருடாந்த வரவுசெலவு மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டங்கள் தொடர்பான பொறுப்புகள், அரச நிதி முகாமை, உள்நாட்டு வெளிநாட்டு சேமிப்புகள் மற்றும் முதலீடுகள், அரச கடன்கள், வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதி அலுவல்கள், சர்வதேச நிதி ஒத்துழைப்புகள், சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை வழிநடத்துதல்.

*02.* **கடமைகளும் பணிகளும்**

1. 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய மற்றும் அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் பேரில் ''மக்கள் மையமான பொருளாதாரத்தினை'' உருவாக்குவதற்காக இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நிதி விடயத்துக்குரிய கொள்கைளைத் தயாரித்தல் தேசிய வரவுசெலவு அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அரச பொறிமுறை மற்றும் தனியார் துறைகளை ஈடுபடுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஆக்குதலும் நடைமுறைப்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.
2. வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதாரப் புத்தெழுச்சிக்காகச் சனாதிபதி செயலணியின்மூலம் சகல அமைச்சுக்களையும் கூட்டிணைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கான வசதிகளை அளித்தல்.

*03.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. அனைவருக்கும் நலன் கிடைக்கின்றதும் அனைத்து மாகாணங்கள் உள்ளடங்கும் வருமானம் முரண்பாடுகள் தணிக்கப்படுகின்றதுமான நிலைபேறான உயர்மட்ட பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சி வேகத்தை ஏற்படுத்திக்கொள்ளல்.
2. குறைந்த வருமானம் பெறுவோருக்கு முன்னுரிமை வழங்கி தொழிலின்மையைக் குறைத்துக் கொள்ளலும் தனிநபர் வருமானத்தை கூட்டிக் கொள்ளலும்.
3. வருடாந்த சராசரி பணவீக்க வீதத்தை குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதன் மூலம் விலைகளின் நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல்.
4. வரவுசெலவு பற்றாக்குறை மற்றும் அரச கடன்களைக் குறைத்துக்கொள்வதன் மூலம் அரச வருமானக் கொள்கைகளில் நிச்சயமின்மையைக் குறைத்தல்.
5. கடன் வட்டிவீதங்களைக் குறைந்த மட்டத்தில் பேணுதலின் ஊடாக நிதி வள பொருளாதாரத் தேவைகளை விரிவாக்கல்.
6. ரூபாவின் பெறுமதி நிலைப்பாடு உறுதியுறும் வகையில் நிதி மற்றும் கொடுப்பனவு ஐந்தொகைக் கொள்கைகளையும் வட்டி வீதத்தையும் திடமாக்கிக் கொள்ளுதல்.
7. உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தல், குறைந்த வருமானம் பெறுபவர்களை வலுப்படுத்தலும், முதலீட்டு ஊக்குவிப்புக்குத் தேவையான வழிகளை அறிமுகப்படுத்ததல்.
8. பொதுமக்களுக்குப் பயன்கிடைக்குமாறு தேசிய வியாபார சமூகத்துக்குத் தேவையான வர்த்தகச் சூழலை விரிவாக்கல்.
9. அரச தொழில் முயற்சிகளைப் பலப்படுத்துதல்.
10. அரச வருமானங்கள் மற்றும் செலவு முகாமையை வினைத்திறமைப்படுத்துவதற்குத் தேவையான தாபனக் கட்டமைப்பை வலுப்படுத்தல்.

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| *1.* **பொதுத் திறைசேரி நடவடிக்கைகள்**<br><br>1. பொதுத் திறைசேரி<br>2. தேசிய திட்டமிடல் திணைக்களம்<br>3. அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம்<br>4. தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்<br>5. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்<br>6. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்<br>7. அரச நிதி கணக்குகள் திணைக்களம்<br>8. திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம்<br>9. அரச நிதிக் கணக்குகள் திணைக்களம்<br>10. வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்<br>11. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்<br>12. நீதி அலுவல்கள் திணைக்களம்<br>13. முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்<br>14. அபிவிருத்தி நிதித் திணைக்களம்<br>15. கொம்பிரோலர் ஜெனரால் அலுவலகம்<br><br>*2.* **அரச வருமானம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள்**<br><br>1. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்<br>2. இலங்கைச் சுங்கம்<br>3. மதுவரித் திணைக்களம்<br>4. தேசிய லொத்தர் சபை<br>5. அபிவிருத்தி லொத்தர் சபை<br>6. மதிப்பீட்டுத் திணைக்களம்<br>7. ஏற்றுமதி இறக்குமதித் திணைக்களம்<br><br>*3.* **வங்கி நிதிகள் மற்றும் மூலதனச் சந்தைக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை அலுவல்கள்**<br><br>1. இலங்கை மத்திய வங்கி<br>2. சகல அரச வங்கிகள் மற்றும் அவற்றின் நிருவாகத்துக்குட்பட்ட கம்பனிகள் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள்<br>3. இலங்கைக் காப்புறுதிச் சபை<br>4. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் இதன் நிருவாகக் கம்பனிகளும் இணைக்கம்பனிகளும்<br>5. கடன் தகவல் பணியகம்<br>6. கம்பனிப் பதிவாளர் திணைக்களம்<br>7. இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு<br>8. இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு தர மீளாய்வுச் சபை<br>9. இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு<br>10. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | • ஒதுக்கீட்டுச் சட்டங்கள்<br>• (1956 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சுங்கக் கட்டளைச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) வெளிநாட்டுக் கடன் சட்டம்<br>• (2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) பற்றுக்கள் மீதான வரிச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரிச்சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க)பொருளாதார சேவை அறவீட்டுச் சட்டம்<br>• (1891 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) அரச சேவை பரஸ்பர சகாய நிதிச் சங்க கட்டளைச் சட்டம்<br>• 52ஆம் அத்தியாயமான மதுவரிக் கட்டளைச் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க) நிதிக் குத்தகைச் சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டம்<br>• (2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க) நிதி முகாமை (பொறுப்புடைமை) சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) உள்நாட்டு அரசிறைச் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க) காப்புறுதித் தொழில்துறை ஒழுங்கு படுத்துதல் சட்டம்<br>• (!951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) லோகோர் சீமாட்டி நிதியச் சட்டம்<br>• (1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்<br>• (2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) வியாபாரப் பெயர் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) கம்பனிச் சட்டம்<br>• (1964 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வர்த்தக அடையாளச் சட்டம்<br>• (1935 ஆம் ஆண்டின் 61 இலக்க) சீட்டுக் கட்டளைச் சட்டம்<br>• பொது ஒப்பந்தங்கள் சட்டம் (1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க)<br>• பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டம் (2006ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க)<br>• இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் (1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க)<br>• ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டம் (1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க)<br>• (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்** *(தொடர்ச்சி)*

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 4. **புள்ளிவிபரவியல் தகவல்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகள்**<br>1. தொகைமதிப்பு,புள்ளிவிபரவியல் திணைக்களம்<br>2. கொள்கை கற்கைகள் நிறுவனம்<br>3. நிலைபேறான அபிவிருத்தி மன்றம்<br>5. **நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்**<br>1. நலன்புரி பயனுறுதிச் சபை<br>2. அரசாங்க சேவை பரஸ்பர சகாய நிதியச் சங்கம்<br>6. **நிதிய ஒதுக்கீடுகள்**<br>1. லோகோர் சீமாட்டி நிதியம்<br>2. வேலைநிறுத்தங்கள், கலவரம், சிவில் பிரச்சினை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம்<br>3. தேசியக் காப்புறுதி பொறுப்பு நிதியம்<br>4. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்<br>5. சிரம வாசனா நிதியம்<br>6. தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்<br>7. சிறுநீரக நிதியம்<br>8. தேயிலை சக்தி நிதியம்<br>9. கப்புருக நிதியம்<br>10. அரச சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்<br>11. புத்த சாசன நிதியம்<br>12. பௌத்த புத்தெழுச்சி நிதியம்<br>13. வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்<br>14. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்<br>15. புத்தாக்குநர் நிதியம்<br>16. துருசவிய நிதியம்<br>17. மத்திய கலாசார நிலையம் | • (1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) முத்திரை தீர்வைச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) பெறுமதிசேர் வரிச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சேமநல நன்மைகள் சட்டம்<br>• நிதிச் சட்டம் (1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க)<br>• சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டம் (2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க)<br>• (2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவனச் சட்டம்<br>• நிலைபேறு அபிவிருத்திச் சட்டம் (2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)<br>• (1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர் சட்டம்<br>• (1977 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர் சட்டம்<br>• (1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) நிதிசார் நீதிச் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) மக்கள் வங்கிச் சட்டம்<br>• (1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வங்கிச் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) வங்கிகளினால் அளிக்கப்படும் கடன்களை அறவிடும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கையின் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசியக் காப்புறுதி பொறுப்பு நிதியச் சட்டம்<br>• (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்<br>• உற்பத்தி வரிச் சட்டம் (விசேட ஏற்பாடுகள்)<br>• (1937 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) பதிவுசெய்யப்பட்ட பங்குமூல பிணைப்பத்திரங்கள் கட்டளைச் சட்டம் |

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்** *(தொடர்ச்சி)*

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| **7. ஒழித்துக் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்**<br>1. தொலைத்தொடர்புகள் திணைக்களம்<br>2. வனசீவராசிகள் நிதியம்<br>3. இலங்கை வெகுசன ஊடகப் பயிற்சி நிறுவனம்<br>4. உள்ளக வர்த்தகத் திணைக்களம்<br>5. தானியப் பயிர்ச்செய்கை மற்றும் தானியங்கள் ஆராய்ச்சி உற்பத்தி அதிகாரசபை<br>6. மட்டுப்படுத்தப்பட்ட ஜனத்தா பேர்ட்டிலைசர் என்டர்பிரைசஸ்<br>7. வரையறுக்கப்ட்ட ஹிங்குரான சீனிக் கைத்தொழில் கம்பனி<br>8. சிறுவர்களைப் பாதுகாப்போம் தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | • (2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கொடுப்பனவு மற்றும் நடுத்தீர்ப்பு முறைமைச் சட்டம்<br>• (2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க) நிதி வியாபார நிதியச் சட்டம்<br>• (2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்<br>• புள்ளிவிபரக் கட்டளைச் சட்டம் (143 அத்தியாயம்)<br>• (1961 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) தேயிலை சக்தி நிதியச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கப்ருக நிதியச் சட்டம்<br>• மத்திய கலாசார நிதியச் சட்டம் (1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க)<br>• (1916ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க) உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியச் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) துருசவிய நிதியம்<br>• இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம் (1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க)<br>• கட்புலனற்றோர் புனரமைப்பு நிதியச்சட்டம் (1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கம்) |

## *2.1* நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி சீர்திருத்த இராஜாங்க அமைச்சர்

### *01.* கடமைகளும் பணிகளும்

நிதி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் “மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை’ ஏற்படுத்துவதற்காக உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச வியாபார சீர்த்திருத்த விடயத்துக்குரிய கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### *02.* அதிவிசேட முன்னுரிமைகள்

1. சேமிப்பு மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் விதத்தில் வங்கிகள், நிதி நிறுவனங்களை வலுப்படுத்தும் சீர்திருத்தங்களை செயற்படுத்தல்.

2. வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்கள், தொழில்கள் என்பவற்றை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிறுவனச் சீரமைப்பைச் செயற்படுத்துதல்.

3. விவசாயம், நிர்மாணத்துறை, தகவல் தொழில்நுட்பக் கைத்தொழில், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்கள், சுற்றுலா மற்றும் ஏற்றுமதி போன்ற பிரிவுகளை மேம்படுத்துவதற்காகத் தேசிய அபிவிருத்தி நிதி மற்றும் மூலதனச் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை கூட்டிணைத்து விரிவாக்குதல்.

4. அரச பிணைமுறி மூலம் பங்குச் சந்தையை கவரச்செய்தல்.

5. திறைசேரி உண்டியல் மற்றும் பிணைமுறி ஆரம்ப விற்பனைச் சந்தை மறுசீரமைப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்.

6. சர்வதேச தேசிய வர்த்தகப் பிரமுகர்களினது வர்த்தக நிறுவனங்களின் பிரதான அலுவலகங்களை கொழும்பு மற்றும் துறைமுக நகரத்தை அண்டிய பிரதேசத்தில் தாபிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

7. வெளிநாட்டு முதலீட்டாளர்களை இந்நாட்டுக்கு வரவழைத்துக் கொள்வதற்காக தனியார் பிரிவினதும் உதவியோடு சுபீட்சத்தின் நோக்கு புதிய பொருளாதார திட்டத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச பிரசார வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.

8. பாரிய அளவிலான தேசிய முதலீட்டாளர்களுக்கு அதிதொழில்நுட்ப உற்பத்திகளைப் (High Technology products) புதிதாக ஆரம்பிப்பதற்குத் தேவையான சகல வசதிகளை வழங்குதல்.

9. தேசிய வர்த்தகர்களுக்கு போட்டிகரமாக வியாபாரத்துறைகளில் ஈடுபடக் கூடியதாக வெளிநாட்டு முதலீடுகளை ஒழுங்குறுத்தி உள்ளூர் வியாபாரிகளை பாதுகாத்து, வலுவூட்டுவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றைச் செயற்படுத்தல்.

10. அரச தொழில் முயற்சிகள் பொருளாதாரம் மற்றும் சமூகரீதியில் தேசிய பொருளாதாரத்தில் செய்யப்படும் பங்களிப்பை வலுப்படுத்துவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி அவற்றின் நிதிப்பலத்தை அதிகரித்தல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. அரச தொழில் முயற்சித் திணைக்களம்<br>2. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்<br>3. தேசிய நடவடிக்கை முறை<br>4. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்<br>5. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி<br>6. கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு பயன்பாட்டு சொத்துக்கள் உயிர்ப்பித்தல்(அகற்றுதல்) சட்டத்தின்கீழ் திறைசேரிச் செயலாளர் வசமாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் | • இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம் (1975 இல. 13)<br>• கொடுப்பனவு முறைகள் மோசடிகள் சட்டம் (2006 இல. 30)<br>• வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச்சட்டம் (1997 இல. 07)<br>• கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு பயன்பாட்டு சொத்துக்கள் உயிர்ப்பித்தல்(அகற்றுதல்) சட்டத்தின்கீழ் திறைசேரிச் செயலாளர் வசமாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் (2019 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) |

**2.2 சமுர்த்தி, உள்ளகப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

நிதி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் பேரில் "மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை" உருவாக்குவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சமுர்த்தி, வதிவிட பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி விடயத்துடன் தொடர்பான கொள்கைகளை ஆக்குவதற்கு உதவியளித்தல் தேசிய வரவு செலவு அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அப்பணிகளுடனும் தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*02.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. சமூர்த்தி பயனாளிகளை இலக்காக் கொண்ட வதிவிட பொருளாதாரத்தை வலுப்படுத்தல், சமுதாய முயற்சித் திட்டங்கள், நுண்நிதிய நிறுவனங்கள் மற்றும் சேவை வசதிகளை வலுப்படுத்தல் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களை விரிவாக்குதல்.

2. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன்மூலம் தேசிய உற்பத்தியை விரிவுபடுத்துதல்.

3. புதிய தொழில்துறையினருக்குத் தேவையான நீண்டகால வரி அடிப்படையில் வழங்கப்படும் காணிகள், கடன்வசதிகள், தொழில்துறை தொடர்பான ஆலோசனைகள், தொழில்நுட்ப மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை இலகுவாகப் பெற்றுக்கொடுக்கும் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

4. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்துறைகளுக்கு நிறுவனமொன்றின்மூலம் சகல சேவைகளையும் வழங்கும் வழிமுறையொன்றைத் தயாரித்தல் மற்றும் அத்துறைகளில் பெறுமதியை அதிகரிக்கும் கைத்தொழில்களை தொடங்குவதற்காக முன்னுரிமை வழங்கி வேண்டிய ஊக்குகையை வழங்குதல்.

5. வலது குறைந்தவர்களை பொருளாதார மற்றும் சமூகரீதியில் வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.

*03.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்<br>2. சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்<br>3. பிரதேச அபிவிருத்தி வங்கி<br>4. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி மூலதனக் கம்பனி<br>5. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் அதிகாரசபை<br>6. கிராம சக்தி செயலகம்<br>7. தேசிய சமூக அபிவிருத்திச் சங்கம்<br>8. கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்<br>9. சமூகப் பாதுகாப்புச் சபை<br>10. வலது குறைந்தோருக்கான தேசிய பணியகம்<br>11. வலது குறைந்தோருக்கான தேசிய பொதுச்செயலகம் | • நுண்நிதியச் சட்டம் (2016 இல. 16)<br>• பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம் (2008 இல. 41)<br>• திவிநெகும சட்டம் (2013 இல. 01)<br>• தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகச் சட்டம் (1992 இல. 41)<br>• சமூகப் பாதுகாப்புச் சட்டம் (1996 இல. 17)<br>• வலதுகுறைந்தோர் சிறப்புரிமைகள் பாதுகாப்புச் சட்டம்<br>• (1996 இல. 28) |

3. **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்**

*01.* **விடய எல்லை**

*அரசியலமைப்பின் புத்தசமயத்திற்கு உரித்துடைய முன்னுரிமைக்குள் புத்தசாசனத்தைக் கட்டிக் காத்து போஷித்து ஏனைய சமயங்களுக்கு அளிக்கப்படும் சிறப்புரிமைகளை பாதுகாத்தலும் புத்தசாசனத்தின் நீண்டகால உறுதியை முன்னிட்டு செயற்படுதலும், இலங்கை அபிமானம் மற்றும் தனித்துவத்தை தாபித்துக் கொண்டு வரலாறு, தொல்பொருளியல், இலக்கியம், கலை முதலிய கலாசார அம்சங்களை பாதுகாத்தலும், உயர் நல்ரசனைக்காக அப்பிரிவுகளை ஆக்கபூர்வமாக உயர்வதை உறுதிப்படுத்துதலும்.*

02. **கடமைகளும் பணிகளும்**

1. 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்திற்கமையவும் மற்றும் அரசினால் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வேறு தேசிய கொள்கைகளின் பெயரிலும் புத்தசாசனத்தின் முன்னுரிமையை கட்டிக்காத்து "அனைத்து சமயங்களதும் சிறப்புரிமைகளை பாதுகாத்தல்" மற்றும் கலாசார கலை ஆக்கங்களை எதிர்கால சந்ததிகளுக்கு உரிமையாக்கிக் கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் எனும் விடயத்திற்குரிய கொள்கைகளை தயாரிப்பதற்கு உதவி புரிதல், தேசிய வரவுசெலவு, அரசாங்க முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் , நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்தல், தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.

2. அனைத்து மதங்களுக்கும் அளிக்கப்படும் சிறப்புரிமைகளை பாதுகாத்துக் கொடுத்தலும் மத அடிப்படை வாதத்திற்கெதிராக நடவடிக்கை எடுத்தலும்.

3. ஒவ்வொரு பிரசையும் பயம் அச்சமின்றி தனது மதத்தை வழிபடுவதற்கான உரித்தை உறுதிப்படுத்தல்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக "சசுன் உதாவ" தேசிய வேலைத்திட்டத்தை செயற்படுத்தல்.

2. தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்காக தேவையான சட்டங்கள் ஒழுங்கு விதிகளை தகுந்தவாறு திருத்துதல்.

3. மத்திய கலாசார நிதியம் தொடர்பாக முழுமையான கற்றாராய்வொன்றைச் செய்து அதனை முழுமையாக மீளமைப்பதற்கு தேவையான கொள்கை ரீதியிலான அடிப்படையை வகுத்தல்.

4. சனாதிபதி செயலணியுடன் இணைந்து தொல்பொருளியல் உரிமைகளை முகாமை செய்வதற்குத் தேவையான கொள்கைகளையும் சட்டரீதியிலான பின்னணியையும் தயாரித்தல்.

5. அனைத்து மதங்களுக்குரியதாக டிஜிட்டல் தொல்பொருளியல் கலைக்களஞ்சியமொன்றை ஆக்குதல்.

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. பௌத்த அலுவல்கள் திணைக்களம்<br>2. இந்து மத, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்<br>3. கிறித்தவ மத அலுவல்கள் திணைக்களம்<br>4. முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்<br>5. கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>6. தேசிய நூதனசாலைத் திணைக்களம்<br>7. பகிரங்க அரங்காட்டுகைச் சபை<br>8. தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம்<br>9. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்<br>10. எஸ்.டப்.ஆர்.டி.பண்டாரநாயக்க ஞாபகார்த்த மன்றம்<br>11. ஜேஆர். ஜயவர்த்தன கேந்திர நிலையம் | • (1990ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) புத்த சாசன நிதியச் சட்டம்<br>• (1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம்<br>• (1985ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க)இந்து பண்பாட்டு நிதியச் சட்டம்<br>• (1956ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க) பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்பு சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) எஸ்.டப்.ஆர்.டி. பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மன்றச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க) கலாசார சொத்துக்கள் சட்டம்<br>• இலங்கை கலைச்சபை சட்டம்(1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க)<br>• (!973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க)தேசிய சுவடிக்காப்புச் சட்டம்<br>• (1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க) மத்திய கலாசார நிதியச் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க)அரச திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம் |

## 3.1 தேசிய மரபுரிமைகள் அருங்கலை மற்றும் கிராமியக் கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

### 01. கடமைகளும் பணிகளும்

1. புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல், கலாசாரம், இலக்கியம் மற்றும் கலை என்பவற்றை உயர்ந்த தரத்தில் பேணுவதற்காக உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமியச் சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் எனும் விடயம் தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களை செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### 02. *விசேட முன்னுரிமைகள்*

1. தேசிய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் மற்றும் சட்டமூலங்களைப் பலப்படுத்தி அதற்கான நிறுவனங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

2. அச்சுநூல்கள், நாடகங்கள், திரைப்படங்கள், ஓவியங்கள், சிலைகள், இசை, நடனங்கள் அகிய துறைகளை மேம்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

3. தேசியத்துவத்தை முன்னுரிமையாகக்கொண்ட நூலாசிரியர்களின் பதிப்புரிமைகளுக்குச் செலுத்தல்களைச் செய்வதற்காகச் சர்வதேச சமவாயங்களுக்கமைய உரிய பொறிமுறையொன்றை ஏற்படுத்துதல்.

4. சகலவசதிகளையும்கொண்ட நாடக மத்தியநிலையமொன்றை ஏற்படுத்தலும் கலைஞர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்தலுக்காக வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கான தாபனரீதியிலான கட்டமைப்பொன்றை உருவாக்குதல்.

5. கலைப்படைப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் காட்சிப்படுத்தலுக்கான விசேட வசதிகளை வழங்குதல்.

6. பாரம்பரிய மற்றும் நவீன நடனக்கலைஞர்களின் அருங்கலைகளைக் காட்சிப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஓவியக் கலைஞர்கள் மற்றும் சிலை வடிவமைப்பாளர்கள் ஆகியோரின் படைப்புகளை விற்பனை செய்வதற்காக சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் மனங்களைக் கவரும்வகையில் அதற்கான இடவசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

### 03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. டவர்ஹோல் மண்டப தியேட்டர் மன்றம்<br>2. தேசிய கலை மன்றம்<br>3. கிராமோதய ஜனகலா கேந்திரய<br>4. காலி மரபுரிமை மன்றம்<br>5. மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி-சினிமா பூங்கா<br>6. தேசிய நுண்கலைகள் நிலையம் (நெலும் பொக்குண) | • (1978ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க) டவர் மண்டப அரங்கு நிதியச் சட்டம்<br>• சீகிரிய மரபுரிமை மன்றச் சட்டம் (1998 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க)<br>• காலி மரபுரிமைகள் மன்றச் சட்டம் (1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) காலி உரிமை மன்றம் |

## 4. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

### 01. விடய எல்லை

பௌதீகத் திறந்தவெளியின் புதிய அணுகுமுறையூடாகப் புதியதோர் பொருளாதாரக் கேந்திர நிலையமொன்றைப்போன்று சொகுசுடன்கூடிய சுத்தமான நகரங்களை உருவாக்குதல் மற்றும் மக்களுக்குத் தேவையான வீடமைப்பு மற்றும் நகர வசதிகளை வழங்குதல்.

### 02. கடமைகளும் பணிகளும்

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசாங்கத்தினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் “புதிய நகரங்கள் மற்றும் அனைவருக்கும் வீடுகள்” என்பதை ஏற்படுத்துவதற்காக தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்குக் கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு விடயத்துக்குரிய கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவு செலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### 03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. நகர அபிவிருத்தியை மையமாகக் கொண்ட பலவித ஆற்றல்களுடனான தொழில்கள், வியாபாரங்கள் மற்றும் வருமான வழிகளை விரிவாக்குதல்
2. தேசிய நிர்மாணப் பணியாளர்களுக்கு நிர்மாணத்துறை முன்னுரிமை வழங்குதல்
3. கட்டிடப் பொருட்கள் கைத்தொழிலை முன்னேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்
4. தொழிலாளர் ஊழியர் குறைவுக்காக இயன்றளவு தொழில்நுட்ப தீர்வுகளுக்கு செல்லுவதற்குத் தேவையான ஊக்குவித்தலை வழங்குதல்
5. பயிற்சி பெற்ற தொழிலாளர்களை உருவாக்குவதற்கு நிர்மாணத் துறையினுள் ஆற்றலை மேம்படுத்துவதற்கு தொழில்கல்வியை விற்பனை சந்தையின் தேவைக்கமைய இணைப்பாக்கம் செய்தல்
6. நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான ஆலோசனைகளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக தேசிய தொழில் பொறியியலாளர் மற்றும் உயர் தொழில்நுட்பவியலாளரின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நிர்மாணத்துறையின் தேசிய அடையாளத்தை சர்வதேச மட்டத்தின் உரிமமாக்குவதற்கு உரியவாறு தேவையான நிர்மாணத் திட்டங்களை தயாரித்துக் கொள்வதற்கு கட்டிட நிர்மாணக் கலைஞர்களின் நிறுவனம் பொறியியலாளர் நிறுவனம், பல்கலைக்கழக மற்றும் வேறு நிறுவனங்களோடு இலகுவாக செயற்படுவதற்கு இணைப்பாக்க கட்டமைப்பொன்றை அறிமுகம் செய்தல்
7. உப ஒப்பந்தக்காரர்களுக்கு பாதுகாப்பு ஏற்படும் விதத்திலான சட்டதிட்டங்களை அங்கீகரிக்கச் செய்து தேசிய சிறிய மற்றும் நடுத்தர உப ஒப்பந்தக்காரர்களுக்கு பாதுகாப்பளித்தல்

### 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசியப் பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்<br>2. ஹோடெல் டிவலர்ஸ் லங்கா (தனியார் கம்பனி) PQ 143 | • (1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) நகர, கிராம நிர்மாணக் கட்டளைச் சட்டம் |

**4.1 நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேட்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "புதிய நகரங்கள் மற்றும் தூய்மை மிக்க நாடு" என்பதை உருவாக்குவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் விடயத்துக்குரிய கொள்கைகளை வகுப்பதற்கு உதவி செய்தல் தேசிய வரவுசெலவு அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அது தொடர்பான கொள்கைகள் வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்

**02. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. குடிசைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுநர்களுக்காக சகல வசதிகளுடனான வீடமைப்பு திட்டங்களை விருத்தி செய்து நகர ஊழிய செயலணியை சமூக ரீதியாக வலுவூட்டுதல்
2. கொழும்பு மற்றும் நகரங்களை அண்டிய பிரதேசங்களில் நடுத்தர வருமானம் பெறுநர்களுக்காக நவீன வசதிகளுடனான வீட்டுத் திட்டங்களுக்கான நீண்டகால கடன் வசதிகளை வழங்குவதை ஒருங்கிணைத்தல்
3. வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல், நகர வாகன தரிப்பிடங்கள், கடைத் தொகுதிகள், உடற்பயிற்சி, பொழுதுபோக்கு வசதிகளை வழங்குதல்
4. பழைய தொடர் மாடி வீடுகளை புதிய தொடர் மாடிவீடுகளாக புனரமைத்தல்
5. நகரபுற குடிசைவாசிகளுக்காக நகர வீட்டுத் திட்டங்களின் மூலம் நவீன வீடுகளை வழங்குதல் மற்றும் சமூக வசதிகளை வழங்குதல்
6. நடுத்தர வகுப்பினரின் வீட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு புதிய வீட்டு கருத்திட்டங்கள் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல்
7. வாடகை அடிப்படையில் தற்காலிக இருப்பிடங்களை எதிர்பார்ப்போருக்கு நியாயமான வாடகை அடிப்படையில் தொடர்மாடி வீட்டுத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்
8. வீடமைப்பு நிறுவனங்களுக்கு நிவாரண விலையின் கீழ் காணிகளை வழங்குவதன் மூலம் புதிய வீட்டு கருத்திட்டங்களுக்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்
9. நகர வன பூங்காக்கள், நகர மற்றும் பகுதி நகர பூங்காக்கள், நீர் பூங்காக்கள் மற்றும் பாதைகள் இருபுறம் பசுமை நடைபாதைகளை அறிமுகம் செய்தல்
10. நகர கழிவுப் பொருட்கள் மற்றும் மலசலகூட கழிவு பொருட்களை முகாமை செய்வதற்காக செயற்றிறனான கட்டமைப்பொன்றை அறிமுகம் செய்தல் மற்றும் நீர் மீள் சுழற்சிக்காக முறையொன்றை தாபித்தல்
11. சமுத்திரத்தை அண்டிய சூழல் மாசடைதலை தடுப்பதற்காக உரிய செயற்பாட்டுத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்
12. சமுத்திர அரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
13. திண்மக் கழிவுகளை போடுவதனால் கடற்கரைக்கு மற்றும் கடற்படுக்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை தடுப்பதற்கு சமுத்திர சுத்தப்படுத்தல் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துதல்
14. உள்ளூராட்சி நிறுவனங்கள் பலவற்றை ஒன்றிணையுமாறு கழிவுகளை அப்புறப்படுத்தும் இடங்கள் மற்றும் துப்பரவேற்பாட்டு கழிவு அகற்றும் தொட்டிகளை நிறுவி முறையற்ற கழிவு அகற்றுதல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
15. வைத்தியசாலைகள் மற்றும் கைத்தொழிற்சாலைகளின் கழிவுகளை தொழில்நுட்ப மற்றும் இலத்திரனியல் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு ஏற்றவாறு சட்டங்கள் மற்றும் திறமுறைகளைத் தயாரித்தல்.
16. பொறுப்பற்ற கழிவுகற்றலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
17. சகல நகர நிர்மாணங்களையும் நகர அபிவிருத்தி திட்டங்களுக்கமைய செய்வதை ஒழுங்குறுத்துவதற்கு தேவையான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்
18. சகல நகர நிர்மாணங்களின் போது வாகனத் தரிப்பிடங்களை அமைப்பது மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்காக நுழைவு வசதிகளை ஏற்படுத்துதல் என்பவற்றைக் கருத்திட்டத்தின் பிரதான அங்கமாக கருதுதல்

*03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்*

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>2. இலங்கை காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள்<br>3. நகர குடியிருப்பு அதிகார சபை<br>4. கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபை (பொதுவசதிகள் சபை)<br>5. சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை<br>6. கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்<br>7. செலந்திவ இன்வெஸ்ட்மன்ட் லிமிட்டெட் | • நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் ( 1978 இல. 41)<br>• நகர அபிவிருத்தி கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள் சட்டம்) (1980 இல. 2)<br>• இலங்கை காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபன சட்டம் ( 1968 இல. 15)<br>• நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் (2008 இல. 36)<br>• 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறு சொத்தாண்மைச் சட்டம்<br>• இருப்பிடக் கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள் சட்டம்)(2018 இல. 23)<br>• இருப்பிடக் கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள் சட்டம்) (1999 இல. 4)<br>• பொதுவாழ்வசதிகள் சபைச் சட்டம் (1973 இல. 10)<br>• சமுத்திர மாசடைவு தடுப்புச் சட்டம் (2008 இல. 35)<br>• கரையோர பாதுகாப்புச் சட்டம் ( 1981 இல. 57) |

**4.2 கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "அனைவருக்கும் வீடுகள் மற்றும் நிலைபேறான கட்டுமானங்கள்" என்பதற்காக குறித்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட் கைத்தொழில் விடயத்திற்குரிய கொள்கைகளை வகுப்பதற்கு உதவுதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்துதலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதனுடான கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதலும், தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

**02. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. இடம்பெயர்ந்தோருக்கு கிராமிய வீடமைப்பு வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்

2. நிர்மாணக் கைத்தொழிலுக்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் போது தேவையற்ற தாமதங்களைத் தவிர்ப்பதற்காக ஒரு இடத்தின் மூலமோ அல்லது இணையதளத்தின் மூலம் சகல அனுமதிகளை பெற்றுக் கொள்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துதல்

3. நிர்மாணக் கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக தற்போது நடைமுறையிலுள்ள அனுமதிப் பத்திரம் வழங்கும் முறையை இலகுவாக்குதல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>2. வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்<br>3. கட்டிடத் திணைக்களம்<br>4. அரசாங்க தொழிற்சாலைத் திணக்களம்<br>5. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை<br>6. அரச பொறியியல் கூட்டுத்தாபனம்<br>7. அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்<br>8. தேசிய உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் அமைப்பாண்மை<br>9. ஓஷன் வியுவ் டிவெலப்மென்ட் (பிரைவேட் லிமிட்டட்) | • தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க)<br>• கட்டிடக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் (2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) |

## 4.3 தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

01. **கடமைகளும் பணிகளும்**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் “வசதிகள் நிறைந்த கிராமம் மற்றும் சுபீட்சம்மிக்க தோட்டச் சமுதாயம்” ஒன்றை உருவாக்குவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை வகுத்தமைத்தலுக்கு உதவுதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்துதலும் மற்றும் கீழ்க்காணும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் அதற்குரிய கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. பெருந்தோட்ட சமுதாய சார்ந்த சமுதாய தலைமைத்துவம் மற்றும் தலைமைத்துவ பங்களிப்பு தலைமை தாங்கும் “ஜனமூல மண்டல மற்றும் ஜனமூல மத்தியஸ்த்தான” தாபித்தல்.
2. பெருந்தோட்ட சமுதாயம் சார்ந்ததாக வீடுகள் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்
3. பெருந்தோட்டங்களைச் சார்ந்ததாக குறைந்த மாடிகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டங்களை தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்புடன் அறிமுகப்படுத்துதலும் இவ்வீடமைப்புத் திட்டத்தினுள் முழுமையான சுகாதார நிலையங்கள் முன்பள்ளிகள் சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளையும் தாபித்தல்.
4. பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளுக்காக ஆரம்பக்கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. பெருந்தோட்ட வலயங்களுக்கான புதிய கிராமங்கள் அதிகாரசபை<br>2. பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு<br>3. சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்<br>4. தோட்டத்துறையின் சுயதொழில் சுழற்சி நிதியம் | • (2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) பெருந்தோட்ட வலயங்களுக்கான புதிய கிராம அதிகாரசபைச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றச் சட்டம் |

5. *நீதி அமைச்சர்*

*01.* **விடய எல்லை**

*மக்களின் இறைமை சக்திக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுத்தப்படும் அரசியலமைப்பின் மறுசீரமைப்பு பணிகள் மற்றும் சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாத்து சட்டத்தின் முன் அணுகுகின்ற மற்றும் சட்டத்தின் பாதுகாப்பை சகலருக்கும் சர்வ நியாயமான முறையில் செயற்படுத்துவதற்காக சட்டரீதியான பின்புலத்தை தயாரித்தல் மற்றும் பௌதீக வசதிகளை ஏற்படுத்துதலும்*

*02.* **கடமைகளும் பணிகளும்**

1. ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக அரசாங்கத்தினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் தேசியக் கொள்கையின் அடிப்படையில் அரசியலமைப்பில் செய்துள்ள சிக்கல் தன்மைகளை திருத்தம் செய்து மக்களின் இறைமையை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் ''சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கு'' உரிய அரச அமைச்சுக்களுக்காக கொள்கை ரீதியான வழிகாட்டலை செய்தல் மற்றும் உரிய நீதி மற்றும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நீதி விடயத்திற்கான கொள்கைகளை வகுத்தமைத்தல், தேசிய வரவுசெலவு அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கை வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும், செயற்படுத்துதலும், தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

*03.* **விசேட முன்னுரிமைகள்**

1. அரசியலமைப்பின் சிக்கல்களை அகற்றி மக்களின் இறைமை, தேசிய பாதுகாப்பு, சகல தரப்பினரும் உள்ளடங்கும் பொருளாதார அபிவிருத்தி, மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆதிக்கம் மற்றும் நாட்டின் இறைமையை பாதுகாக்கும் வகையில் அரசியலமைப்பை சீர்திருத்தம் செய்தல்.

2. நாட்டின் சட்டம், சர்வதேச சட்டத்தோடு தேசிய அடையாளம் மற்றும் இறைமையை பாதுகாக்கும் வகையில் தேவையான சீர்திருத்தங்களை செய்தல்

3. காலாவதியான சட்டம், செயல்நெறிகள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் சீர்திருத்தம் செய்வதற்காக சகல நிறுவனங்களை ஒன்றிணைக்கும் வேலைத் திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்

4. நீதித் துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி மற்றும் நீதிக் கட்டமைப்பின் தாமதங்களை தடுப்பதற்காக நவீன தொழில்நுட்ப தேவைப்பாட்டையும் பயன்படுத்தி பொருத்தமான திறமுறையொன்றை தயாரித்தல்.

5. சிவில் முரண்பாடுகள், நீதிமன்றம் வரை செல்லாமல் தீர்ப்பதற்கு மத்தியஸ்த சபை செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துதல்

6. சட்டத்தை செயற்படுத்தும் முறை மற்றும் கட்டமைப்பு தொடர்பாக உரிய நபர்களுக்குத் தேவையான நவீன அறிவு மற்றும் தொழில்நுட்ப பயிற்சியினை வழங்குதல்

7. நீதிக் கட்டமைப்பு மற்றும் நிறுவனங்கள் இடையே இணைப்பாக்கத்தை மேம்படுத்துவதற்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களோடு இணைப்பாக்கம் செய்தல்.

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. சட்டமா அதிபர் திணைக்களம்<br>2. சட்ட வரைஞர் திணைக்களம்<br>3. கடன் நிவாரண சபைத் திணைக்களம்<br>4. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்<br>5. உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்<br>6. இலங்கைச் சட்ட ஆணைக்குழு<br>7. உயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை<br>8. இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு<br>9. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு<br>10. சட்டக் கல்விச் சபை<br>11. நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்<br>12. இலங்கை வாணிப மத்தியஸ்த நிலையம்<br>13. ஸ்ரீ லங்கா இன்டர்நஷனல் ஆர்பிடேஷன் சென்ரர் (கரன்டி) லிமிட்டெட்<br>14. தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம்<br>15. காணாமல்போனோர் ஆட்கள் பற்றிய அலுவலகம்<br>16. இழப்பீட்டு அலுவலகம்<br>17. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை | • (1987ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க) உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமை சபைச் சட்டம்<br>• (2001ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) சர்வதேச சிறுவர் கடத்தலின் குடியியல் துறைகளுக்குரிய சமவாயச் சட்டம்<br>• (1974 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) சட்ட கல்விச் சபைச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) கடன் நிவாரண சபைக் கட்டளைச்சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்களை வலுப்படுத்தல் கட்டளைச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் (பண்டங்களை அகற்றுதல்) சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) மாகாண மேல்நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1978ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) கூட்டுத்தாபன வழக்குரைஞர் நிறுவகச் சட்டம்<br>• (1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) நீதித்துறை ஏற்பாட்டுச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) நீதிமன்ற மொழிச் சட்டம்<br>• இலங்கை நீதியரசர்களின் நிறுவகம் சட்டம் (1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கம்)<br>• (1969ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) சட்ட ஆணைக்குழுச் சட்டம்<br>• (1978ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) சட்ட உதவிச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கடன் சலுகை கட்டளைச் சட்டம்<br>• (1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க) மத்தியஸ்த சபைகள் சட்டம்<br>• (1840 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) மோசடி தவிர்த்தல் கட்டளைச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) சமூக இயலாமை தவிர்த்தல் சட்டம்<br>• (1979ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) ஆரம்ப நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டம்<br>• (1969 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) அரசாங்க (சிவில் குற்றங்களுக்கான பொறுப்புக்கள்) சட்டம்<br>• (1926 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) குற்றவியல் தவிர்த்தல் கட்டளைச் சட்டம்<br>• குவாசி நீதிமன்ற (நியமனங்களைச் செல்லுபடியாக்கல்) சட்டம்<br>• (1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம்<br>• (2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) குற்றமொன்றில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவியளித்தல் மற்றும் பாதுகாத்தல் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) இலங்கை வாணிப மத்தியஸ்த நிலையச் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டம்<br>• (2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) இழப்பீட்டுக்கான அலுவலகச் சட்டம் |

**5.1 சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

நீதி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் சட்டத்தின் ஆதிக்கத்தை பாதுகாப்பதற்காக உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு விடயங்களுக்கு உரிய கொள்கைகளை வகுத்தமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்துதலும் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

**02. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. சனாதிபதி செயலணியுடன் இணைந்து சிறைச்சாலைகளில் இடம்பெறும் சமூகவிரோத செயற்பாடுகளை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தல்
2. சனாதிதி செயலணியுடன் இணைந்து சிறைச்சாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
3. சிறைச்சாலைகளில் குற்றவாளிகளை கண்காணிப்பதற்காக நவீன தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தல்
4. சிறைச்சாலைகளில் நெரிசல்களை குறைப்பதற்காக பொதுமன்னிப்பு வழங்கும் கொள்கை செயற்பாட்டுக்கு மேலதிகமாக மீளாய்வு செயற்பாடொன்றின் ஊடாக விசேட மன்னிப்பு வழங்கும் செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்
5. சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான விரிவான முறையொன்றைத் தாபித்தல்
6. சிறைச்சாலை திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்

**03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. சிறைச்சாலைகள் திணைக்களம்<br>2. சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்<br>3. இளந் தவறாளிகள் சீர்த்திருத்த பயிற்சிப் பாடசாலை<br>4. புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகம் | • (1877ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) சட்டம்<br>• சமுதாயம்சார் சீர்திருத்தச் சட்டம் (1999 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) |

**6. வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்**

**01. விடய எல்லை**

நட்புறவுடையதும் அணிசேராததுமான வெளிநாட்டுக் கொள்கையின்பேரில் இலங்கையின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரரீதியிலான இடப்பரப்புக்குள் (இருதரப்பு மற்றும் பல்தரப்புகளைக்கொண்ட உறவுகளின் ஊடாக) இலங்கையை சர்வதேசத்தினுள் உயர்த்திவைத்தல்.

**02. கடமைகளும் பணிகளும்**

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக அரசாங்கத்தினால் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் ஏனைய தேசிய கொள்கைகளின் கீழ் ‘நட்புறவுடையதும் அணிசேராததுமான கொள்கையொன்றை’ ஏற்படுத்துவதற்காக தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வெளிநாட்டு அலுவல்கள் எனும் விடயத்துடனும் உரிய கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவுசெலவு அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*03.* **விசேட முன்னுரிமைகள்**

1. நாட்டின் சுயாதீனத்தைப் பாதுகாத்து அந்நிய நாடுகளுடன் சமநட்பைப் பேணுதல்.

2. இதுவரை ஏற்படுத்திக்கொண்டுள்ள இருதரப்பு உடன்படிக்கைகளை மீண்டும் மீளாய்வு செய்து நாட்டுக்கு ஒவ்வாத உடன்படிக்கை தொடர்பாக மீண்டும் ஆராய்தல் மற்றும் உடன்படிக்கைகளுக்கு உட்படும்போது தேசிய பொருளாதாரத்துக்கு இடையூறில்லாத பின்புலத்தைத் தயாரித்தல்.

3. வெளிநாட்டுத் தூதுக்குழுக்களைத் தேர்ந்தெடுக்கும்போது வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு அமையுமாறு சனாதிபதி அவர்களின் நியதிச்சட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் பங்களிக்கக்கூடிய அளவுகோள்களுக்கு அமையும் வண்ணம் செயற்படுதலும் தூதுக்குழுக்களின் மூலம் எதிர்பார்க்கும் குறிக்கோள்கள் நிறைவேற்றுதல் தொடர்பாகத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல்.

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. வெளிநாடுகளிலுள்ள தூதராண்மைக் குழுக்கள்<br>2. தேசியக் கடல்சார் நடவடிக்கைச் செயற்குழுச் செயலகம்<br>3. வர்த்தகத் திணைக்களம் | • (1981ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க) கொன்சல் காவற்தூதுப் பணிகள் சட்டம்<br>• (1996ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) இராசதந்திர சிறப்புரிமைகள் சட்டம் |

**6.1 பிராந்திய உறவு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

*01.* **கடமைகளும் பணிகளும்**

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் “நட்புறவுடையதும் அணிசேராததுமான கொள்கையொன்றை’ ஏற்படுத்துவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய பிராந்திய உறவு நடவடிக்கைகள் எனும் விடயங்களுக்குரிய கொள்கைகளை வகுத்தமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்துதலும் பின்வரும் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள் வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*02.* **விசேட முன்னுரிமைகள்**

1. ஆசிய நாடுகளுடன் வலுவான முறையில் பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை விஸ்தரித்துக் கொள்ளல்.

2. சார்க் மற்றும் பிம்ஸ்டெக் நாடுகளுடனான நெருங்கிய உறவுகளை வலுப்படுத்தல்.

3. மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு நாடுகளுடன் வர்த்தக, சுற்றுலா, முதலீட்டு மற்றும் தொழில் சந்தை உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

4. உள்நாட்டு தொழிலாளர்கள், சம்பிரதாய கலாசார ஆக்கங்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்திகளுக்காக வெளிநாட்டு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளல்.

5. இலங்கை வியாபாரிகளுக்கு வெளிநாடுகளிலுள்ள பண்டங்கள் மற்றும் சேவை சந்தைகளுக்காக உள்ள பல்வேறு தடைகளை நீக்குவதற்கு நேரடி பங்களிப்பை வழங்குவது போன்று இலங்கையின் முதலீடுகள் மற்றும் சுற்றுலா மேம்பாடுகளுக்காக அந்நாடுகளை பங்குபெறச் செய்தல்.-

03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் திறமுறை கற்கை நிறுவனம் | • (2000 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) உபாயமுறைகளைக் கற்றாராய்தல் தொடர்பான இலங்கை நிறுவனச் சட்டம் |

7. **அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்**

01. **விடய எல்லை**

அனைத்து அரச சேவைகளில் ஒட்டுமொத்த இயலளவு விருத்தியினை மேற்கொண்டு நவீன தகவல் தொழில்நுட்ப மூலோபாயங்களினூடாக செயற்பாடுகள் இருவகைப்படுவதைத் தவிர்த்து சேவைபெறுவோருக்கு உயர்ந்தமட்டச் சேவையினை வழங்குதலும் மாகாண மற்றும் பிரதேச ரீதியில் இருக்கும் சமமின்மைகளைக் குறைத்து மக்களுக்கு உயர்மட்டச் சேவைகளை வழங்குதல்.

02. **கடமைகளும் பணிகளும்**

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக "நாட்டுக்காகச் சேவையாற்றும் கலாசார மொன்றை" ஏற்படுத்துவதற்காக தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.
2. இலங்கை நிருவாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கை தொழில்நுட்பச் சேவை என்பவற்றுடன் சேர்ந்த இணைந்த சேவைகளின் தாபன, நிருவாக மற்றும் ஆளணி முகாமைக் கடமைகள்.
3. பாராளுமன்றம் தொடர்பாக மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் விவகாரங்கள் தொடர்பாக அரசினால் ஆற்றவேண்டிய கடமைகள்

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. அரச சேவையைத் துரிதப்படுத்துவதற்காக ஏற்கனவே அரசதுறையிலுள்ள சகல சுற்றறிக்கை ஏற்பாடுகள், சட்டங்கள், பிரமாணங்கள் என்பவற்றை மீளாய்வு செய்து அவற்றை இலகுபடுத்தல்.
2. மக்களைக் கேந்திரமாகக்கொண்ட அரச சேவையை வழங்குவதற்காக அரச உத்தியோகத்தர்கள் என்ற சிந்தனையிலிருந்து மக்கள் சேவை சிந்தனையை நோக்கி அரசசேவையை வழிநடத்துவதற்குத் தேவையான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் தாபனக் கட்டமைப்புகளைத் தயாரித்தல்.
3. சுயாதீனமான அரச சேவையொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான சேவைகள் மற்றும் ஒழுக்க கோவையொன்றை அறிமுகப்படுத்துதல்.
4. அரச, பகுதி அரச, கூட்டுத்தாபனங்கள் மற்றும் வங்கிச் சேவையின் சகல நிறுவனங்களில் நேர்மையாகக் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு உரிமைகள் கிடைக்குமாறு உரிய சட்டங்களைத் தயாரித்தல்.
5. விதவைகள், அநாதை சிறார்களுக்கு, ஓய்வூதியக்காரர்களுக்குத் தாமதமில்லாமல் ஓய்வூதியம் வழங்குதல்
6. கூட்டுத்தாபனங்கள், அரை அரச, வங்கி மற்றும் தனியார் துறைகளுக்காக ஊழியர் சேமலாப நிதியத்துக்கு மேலதிகமாக பங்களிப்பு ஓய்வூதிய சம்பளத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்.
7. சேவைகள் தொடர்பான மீளாய்வுகளை மேற்கொண்டு புதிய சேவைப் பிரமாணக்குறிப்புகளை அறிமுகப்படுத்துதலும் இற்றைப்படுத்துதலும்.
8. அரச துறையில் ஊழியர் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான செயற்பாட்டினை அறிமுகப்படுத்துதல்.
9. அரச சேவையில் உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக தொழில் அபிவிருத்தி உள்ளடங்கலாக நீண்டகால மனிதவளத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. ஓய்வூதியத் திணைக்களம்<br><br>2. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்<br><br>3. டிஸ்டன்ஸ் லேர்னிங் சென்டர் லிமிட்டெட்<br><br>4. அரசகரும மொழிகள் திணைக்களம்<br><br>5. அரசகரும மொழிகள் ஆணைக்குழு<br><br>6. மனிதவள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை<br><br>7. மொழிக்கல்விப் பயிற்சிகள் தொடர்பான தேசிய நிறுவனம் | • (1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டம்<br>• (1898 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) விதவைகள், அநாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க) விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைகள் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம்<br>• (1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைகள் (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) அரசசேவையின் ஓய்வூதியம் பெறுவோர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்<br>• (1942 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) பகிரங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டம்<br>• (1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) உள்ளூராட்சிச் சேவைகள் ஓய்வூதியம் நிதியம்<br>• (1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) உள்ளூராட்சி விதவைகள் மற்றும் அநாதைச்சிறார் ஓய்வூதிய நிதியம்<br>• (1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) உள்ளூராட்சி தபுதாரர்கள் மற்றும் அநாதைச்சிறார் ஓய்வூதிய நிதியம்<br>• ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு<br>• (1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) பாடசாலை ஆசிரியர்களுக்கான ஓய்வூதியச் சட்டம்.<br>• (1993 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) மாகாண சபைகள் ஓய்வூதியச் சட்டம்<br>• (1910 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) அரச மற்றும் நீதிச்சேவை உத்தியோகத்தர்களை இளைப்பாறச் செய்வதற்கான கட்டளைச் சட்டம்<br>• இராணுவ ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை பிரமாணக் கோவை<br>• விமானப்படை ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை பிரமாணக் கோவை<br>• கடற்படை ஓய்வூதியப் பணிக்கொடை மற்றும் பிரமாணக் கோவை.<br>• (1961 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க) கட்டாய பகிரங்க சேவைச் சட்டம்<br>• (1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டம் |

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| | • (1969 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) அரசாங்க விடுதிகள் (உடைமையை மீளப்பெறுதல்) சட்டம்<br>• (1957ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) பரிசளிப்புப் போட்டிகள் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) அரசகரும மொழிகள் சட்டம்<br>• (1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டம்<br>• (1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) தேசிய மனிதவள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபைச் சட்டம்.<br>• (2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டம்<br>• பிரிவெனாக்கள் கல்விச் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்கம்) |

**7.1 மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைய "நாட்டுக்காகச் சேவையாற்றும் கலாசாரமொன்றை" ஏற்படுத்துவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி எனும் விடயத்துக்குரிய கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்

02. **விசேட முன்னுரிமைகள்**

1. அரச உத்தியோகத்தர் சிந்தனையிலிருந்து மக்கள் சேவையை சிந்தனையை நோக்கி அரச சேவையை வழிநடத்துவதற்காகப் பரந்தளவிலான மறுசீரமைப்பு நிகழச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
2. மக்களுக்குச் சார்பான சேவைகளுக்கான அரச சேவையில் தகவல் தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையுடன் தொழில்நுட்ப ஆற்றலை விஸ்தரித்தல்.
3. அரச சேவையில், மாகாண அரச சேவையில் சேவைகள் இரட்டிப்பாவதைத் தடுக்கும்வகையில் அவ்வாறான நிலைமைகளை ஆராயந்து அதனைத் தடுப்பதற்கான விசேட வழிமுறைகளைத் தயாரித்தல்.
4. உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அதிகாரப் பிரதேசங்களில் பின்தங்கிய கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கி ஆரம்பப் பாடசாலைகள், வைத்தியசாலைகள், தாய் சேய் விடுதிகள் என்பவற்றுக்குத் தேவையான விசேட வசதிகளை வழங்குவதற்காகக் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணைந்து திட்டங்களைத் தயாரித்தல்.
5. மாகாண மற்றும் உள்ளூராட்சி கமத்தொழில் பாதைகள், கிராமப்புற பாதைகள், மற்றும் மாகாண பாதைகள் ஒரு இலட்சமான வேலைத்திட்டங்கள் மற்றும் தேசிய மட்டத்திலான பாதைகளுடன் ஒருங்கிணைக்கும் வகையில் அபிவிருத்தி செய்வதற்காக மாகாண வீதிகள் அபிவிருத்தி அதிகாரச் சபையுடன் திட்டமிட்டுச் செயற்படுத்துதல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. உள்ளூராட்சி பற்றிய இலங்கை நிறுவனம் | • (1999 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) உள்ளூராட்சி பற்றிய இலங்கை நிறுவனச் சட்டம்<br>• (52 ஆம் அத்தியாயம்) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்<br>• பிரதேச சபைகள் சட்டம் (1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)<br>• (255 அத்தியாயம்) நகர சபைக் கட்டளைச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க) மாகாண சபைகள் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) மாகாண சபைகள் (சம்பளங்கள், படிகள் கொடுப்பனவு) சட்டம்<br>• (262 ஆம் அத்தியாயம்) உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்புக் கட்டளைச் சட்டம்<br>• மாகாண சபை வாக்கெடுத்தல் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கம்)<br>• தேசிய கடன் அபிவிருத்தி நிதியச் சட்டம் (1916 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம் |

**08. கல்வி அமைச்சு**

01. **விடய எல்லை**

அறிவை அடிப்படையாகக்கொண்ட சமூகப் பொருளாதாரத்தை நோக்கி இலங்கை மக்களை வழிநடத்துவதற்காக நிலைபேறான கல்வித் திறமுறைகளினூடாக சிறுவர் நட்புறவு கல்வி மற்றும் புத்தாக்கங்களை அடிப்படையாகக்கொண்ட அறிவினைப் பெறுவதற்காக வருங்காலச் சந்ததிக்கு இடவசதிகளைத் திறந்துகொடுத்தல்.

02. **கடமைகளும் பணிகளும்**

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக "அறிவு நிரம்பிய சமூகமொன்றை" ஏற்படுத்துவதற்காக தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கல்வி எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

2. கல்வி மறுசீரமைப்புக்காக சனாதிபதி செயலணியினால் திட்டமிடப்படும் தேசிய கல்விக் கொள்கைகளைச் செயற்படுத்துதல்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. முன்பள்ளி கல்வி முதல் உயர்கல்வியைப் பூர்த்தி செய்யும் வரையில் தெளிவான வழிகாட்டல் திட்டமொன்றை தயாரிப்பதற்கு கொள்கை ரீதியான வழிகாட்டல்களை செய்தல்.

2. ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுடன் கூடிய தரமான கல்வி முறையொன்றை தாபிப்பதற்கு தேவையான விரிவான சீர்திருத்தமொன்றை ஏற்படுத்துவதற்கு கொள்கை ரீதியான சட்டகமொன்றை தாபித்தல்.

3. பாடசாலை ஆசிரியர்களின் நிர்வாக சிக்கல்களை துரிதமாக தீர்ப்பதற்காக தற்போது நிலவும் நிறுவன கட்டமைப்பை செயற்றிறன்மிக்க வண்ணம் செயற்படுத்துவதற்காக விசேட மேற்பார்வை பிரிவொன்றினூடாக செயற்படுதல்.

4. பாடசாலை தேவைப்பாடு தொடர்பாக மீண்டும் மீளாய்வொன்றை செய்து அதன்படி பாடசாலை கட்டமைப்பை மீள்திருத்தியமைத்தல்.

5. ஆசிரியர்களை தேவைப்பாட்டுக்கேற்ப நியமிப்பதற்காக கொள்கை ரீதியான தீர்வொன்றை வழங்குதல்.

6. விடய வெளிவாரி செயற்பாடுகள் பாடசாலைகளினுள் பிரசித்தப்படுத்துவதற்கு வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்

7. பல்கலைக்கழக அனுமதிக்காக செலவாகும் காலத்தை குறைப்பதற்காக முறையொன்றை தயாரித்தல்.

8. பல்கலைக்கழகங்களினுள் மற்றும் மாணவர் விடுதிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்காக செயற்படுதல்.

9. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தையை நோக்காகக் கொண்டு பட்டதாரிகளை உருவாக்குதவற்காக ஒட்டுமொத்த கல்வி சீர்திருத்தக் கொள்கையினுள் பாடவிதானங்களை சீர்திருத்தம் செய்தல்.

10. பல்கலைக்கழகங்களுக்காக தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

11. மகாபொல மற்றும் மாணவர் உதவிகளுக்காக முறையான திறமுறையொன்றின் கீழ் தேர்ந்தெடுத்தல் மற்றும் அதன் நிதிப் பெறுமதியை தேவையான அளவு அதிகரித்தல்.

12. சமுத்திர பல்கலைக்கழகம் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை விரிவாக்குதவற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

13. சகல அரச பல்கலைக்கழகங்களை சர்வதேச தரப்படுத்தலின் உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக நடவடிக்கை எடுத்தல்.

14. பல்கலைக்கழக கல்வியினுள் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக வசதிகளை உருவாக்குதல்.

15. பகிடிவதை கலாசாரத்தை சகல பல்கலைக்கழகங்களிலிருந்தும் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலிருந்தும் இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

16. ஸ்மார்ட் கல்விப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு<br>2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பல்கலைக்கழகங்களும் சகல பட்டப்பின்படிப்பு நிறுவனங்களும் ஏனைய நிறுவனங்களும்<br>3 புத்தசிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகம்<br>4 பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்<br>5. கல்வியியற் கல்லூரி<br>6. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள்<br>7. பரீட்சைத் திணைக்களம்<br>8. இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு | • (1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) பல்கலைக்கழகச் சட்டம்<br>• புத்தசிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகச் சட்டம் (1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க)<br>• இலங்கை பௌத்தம் மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க)<br>• (1968ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) பகிரங்கப் பரீட்சைகள் சட்டம்<br>• (1960ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க) உதவிபெறும் பாடசாலைகளும் பயிற்சிக் கல்லூரிகளும்<br>• (1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க) உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டம் |

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 9. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்<br>10. இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபை<br>11. தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை<br>12. வரை. அரச அச்சகக் கூட்டுத்தாபனம்<br>13. கல்விப் பணிப்பாளர் அலுவலகம்<br>14. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் | • (1988 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டம்<br>• (1993ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க) பாடசாலை அபிவிருத்திச் சபைகள் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) யுனெஸ்கோ புலமைப் பரிசில் நிதியச் சட்டம்<br>• (1968ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க) அரச அச்சகக் கூட்டுத்தாபனம்<br>• (1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கல்விக் கட்டளைச் சட்டம்)<br>• (1986ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க) கல்லூரி கல்விச் சட்டம்<br>• (1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவச் சட்டம் |

**8.1 மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

கல்வி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "அறிவு நிறைந்த சமூகமொன்றை" உருவாக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அப்பணிகளுடனும் தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும்,

02. **விசேட முன்னுரிமைகள்**

1. மகளிர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துதல்.
2. ஒழுங்குறுத்து செய்யப்படாத நுண்நிதி செயற்றிட்டங்களின் மூலம் பாதிக்கப்பட்ட கிராமிய மகளிருக்கு நிவாரணமொன்றைப் பெற்றுக் கொள்ளல்.
3. தொடர்ச்சியாக அனர்த்த ஆபத்துக்குள்ளாகுகின்ற நபர்களுக்கு விசேடமாக மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்துவதற்கும் கஷ்டங்களை குறைப்பதற்கும் நிரந்தர வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
4. ஆரோக்கியமான குழந்தையொன்றை பெற்றெடுத்தல், தாய் பாசத்தினுள் பிள்ளைகளை பாதுகாத்தல் மற்றும் பிள்ளைகளுக்கு வழிகாட்டுவதற்காக மகளிருக்குத் தேவையான அறிவு ஆற்றல்கள் மற்றும் காலத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக முறையொன்றைத் தாபித்தல்.
5. சகல பிள்ளைகளினதும் போஷாக்கின்மையைக் குறைப்பதற்காக விசேட போஷணை வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல்.
6. உரிய சகல நிறுவனங்களையும் ஒன்றிணைத்து சர்வதேச சிறுவர் உரிமைகள் பிரகடனத்திற்கமைய சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
7. சகல மாவட்ட நீதிமன்றங்களிலும் தனியான பிரிவொன்றை பிள்ளைகள் தொடர்பாக தாமதமாகிக் கொண்டிருக்கும் சகல வழங்குகளையும் தீர்ப்பதற்காக ஒதுக்குதல்.

8. சிறுவர் இல்லங்களில் இருக்கும் பிள்ளைகளுக்காக .......... முறையொன்றை உருவாக்குவதற்காக தேசிய வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

9. ''லமா மித்துரு பாசல'' எண்ணக்கருவை விருத்தி செய்தல்.

10. அரச ஒழுங்குறுத்தலின் கீழ் முன்பள்ளிக் கல்வியை விரிவாக்குதல்.

11. கிராமிய பாடசாலைகளை மாணவர்களின் கவர்ச்சிக்குள்ளான பாடசாலைகளாக மாற்றுதல்.

12. சகல பாடசாலைகளிலும் வகுப்பறைகள் மற்றும் உபகரணங்கள் துப்பரவேற்பாட்டு, ஆசிரியர் மற்றும் மாணவர்களின் ஓய்வு இடங்கள் சுகாதார வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக விசேட செயற்றிட்டமொன்றைச் செயற்படுத்துதல்.

13. பாடசாலை பாடப்புத்தகங்கள் , பாட விதானங்கள் ஆசிரியர் கைநூல்கள் போன்றவற்றை தகவல் தொழில்நுட்ப முறையொன்றின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

14. கொத்தணி பாடசாலை தொகுப்பொன்றைத் தாபித்தல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம்<br>2. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>3. சிறுவர் செயலகம்<br>4. இலங்கை மகளிர் பணியகம்<br>5. மகளிர் தொடர்பான தேசிய குழு<br>6. வரையறுக்கப்பட்ட இலங்கை திபோச கம்பனி | • (1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க)தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) வீட்டு வன்முறைகள் தவிர்ப்புச் சட்டம் |

**8.2 கல்வி மறுசீரமைப்பு திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

கல்வி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் ''அறிவு நிறைந்த சமூகமொன்றை'' உருவாக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அப்பணிகளுடனும் தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும்,

02. **விசேட முன்னுரிமைகள்**

1. கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக விடய ஆய்வு சனாதிபதி செயலணி மற்றும் விசேட குழுக்களின் பரிந்துரைகளை மக்களின் கலந்துரையாடலுக்கு சமர்ப்பித்து கல்வியின் மேம்பாட்டுக்காக பொருத்தமானவாறு அவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

2. திறந்த பல்கலைக்கழக எண்ணக்கருவை மேலும் வலுப்படுத்தி செயற்படுத்துதல்.

3. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களோடு கூட்டிணைத்து தூரக் கல்வி சந்தர்ப்பங்களை விரிவாக்கம் செய்வதற்கு தகவல் தொழில்நுட்பத்தை பாவித்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குதல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசிய கல்வி நிறுவகம்<br>2. தேசிய கல்வி ஆணைக்குழு | • (1991ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க) தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம்<br>• (1985ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) தேசிய கல்வி நிறுவகச் சட்டம்<br>• (1960ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் சட்டம் |

8.3 **திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

கல்வி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் 'அறிவு நிறைந்த சமூகமொன்றை' உருவாக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய திறன்கள் விருத்தி,தொழில்கல்வி, ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்கள் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அப்பணிகளுடனும் தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும்,

02. **விசேட முன்னுரிமைகள்**

1. கல்வித் தகைமைகளை கருத்திற்கொள்ளாது தொழில்நுட்ப மற்றும் உயர்தொழில் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்காக புதிய வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.
2. தற்போதுள்ள தொழில்பயிற்சி நிறுவனங்களை முறையாக மதிப்பீடு செய்து பொருத்தமான நிறுவனங்களை முழுமையாக பௌதீக மற்றும் பாடவிதானங்களை நவீனமயப்படுத்தி "One TVET" எண்ணக்கருவின் கீழ் அந்நிறுவனங்களை வலையமைப்புச் செய்து தொழில்நுட்பப் பட்டப்படிப்பு நிறுவனங்களாக மாற்றுதல்.
3. நாடு பூராவும் பரவியுள்ள நவீன "தொழில்நுட்ப மற்றும் பொறிசார் பல்கலைக்கழக கற்கை நிலையங்கள்" தொகுதியொன்றை ஆரம்பித்தல்.
4. ஜேர்மன் பொறிசார் கல்வி நிறுவனத்தை விரிவாக்குதல்.
5. தற்போதுள்ள தேசிய தொழில் தகைமைகள் (NVQ) மட்டத்தை மட்டம் 7 லிருந்து 10 வரை அதிகரிக்கச் செய்தல் மற்றும் அதற்கமைய இலங்கை தகைமை சட்டகத்தை (SLQF) மறுசீரமைத்தல்.
6. தொழில் கல்வியை பட்டப்பின் பட்டப்படிப்பு மட்டம் வரை கல்வியைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.
7. தொழிற்கல்வி மற்றும் தொழில்சார் துறையை ஒன்றிணைத்து தகவல் தொழில்நுட்ப ஆங்கில மற்றும் ஏனைய மொழி அறிவுகளை உள்ளடக்கி தொழிற்கல்வி பாடவிதானத்தை சீரமைத்தல்.
8. வெளிநாட்டு வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் பல்வகைப்படுத்துதல் தொடர்பாக அமைச்சை இணைப்பாக்கம் செய்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புச் சந்தையை இலக்காகக் கொண்ட தொழில்கல்வியைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
9. தகவல் தொழில்நுட்ப தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல்
10. சர்வதேச இணைங்களுடன் தொடர்புபட்ட உதிரிப் பாகங்கள், புலமை, உயிரினத் தொழில்நுட்பம், ரொபோ தொழில்நுட்பம், ஒக்மன்டட் ரியலட்டி, க்லவுட் கம்பியூட்டின், நெனோ தொழில்நுட்பம், முப்பரிமாண அச்சு போன்ற நவீன தொழில்நுட்பப் பாவனையை உச்ச அளவுக்குக் கொண்டுவருதல்.

11. ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களது புத்தாக்கங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் ஆராய்ச்சிகளின் ஆக்கபூர்வமான உரிமைகளை உறுதிப்படுத்தும் உரிமப்பத்திரங்களை வழங்கும் செயன்முறையை ஒழுங்கமைத்தல்.

12. சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கு ஆராய்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட உள்நாட்டு நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்.

13. ஆராய்ச்சிகளுக்குப் பங்களிப்பு வழங்கும் தனியார் தொழில்முயற்சியாளர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குதல்.

14. புத்தாக்கங்களைக் கொண்ட உற்பத்திகளுக்குத் தேசியக் குறியீடுகளின்கீழ் உற்பத்தி செய்யும்பொருட்டு தேவையான உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களை அறிமுகப்படுத்துதல்.

15. புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பெறுபேறுகள், முதலீட்டாளர்கள் மற்றும் அவற்றைப் பயன்படுத்து பவர்களுக்குச் சென்றடையும் வகையில் செயற்றிறன்மிக்க பொறிமுறையொன்றை ஏற்படுத்துதல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களும்<br>2. தொழில்துறை, தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்<br>3. தேசிய கடற்றொழில் மற்றும் கடல்துறைசார் பொறியியல் நிறுவனம் சமுத்திரம்சார் பல்கலைக்கழகம்)<br>4. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை<br>5. தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சியளித்தல் அதிகாரசபை<br>6. இலங்கை - ஜேர்மனி தொழினுட்பப் பயிற்சி நிறுவகம்<br>7. இலங்கை அச்சக நிறுவகம்<br>8. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்<br>9. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்<br>10.ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் நெனோடெக்னொலோஜி பிரைவேட் லிமிட்டெட்<br>11.தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்<br>12.இலங்கை புதிய புத்தாக்குநர் ஆணைக்குழு<br>13.தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்<br>14.இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம்<br>15.தொழில்நுட்ப, விஞ்ஞான மற்றும் புத்தாக்கச் செயலகம்<br>16.மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு | • (2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொழில், தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டம்<br>• (2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) இலங்கை சமுத்திர பல்கலைக்கழச் சட்டம்<br>• (1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) தேசிய வர்த்தக முகாமைத்துவச் சட்டம்<br>• (1995ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம்<br>• (1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க)அரச அச்சக நிறுவனச் சட்டம்<br>• (2019 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) தேசிய புத்தாக்குநர் முகவர் சட்டம்<br>• (1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இலங்கை தேசிய ஆராய்ச்சிச் சபைச் சட்டம்<br>• (1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க) இலங்கை கைத்தொழில் கல்வி நிறுவகச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க) அரச தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) மூன்றாம் கல்வி, தொழில்கல்வி சட்டம் |

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 17.தேசிய விஞ்ஞான மன்றம்<br>18.தேசிய விஞ்ஞான, தொழினுட்பவியல் ஆணைக்குழு<br>19.கோள்மண்டலக் காட்சிக்கூடம்<br>20.நவீன தொழினுட்பவியலுக்கான ஆதர் சி. கிளார்க் நிலையம் | • (1981ஆம் ஆண்டின் 55ஆம் இலக்கம்) இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சட்டம்<br>• இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனச் சட்டம் (2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) |

**8.4 அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

கல்வி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் அதிசிறந்த உயர்கல்வித் தொகுதியொன்றை' உருவாக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அறநெறிப் பாடசாலைகள், பிக்குமார் கல்வி, பிரிவெனாக்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்கள் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அப்பணிகளுடனும் தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும்,

02. **விசேட முன்னுரிமைகள்**

1. இளம் பிக்குகளின் ஆங்கிலமொழி அறிவாற்றல், கணினி மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக நவீன கல்வி வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து செயற்படுத்துதல்.
2. பிரிவெனா கல்வியை மேம்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் பிரிவெனா தலைமையதிபதியின் மற்றும் பிரிவெனா மற்றும் அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் தீர்க்கப்படாத நியமனங்கள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
3. பிக்குகளின் உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்குதல்.
4. மாணவ பிக்குகளின் கல்விச் செலவுகளை பூரணப்படுத்துவதற்கு மாதாந்த அனுசரணை பங்களிப்பு முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
5. பிரிவெனா தலைமையதிபதி பிக்குகளின் மற்றும் பிரிவேனா ஆசிரியர்களின் தீர்த்து வைக்கப்படாத நியமனங்கள் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான சிக்கல்களை தீர்த்து வைத்தல்.
6. சகல மதங்களுக்குரிய அறநெறிப் பாடசாலைகளின் அலுவல்களை விரிவாக்குவதற்காக தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுத்தல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. பிரிவெனா கல்விச் சபை | • (1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க) பிரிவெனா கல்விச் சட்டம் |

## 09. சுகாதார அமைச்சர்

### 01. விடய எல்லை

உடல், உள, சமூக ரீதியான சுகாதாரம் போன்று ஆன்மீக சுகாதாரத்தையும் இலக்காகக்கொண்டு தேசியச் சுகாதாரக் கொள்கையின் அடிப்படையில் மேற்கத்தைய அத்துடன் சுதேச வைத்திய பயன்பாட்டினுள் ஆரோக்கியமான மக்களை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

### 02. கடமைகளும் பணிகளும்

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக "ஆரோக்கியமிக்க மக்கள் சமுதாயமொன்றை" உருவாக்குவதற்காக தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சுகாதார எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

2. கொவிட் 19 செயலணியின்மூலம் கொவிட்-19 தொற்றுநோய் பரவலுக்கு இலக்காகக்கூடிய ஆபத்துகளைத் தொடர்ந்து இனமறிந்து அவற்றைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கையை எடுத்தல்.

### 03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாநோய்களைத் தடுத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி தாய்-சேய் மரணங்களைக் குறைத்து சிறந்த மனிதவளத்தைப் பேணும் நாடாக சுகாதாரச் சேவைகளைக் கட்டியெழுப்புதல்.

2. தனியார் மருத்துவச் சேவைகள் மற்றும் பரிசோதனை ஆய்வுகூடப் பணிகளைத் தேசிய கொள்கைத்திட்டத்தினுள் உள்ளடக்கி அதனை ஒழுங்குபடுத்தலும் முறையான சேவையொன்றை வழங்கக்கூடிய வகையில் அதற்கான செயற்றிட்டமொன்றைத் தயாரித்தலும்.

3. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் தொடர்புபட்ட தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் மற்றும் ஆளணி உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலூடாக நோயாளர்களுக்கான காத்திருப்புப் பட்டியல் மற்றும் நீண்ட வரிசைகள் உட்பட நோயாளர் நெரிசலைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

4. கொழும்பு தேசிய வைத்தியசாலையைச் சர்வதேச தரத்துக்கு உயர்த்துதல்.

5. அனைத்து மாவட்டங்களிலிருந்து ஒரு வைத்தியசாலை வீதம் தெரிவுசெய்து தேசிய மட்டத்துக்குத் தரமுயர்த்துதல் மற்றும் மாவட்டத்திலிருக்கும் ஏனைய பிரதேச மற்றும் ஆரம்ப வைத்தியசாலைகளுக்கான வசதிகளை விரிவுபடுத்துதல்.

6. சகல வைத்தியசாலைகளுக்கும் அத்தியாவசிய பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்குதலும் அந்த வைத்தியசாலைகளூடாகக் குறிப்பிட்ட நோயாளர்களை உரிய வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்.

7. மருத்துவர்கள் மற்றும் மருத்துவத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில் நிபுணர்களை இலங்கையில் தொடர்ந்தும் இருக்கச் செய்தலும் அதற்குத் தேவையான தொழில்சார் வசதிகளை மேம்படுத்தலும்.

8. சகலருக்கும் பாதுகாப்பான சூழலொன்றை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து அரச மற்றும் தனியார் சுகாதார மருத்துவ நிறுவனங்களை ISO தரச்சான்றிதழ் மட்டத்துக்குத் தரமுயர்த்துதல்.

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. சுகாதார சேவைகள் திணைக்களம்<br><br>2. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை<br><br>3. விஜய குமாரணதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை, சீதுவை<br><br>4. சகல தேசிய போதனா மற்றும் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க மருத்துவமனைகள்<br><br>5. தேசிய சுகாதார மன்றம்<br><br>6. வைத்திய ஆராய்ச்சி நிறுவகம்<br><br>7. தேசிய சுகாதாரகல்வி நிறுவகம்<br><br>8. அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனை<br><br>9. மருத்துவ ஆய்வுகூட தொழினுட்பப் பாடசாலை<br><br>10. இலங்கை மருத்துவ மன்றம்<br><br>11. இலங்கை மருத்துவக் கல்லூரி மன்றம்<br><br>12. தனியார் மருத்துவ நிறுவக மன்றம்<br><br>13. தேசிய சிறுநீரக சுத்திகரிப்பு மீள்நடுகை நிறுவனம்<br><br>14. புகையிலை மற்றும் போதைப்பொருள் பற்றிய தேசிய அதிகாரசபை<br><br>15. 1990 சுவசெரிய மன்றம்<br><br>16. சமூக சேவைகள் திணைக்களம்<br><br>17. வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய மன்றமும் தேசிய வயது முதிர்ந்தோர் செயலகமும் | • (1952 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)சுகாதார சேவைகள் சட்டம்<br><br>• (1927 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) மருத்துவக் கட்டளைச் சட்டம்<br><br>• (1912 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) மருத்துவத் தேவைகள் கட்டளைச் சட்டம்<br><br>• (1870 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) மன நோய்க் கட்டளைச் சட்டம்<br><br>• (2006 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க) புகையிலை மற்றும் அற்ககோல் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம்<br><br>• (1981 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க) தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டம்<br><br>• (1949 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) ஆதுலர்மனைகள் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்<br><br>• (1929 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம்<br><br>• (2006 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க) தனியார் மருத்துவ நிறுவன (பதிவுச்) சட்டம்<br><br>• (1983 ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கம்) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆசுப்பத்திரி சபைச் சட்டம்<br><br>• (1988 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க) இலங்கை தாதிகள் பேரவைச் சட்டம்<br><br>• (1987ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க) மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டம்<br><br>• (1999 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க) விஜய குமாரணதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை சபைச் சட்டம்<br><br>• (2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) 1990 சுவசெரிய மன்றச் சட்டம் |

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| | • (1985 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) வறுமை நிவாரணச் சட்டம்<br>• (1907 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) தடுப்பு இல்லங்கள் கட்டளைச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வறியோர் சட்ட கட்டளைச் சட்டம்<br>• (1841 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) அலைந்துதிரிவோர் கட்டளைச் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் |

**9.1 மருந்து உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர்**

*01.* **கடமைகளும் பணிகளும்**

சுகாதார அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் பேரில் ‘ஆரோக்கியமான மக்கள் சமூகத்தை’ உருவாக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஔடத உற்பத்திகள், வழங்குகைள் மற்றும் ஒழுங்குறுத்துகை எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அப்பணிகளுடனும் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களையும் கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும்,

*02.* **விசேட முன்னுரிமைகள்**

1. ஔடதங்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக உலக சுகாதார அமைப்பின் சிபாரிசுகளுக்கு அமைய இரசாயன ஆய்வுகூட வசதிகளை விரிவுபடுத்தல்.

2. தரம்வாய்ந்த ஔடத உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சந்தையில் நுகர்வோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் போட்டி அடிப்படையிலான விலைகளை நடைமுறைப்படுத்துதலும், ஔடதங்களுக்காக சந்தை ஏகபோக உரிமையைத் தடுக்கும்வகையில் மிகவும் தரமான மருந்தகங்களை (Pharmacy) மேம்படுத்தலுக்காக அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான வழிமுறையினைத் தயாரித்தலும்.

3. ஔடத உற்பத்திகளுக்காக உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான மூலோபாயங்களைத் தயாரித்தல்.

*03.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. வரை. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்<br>2. அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்<br>3. தேசிய மருந்தாக்கல் ஒழுங்குறுத்துகை அதிகாரசபை | • (2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துகை அதிகாரசபைச் சட்டம் |

**9.2 சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாயச் சுகாதார இராஜாங்க அமைச்சர்**

*01.* **கடமைகளும் பணிகளும்**

*சுகாதார அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் 'ஆரோக்கியமான மக்கள் சமூகத்தை' உருவாக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூகச் சுகாதாரம் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அப்பணிகளுடனும் தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிபுரிதலும்,*

*02.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. *தேசிய சுதேச மருத்துவச் சபை மற்றும் இலங்கை ஆயுர்வேத வைத்தியசாலைகளைப் பதிவுசெய்தல் மற்றும் சுதேச மருத்தவர்களை சுதேச மருத்துவர்களாகப் பதிவு செய்வதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல்.*
2. *ஆயுர்வேத கல்வியியல் கல்லூரிகளுக்கு பல்கலைக்கழகச் சந்தர்ப்பத்தினை வழங்குதல்.*
3. *சுதேச மருத்துவ ஔடத கோவையை இற்றைப்படுத்துதல்.*
4. *சுற்றுலாப் பயணங்களுக்கான சிகிச்சையளிப்புகள் முறைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.*
5. *சுதேச மருத்துவவியலுக்கான ஔடதங்கள் மற்றும் சிகிச்சைமுறைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதை ஊக்குவித்தல்.*
6. *ஆயுர்வேத ஔடத உற்பத்திகளுக்காக மூலிகைச் செடிகளை உள்நாட்டில் பயிரிடுவதற்காக சுதேச மருந்துவர்கள் மற்றும் இத்துறையுடன் தொடர்புபட்டவர்களின் கலந்துகொள்ளலுடன், மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்.*
7. *நச்சுத்தன்மையற்ற உணவினைப் பிரபல்யப்படுத்தலும் அனைத்து வயதுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்குச் சரியான உணவுப் பழக்கவழக்கங்களைப் பயிற்றுவித்தல்.*
8. *தொற்றுநோய்களைத் தடுத்தல் மற்றும் தொற்றுநோய்களை நேரகாலத்துடன் இனம்காண்பதற்காக நாடு முழுவதிலும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்*

*03.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. ஆயுர்வேத திணைக்களம்<br>2. இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம்<br>3. ஆயுர்வேத மருத்துவ மன்றம்<br>4. ஆயுர்வேத கல்லூரியும் மருத்துவமனைச் சபையும்<br>5. ஆயுர்வேத போதனா மற்றும் ஆராய்ச்சி மருத்துவமனைகள்<br>6. ஹோமியோபதி மருத்துவமனை, வெலிசறை<br>7. ஹோமியோபதி மருத்துவ மன்றம் | • (1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) ஆயுர்வேத சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) ஹோமியோபதி சட்டம் |

## 10 தொழில் அமைச்சர்

### 01. விடய எல்லை

தொழிலாளர் சட்டவாக்கத்தின் தரவளவுகள் தொடர்பாக சர்வதேசத்துடன் உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு தொழிலாளர் சமூகத்தினைப் பாதுகாத்தல், நலனோம்புகை ஏற்படுத்துதலும் தொழிலாளர் அமைதி மற்றும் உறவுகளை மேம்படுத்துதல்

### 02. கடமைகளும் பணிகளும்

1. 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக 'ஊழியர் பாதுகாப்பு மற்றும் தேர்ச்சிபெற்ற வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புச் செயலணியொன்றை' உருவாக்குவதற்காக தொடர்புடைய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுகளுக்கு கொள்கை ரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தொழில் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### 03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. தொழிலாளர்களின் விடயத்துடன் தொடர்புபட்ட சகல சுற்றுநிருபங்கள், சட்டங்கள், சட்டமூலங்கள், பிரமாணங்கள் என்பவற்றினை மீளாய்வு செய்து தற்காலத்துக்குப் பொருத்தமான வகையில் ஊழியர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கான திருத்தங்களை மேற்கொள்ளுதல்.

2. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்துக்கு மேலதிகமாக ஊழியர்களின் ஓய்வுகாலத்தைப் பாதுகாக்கக்கூடிய பங்களிப்புடனான ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்.

3. தொழிலாளர்களின் திறமைகளையும் ஆற்றலையும் மேம்படுத்தி சேவை நிலையங்களில் உயர்மட்ட தரத்திலான சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஊழியர் பாதுகாப்பு முறைகளைப் பேணி தொழில்வழங்குநருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினைப் பேணுதல்.

### 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தொழில் திணைக்களம்<br>2. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்<br>3. ஊழியர் சேமலாப நிதியம்<br>4. தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்<br>5. தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்<br>6. தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | • (1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஊழியர் சபைச் சட்டம்<br>• (1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்<br>• (1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் வேலைக்கமர்த்துதல் சட்டம்<br>• (1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்<br>• (1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) கைத்தொழிற் பிணக்குகள் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)பிரசவ நலன்கள் கட்டளைச் சட்டம்<br>• (2009ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க) தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய நிறுவகச் சட்டம்<br>• (1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம் |

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| | • (1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)சாப்புகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழிலையும் வேதனத்தையும்) விதிமுறைப்படுத்தல் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தொழிலாளிகளின் தொழிலை முடிவுறுத்துதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டம்<br>• (1941ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க) சம்பள நிர்ணய சபைகள் கட்டளைச் சட்டம்<br>• தொழிலாளர் நட்டஈட்டுச் கட்டளைச் சட்டம்(1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)<br>• (1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம் |

**10.1 வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

1. தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் ‘திறன்கள் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புச் செயலணியொன்றை’ உருவாக்குவதற்காக சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

2. வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகம் மற்றும் அதன் வேலைநாட்டுச் சேவைகள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அத்துடன் வெளிநாடுகளில் அமைந்துள்ள தூதுவர் மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படும் புதிய நிர்வாகத் திறமுறையொன்றைத் தயாரித்தல்

**02. விசேட முன்னுரிமைகள்**

1. பயிற்சிபெறாத தொழிலாளர் அணிக்குப் பதிலாக பயிற்சிபெற்ற தொழிலாளர்களை உள்ளடக்கிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு வசதிகளைக்கொண்ட தொழில்சந்தை வசதிகளை மேம்படுத்துதல்.

2. வெளிநாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் தாம் சம்பாதிக்கும் பணத்தை மிகவும் பயனுள்ள முறையில் இலங்கையில் முதலீடு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்வகையில் இலங்கையின் வங்கிமுறையை அவர்களுக்கு நெருக்கமானதாக மாற்றியமைத்தல்.

3. வெளிநாடுகளில் பணிபுரிந்து தாயகம் திரும்புபவர்களுக்குத் தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

4. மத்தியகிழக்கு நாடுகள் உட்பட வேறு நாடுகளில் பணியாற்றும் பணிப்பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

5. வெளிநாடுகளில் பல்வேறு விபத்துகளை எதிர்நோக்குபவர்களுக்கு இழப்பீடுகள் கிடைப்பதைப் பலப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளல்.

6. வெளிநாட்டு வேலைவாய்ப்பு தனியார் முகவர் நிறுவனங்களை உரியவாறு ஒழுங்குபடுத்துதல்.

*03.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்<br>2. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை | • (1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம்<br>• கட்டணம் அறவிடும் தொழில் முகவராண்மைகள் சட்டம் (1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) |

## 11 சுற்றாடல் அமைச்சர்

*01.* **விடய எல்லை**

நிலைபேறான அபிவிருத்திக்காக இலங்கையில் உயிரினப் பல்வகைத்தன்மை மற்றும் இயற்கை அழகினைப் பாதுகாத்துக்கொண்டு இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதுபோன்று தாவரங்கள், கடற்கரைகள், சேற்றுநிலங்கள், அகழிகள் ஓடைகள், கங்கைகள் மற்றும் வனசீவராசிகளைப் பாதுகாத்தல், கழிவுப்பொருட்களைத் தவிர்த்துக்கொள்ளுதல் மற்றும் அகற்றுதல், சுத்தமான நகர மற்றும் பகுதி நகரச் சூழல் மற்றும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கேற்ற சுற்றாடல் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களுக்குரிய அலுவல்களை மேற்கொள்ளல்.

*02.* **கடமைகளும் பணிகளும்**

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக அரசினால் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் ஏனைய தேசியக் கொள்கைகளின் பேரில் “நிலைபேறான சுற்றாடலை” ஏற்படுத்துவதற்கான கொள்கைரீதியான வழிகாட்டல்களை வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சுற்றாடல் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*03.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. நிலைபேறான சூழல் எண்ணக்கருவை பாடசாலைக் கல்வி தொடக்கம் சமூகத்துக்கு மத்தியில் உளப்பாங்கு ரீதியில் நிலைகொள்ளச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. சூழல் சார்ந்த உத்தரவுப்பத்திரங்களை வழங்கும் முறையை மீளாய்வு செய்து சூழல்சார்பான, மக்கள் சார்பான வகையில் அந்தச் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தலை இலகுபடுத்தல்.
3. சூழலுக்குச் சாதகமான உற்பத்திகள் விநியோகம், போக்குவரத்துச் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுப் பொருளாதார வலய நடவடிக்கைகளை முன்னெடுத்தல். வர்த்தக அபிவிருத்தித் தேவைகளுடன் சமநிலைப்படுத்துவதற்கான தாபனக் கட்டமைப்பினைப் பலப்படுத்துதல்.
4. சூழல் பாதுகாப்புக்காக நவீன தொழில்நுட்பமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>2. புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம்<br>3. வரையறுக்கப்பட்ட (GSMB) தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி<br>4. இலங்கை கிளைமட் பன்ட் (பிரைவேட் லிமிட்டட்) | • (1992 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) தேசிய சூழல் சட்டம் |

## *12* வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர்

### *01.* விடய எல்லை

வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பின் மூலம் உயிரின பல்லினத் தன்மையைப் போசித்தல் மற்றும் சூழலுக்கு சாதகமான செய்கையின் மூலம் தேசிய காடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் விலங்கினங்கள் வாழும் இயற்கை அழகைப் பாதுகாத்தல்.

### *02.* கடமைகளும் பணிகளும்

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேறு தேசியக் கொள்கையின் அடிப்படையில் "வனசீவராசிகள் பாதுகாப்பு" மற்றும் வனப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக இராஜாங்க அமைச்சுக்காக கொள்கை ரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### *03.* அதிவிசேட முன்னுரிமைகள்

1. வனசீவராசிகளின் பாதுகாப்புக்குத் தேவையான வனபூங்கா, நீர்த்தேக்கங்கள் மற்றும் வனசீவராசிகளின் உணவுக்காகப் பயிரினங்களை வளர்த்தல்.
2. வனசீவராசிகளிடமிருந்து கிராமப் பிரதேசங்களில் உள்ள வீடுகள், சொத்துக்கள் மற்றும் பயிர்ச்செய்கைக்கான சேதங்களை குறைத்துக் கொள்வதற்கு நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல்.
3. யானைகள் - மனிதர்களுக்கிடையிலான மோதல்களைத் தவித்துக் கொள்ளும் வகையில் அத்தகைய ஆபத்துள்ள பிரதேசங்களில் யானை வேலிகள், அகழிகள் பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு அமைவாக சமூக அடிப்படையிலான பாதுகாப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.
4. காடுகள் வளர்ப்பினை அதிகரிப்பதன்மூலம் காடுகளின் அடர்த்தியை உயர்மட்டத்துக்குக் கொண்டுசெல்வதற்காக வீட்டுத்தோட்டங்கள், பாடசாலை வளவுகள், வைத்தியசாலைகள் மற்றும் அலுவலக வளவுகளில் வீதிகளின் இருமருங்கிலும் நகர்ப்புறப் பூங்காக்களினதும் மரநடுகையை மேற்கொள்ளல்.

### *04.* உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் |
|---|
| 1. அரச மரக் கூட்டுத்தாபனம் |

## *12.1* வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

### *01.* கடமைகளும் பணிகளும்

வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வனப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அப்பணிகளுடனும் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களைத் ஆக்குதலும், செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*02.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. பசுமை உள்வாங்கலை விஸ்தரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
2. சதுப்புநிலங்கள் மற்றும் கண்டல் தாவரங்களைப் பாதுகாத்து அவற்றை அழிக்கும் மனிதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல்.
3. நில அரிப்பு மற்றும் தரிசு நிலங்களை இனங்கண்டு தெங்கு வேறு பயிர் வகைகள் புல் மற்றும் விவசாய மற்றும் காட்டுமரங்களை நடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. கைத்தொழில்சாலைகளை அண்மித்துக் காட்டுமரங்களை நாட்டுதல், நகர்பறங்களில் மரங்களை நாட்டுதல், கடுகதி நெடுஞ்சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளின் இருமருங்கிலும் மரக்கன்றுகளை நாட்டுதல், அரச அலுவலக வளவுகள், தொடர்மாடி வளவுகள் என்பவற்றில் மரக்கன்றுகளை நாட்டுதல், வனப்பூங்காக்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் மரக்கன்றுகள் நாட்டுவதை ஊக்குவித்தல்.
5. காடுகளை மீண்டும் வளர்த்தலுக்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்ததல்.
6. ஆறுகள் மற்றும் அதனை அண்மித்த இடங்களில் மணல் அகழ்வதற்கான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், ஆற்றுப் பள்ளத்தாக்குகளை அபிவிருத்திசெய்தல்.
7. பசுமை மற்றும் செம்மையான நகரங்கள் மற்றும் வதிவிடக் கோட்பாட்டினை ஏற்படுத்தி அவற்றைப் பிரபல்யப்படுத்தல், சுற்றுச்சூழல் தொடர்பாக உணர்வுபூர்வமாகச் செயற்படக்கூடிய வகையில் மக்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துதல்.
8. மனிதர்களுக்கும் யானைகளுக்குமிடையிலான மோதல்களைத் தவிர்க்கும் வகையில் கிராமங்கள், குடியிருப்புகளின் பாதுகாப்பப்புகாக யானை வேலிகள், அகழிகள் போன்றவற்றை அமைப்பதற்கு கிராமிய மக்களின் பங்களிப்பினைப் பெற்று அவற்றை நடைமுறைப்படுத்துதல்.
9. வனசீவராசிகளின் பாதுகாப்புக்காக அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளைப் பாதுகாத்தல், அந்தப் பிரதேசத்திலுள்ள குளங்கள், ஆறுகள், காடுகள் என்பவற்றைப் பாதுகாத்தல் மற்றும் வனசீவராசிகளுக்குத் தேவையான வகையில் உணவுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அதற்கான பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளல்.

*03.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. வனப் பாதுகாப்புத் திணைக்களம்<br>2. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்<br>3. தேசிய மிருகக் காட்சிச் சாலைகள் திணைக்களம் | • (1907 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• (1988ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) தேசிய மரபுரிமை கானக இடப்பரப்புகள் சட்டம்<br>• (1937 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) தாவர, வனவிலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• தேசிய மிருகக் காட்சிச்சாலைச் சட்டம் (1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) |

*13* **கமத்தொழில் அமைச்சர்**

*01.* **விடய எல்லை**

தேசியக் கமத்தொழில் கொள்கையின் அடிப்படையில் புதிய தொழில்நுட்பப் பயன்பாட்டினுள் சுபீட்சம்மிக்க உள்நாட்டு கமத்தொழில் வியாபார சமூகத்தினை உருவாக்கி நாட்டின் மொத்த தேசிய உற்பத்திகளில் கூடிய பங்களிப்பொன்றை வழங்குதல் மற்றும் உள்நாட்டு, சர்வதேச பாவனையாளர்களுக்காகப் போதியளவு நச்சுத்தன்மையற்ற உணவுகளையும் கமத்தொழில் உற்பத்திகளையும் வழங்குதல், கமத்தொழில் வளங்களை உயர்மட்ட உற்பத்திப்பெருக்கத்தோடு

பயன்படுத்துவதன் வாயிலாக உணவுக் கட்டுக்காப்பு, விவசாய மக்களின் வாழ்வாதார வழிகளை மேம்படுத்துதல், அண்டிவாழும் கமத்தொழில் திறமுறைகளுக்குப் பதிலாகப் புதிய தொழில்நுட்பக் கமத்தொழில் உற்பத்தியின்மீது மாறுதல் மற்றும் சந்தை அபிவிருத்தியினுள் கமத்தொழில் விருத்தியினை (Agro industrialization) ஏற்படுத்துதல்.

02. **கடமைகளும் பணிகளும்**

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக புதிய தொழில்நுட்பக் இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கமத்தொழில் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. பாரம்பரிய விவசாயிகள், இளைஞர்யுவதிகள் மற்றும் மாணவர்களை நவீன தொழில்நுட்பத்துடன் விவசாய கற்கைகளுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அதற்காக ஒவ்வொரு குழுக்களுக்கும் பொருத்தமாக வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
2. இளம் விவசாய தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல்.
3. விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு சகல நிறுவனங்களுக்கும் இடையிலான ஒருங்கிணைப்புப் பொறிமுறையைக்கொண்ட அணுகுமுறையொன்றைத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துதல்.
4. விவசாயத்துறையில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பசளைகள் மற்றும் இரசாயனக் கிருமிநாசினி என்பவை உரிய தரத்தில் உள்ளனவா என்பதைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்கான வழிமுறையொன்றை ஏற்படுத்துதல்.
5. விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையானவகையில் நிதி வழங்குதல், விவசாயக் காப்புறுதி மற்றும் விவசாய ஓய்வூதியத் திட்டத்தை விரிவுபடுத்துதல்.
6. நேரடி உற்பத்தியாளர்கள், ஏற்றுமதிக் கம்பனிகள், பதனிடும் நிலையங்கள், மொத்த வர்த்தகக் கம்பனிகள் என்பவற்றுக்கிடையில் விநியோகம் தொடர்பான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல்.
7. உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காகப் புதிய மூலோபாயத் திட்டங்களைத் தயாரித்தல்.
8. அறுவடை இடம்பெறும் காலங்களில் அரச பங்களிப்புகளுக்கான திட்டமிடல்களை மேற்கொள்ளுதல்.
9. காலநிலை மாற்றங்கள் மற்றும் வானிலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதன்மூலம் இயற்கை அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளுதல்.
10. தரமான விதைகள், கன்றுகள் என்பவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
11. நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் தேவைகளை முகாமைத்துவம் செய்தல்.

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை<br>2. கமத்தொழில் திணைக்களம் | • (1999ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம் |

**13.1 நெல், மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்திகள் மற்றும் உயர்தொழில்நுட்பக் கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்**

*01.* **கடமைகளும் பணிகளும்**

*கமத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைய "புதிய தொழில்நுட்பக் கைத்தொழிலொன்றை" உருவாக்குவதற்காக தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு, விதைகள் பயிர்கள் உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்பம் கமத்தொழில் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை தயாரிப்பதற்கு உதவிபுரிதலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகளுக்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதலும், தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.*

*02.* **விசேட முன்னுரிமைகள்**

*1.* *உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் திருப்பதியுறும் வகையில் உற்பத்தி, நுகர்வு மற்றும் விலைக் கொள்கைகள் பயிர்களைப் பன்முகப்படுத்துதல் என்பவற்றுக்காக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.*

*2.* *சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.*

*3.* *சேதன மரக்கறி மற்றும் பழவகை பாவனை குடும்ப மட்டத்தில் விரிவுபடுத்துவதற்காக சமுர்தியில் குறைந்த வருமானம் பெறுவோர் வீட்டுத்தோட்டங்கள் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.*

*4.* *செத்தல் மிளகாய், சோளம், சோயா, பயறு, கௌபி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற உற்பத்திகளை அதிகரிப்பதன்மூலம் இவற்றுக்கான இறக்குமதிகளைக் குறைத்தல்.*

*5.* *மேலதிக உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பதன்மூலம் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும் அதற்கான செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தலும்.*

*6.* *விவசாய உற்பத்திகளைப் பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான விவசாய அறுவடைகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் பதனிடும் நிலையங்களை ஏற்படுத்துதல்.*

*7.* *மரக்கறி வகைகள், பழவகைகள் தொடர்பான ஏற்றுமதி உற்பத்தித் தொழில்துறையை மேம்படுத்துவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.*

*8.* *சர்வதேச மட்டத்தில் தரமான விலைகளை உற்பத்திசெய்வதற்காக உள்நாட்டு விதை உற்பத்திக் கொள்கைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.*

*9.* *ஏற்றுமதி விதைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கைத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின்மூலம் தரச்சான்றிதழ் ஒன்றின் அடிப்படையில் அதற்கான இறக்குமதிகளை மேற்கொள்ளுதல்.*

*10.* *தரமான விதைகள் மற்றும் பயிர் நடுகைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தனியார் துறையினரை ஊக்குவித்தல்.*

*11.* *தனித்துவமான தரத்தினைக்கொண்ட மற்றும் நோய்களைத் தாக்கும்பிடிக்கும் மற்றும் கூடிய விளைச்சலைத்தரும் விதைகள் மற்றும் கன்று வகைகளை அறிமுகப்படுத்தல்.*

*12.* *அரச பண்ணைகள் மற்றும் விவசாய உற்பத்திப் பண்ணைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் நிவாரணச் சேவைகளும்.*

*13.* *புதிய தொழில்நுட்ப அடிப்படையில் நிலத்தடி நீர், நிலத்தை தயார்படுத்தல், விதைகள், கன்றுகளைத் தெரிவுசெய்தல் பசளையிடல், அறுவடைக்குப் பின்னர் மற்றும் முன்னரான நிலைமைகள் தொடர்பாக பிரதேச மட்டத்தில் ஆராய்ந்து விவசாயிகளுக்கு அறிவூட்டல்*

14. தொழில்நுட்ப விவசாயத்தின்மீது ஈடுபாடு கொள்ளும் வகையில் தேவையான அறிவு, தொழில்நுட்ப உபகரணங்கள், காணிகள் பயன்பாடு, நிதி வழங்கல்மூலம் சந்தைப் பெறுமதி சேர்க்கப்பட்டு கைத்தொழில் உற்பத்திமீது ஈடுபாடு கொள்ளல்.

15. அறுவடை செய்யும்போதும் ஏற்றிச் செல்லும்போதும் இறக்கும்போதும் ஏற்படும் வீண்விரயங்களைத் தடுப்பதற்காகப் புதிய தொழில்நுட்பமுறைகளைப் பயன்படுத்துவதனூடாகத் தனியார் மற்றும் அரசினரை ஒருங்கிணைக்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்தல்.

16. நீரினைச் சிக்கனமாகப்பயன்படுத்துவதன்மூலம் கூடிய அறுவடையைப் பெறும் செயன்முறையொன்றை அறிமுகப்படுத்தி நீரிலிருந்து உச்சப் பொருளாதாரப் பயனைப் பெறுதல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. கிராமிய பொருளாதார மத்திய நிலையம்<br>2. நெல் சந்தைப்படுத்தல் சபை<br>3. கமநல அபிவிருத்தித் திணைக்களம்<br>4. ஹெக்டர் கொப்பேகடுவ கமத்தொழில் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்<br>5. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்<br>6. தேசிய பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம் | • (1982ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க) கிராமோதய சபைச் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) கமநல அபிவிருத்திச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றச் சட்டம்<br>• (1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகச் சட்டம்.<br>• (1951 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்<br>• (2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) விதை நெல் சட்டம்<br>• 2003 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க) விதை நெல் சட்டம்<br>• (1996ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க) மண்வளம் பேணல் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம் |

**13.2 பசளை உற்பத்தி மற்றும் விநியோகங்கள், இரசாயனப் பசளைகள் மற்றும் கிருமிநாசினி பயன்பாட்டு ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

கமத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைய "புதிய தொழில்நுட்பக் கைத்தொழிலொன்றை" உருவாக்குவதற்காக தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை எனும் விடயத்துக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலுக்கு உதவிபுரிதலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. நெல் மற்றும் தானியவகைகள், மிளகாய், கராம்பு கொக்கோ உட்பட பிரதான பயிர்வகைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கைக்காக தொழில்நுட்ப ரீதியிலான பயிர்ச்செய்கை முறைகள், உயர்தரத்திலான விதைகள், கன்றுகள் மற்றும் உரிய தரத்திலான உரம் என்பவற்றை உரியநேரத்தில் விநியோகிப்பதற்கான வழிமுறைகளை தயாரித்தல்.

2. உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதன்மூலம் சர்வதேச தரத்துக்கமைய சேதனப் பசளைகளை உற்பத்தி செய்தல் மற்றும் உயர்மட்டத்திலான பசளை வகைகளை நாட்டில் உற்பத்தி செய்வதை ஊக்குவித்தல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசிய உரச் செயலகம்<br>2. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி<br>3. கொழும்பு கொமர்ஷல் பசளைக் கம்பனி<br>4. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகை குடியேற்ற அதிகாரசபை<br>5. இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை (தேசிய உணவு மேம்பாட்டுச் சபை) | • (1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) பீடைக் கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தாவர பாதுகாப்புச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்<br>• (1978 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபைச் சட்டம் |

## 13.3 கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

01. **கடமைகளும் பணிகளும்**

கமத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைய "புதிய தொழில்நுட்பக் கைத்தொழிலொன்றை" உருவாக்குவதற்காக தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் எனும் விடயத்துக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலுக்கு உதவிபுரிதலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **விசேட முன்னுரிமைகள்**

1. பல்வேறு பூகோள நிலைமைகளுக்கு ஏற்றவாறு கால்நடை வளங்களை அறிமுகப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்.

2. பால் மற்றும் முட்டை உற்பத்திகளை அதிகரித்தல்.

3. தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையினூடாக உயர்தரத்திலான புற்களை அறிமுகப்படுத்துதல்.

4. மத்திய மற்றும் நடுத்தர கால்நடைப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்கான காணிகள் மற்றும் முதலீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

5. அரச விவசாயப் பண்ணைகளை உச்சஅளவில் பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

6. கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் ஏற்றுமதிக்காகவும் பாரியளவிலான உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்.

7. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன்மூலம் உள்நாட்டு உற்பத்திகள் மற்றும் நுகர்வுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்.

8. கால்நடைப் பண்ணைகள் மற்றும் உற்பத்தி வசதிகளுக்காக சர்வதேச தரங்கள் மற்றும் பயனுள்ள மேற்பார்வைக் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்தல்.

9. கால்நடைகளுக்கான வசதிகளை அதிகரித்தல்மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்<br>2. தேசிய கால்நடைவளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும்<br>3. மில்கோ (பிறைவேட்) லிமிட்டெட்<br>4. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி | • (1992ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க) விலங்கு நோய்ச் சட்டம்<br>• (1986ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) விலங்கு தீனிச் சட்டம்<br>• (1958ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) விலங்குகள் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) விலங்கு மருத்துவ தொழில்துறைச் சட்டம் |

14. *நீர்ப்பாசன அமைச்சர்*

01. **விடய எல்லை**

தீவு முழுவதிலுமுள்ள குளங்கள் மற்றும் நீர்ப்பாசனங்கள், நீர்த்தேக்கத் தொகுதிகள் மற்றும் அவைசார்ந்துள்ள கால்வாய்களைப் பாதுகாத்து கமத்தொழில் அலுவல்கள் போன்று மின்னுற்பத்தி நிலையங்களுக்கும் குடிநீர் வழங்கலுக்கும் தேவையான முகாமை, நீர்ப்பாசனத் தொகுதிகளை விரிவாக்குதல், நீரை வினைத்திறமை மிக்கதாகப் பயன்படுத்தும் புதிய தொழில்நுட்பத் திறமுறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள்

02. **கடமைகளும் பணிகளும்**

1. “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வேறு தேசிய கொள்கைகளுக்கு அமைவாக உயர்மட்டமான நீர்ப்பாசன முகாமைத்துவ மொன்றை, ஏற்படுத்துவதற்காக தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நீர்ப்பாசனம் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குதல் தேசிய வரவு செலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள் , அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

2. நீர் தலையூற்றுக்கள் அபிவிருத்தி செய்தல், நீர் வடிகாலமைப்பு மற்றும் வெள்ளங்களைக் கட்டுப்படுத்துதல், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கமத்தொழில், குடிநீர், மின்சாரத் தேவைகளுக்குரிய நீரை சிறந்த முகாமையின்கீழ் வழங்குதல்

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. உமாஓயா பல்துறை நீர்ப்பாசன திட்டம் மற்றும் நீர் மின்உற்பத்தி நிலையங்களை துரிதமாக தயாரித்தல்

2. மொரகஹகந்த, களுகங்கைச் சார்ந்த நீர்ப்பாசனத்தொகுதியை விரிவாக்கி வடமத்திய மற்றும் வடமேல் மாகணங்களில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் விநியோகத்தை விரிவாக்குதல்

3. கிங், நில்வள மற்றும் மல்வத்து ஓயா உள்ளிட்ட பிரதான நீர்த்திட்டங்களை துரித நிகழ்ச்சித்திட்டமொன்றின் கீழ் செயற்படுத்தல்

4. உள்நாட்டு நீர்ப்பாசன பொறியியல் சேவையைப் பாதுகாத்து நீர்ப்பாசனத்துறையின் தொழிற்சேவைகளை விரிவாக்குதல்

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. நீர்ப்பாசனத் திணைக்களம்<br>2. உமாஓய, மொரகஹகந்த, களுகங்கை, கிங் நில்வளா, மல்வத்து ஓயா உள்ளிட்ட ஏனைய பிரதான நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டங்கள்<br>3. பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்<br>4. இலங்கை பொறியியலாளர் மன்றம்<br>5. நீர் வழங்கல் சபை | • (2017ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க) இலங்கை பொறியியலாளர் மன்றச் சட்டம்<br>• (1946ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க) நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம்<br>• வெள்ளப்பெருக்கு பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் (1924 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க)<br>• அரசாங்க பொறிமுறைசார் கூட்டுத்தாபனச் சட்டம் (1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க)<br>• நீர் வழங்கல் சபைச் சட்டம் |

**14.1 மகாவலி வலயங்கள் சார்ந்த கால்வாய்களின் அகழிகள், வாய்க்கால்கள் மற்றும் வாழ்விடங்கள் , பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

நீர்ப்பாசன அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் “உயர்தரத்திலான நீர்ப்பாசன முகாமைத்துவமொன்றை” ஏற்படுத்துவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்கள் மற்றும் வாழ்விடங்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விடயத்திற்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவியளித்தல், தேசிய வரவு செலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களை செயற்படுத்தவும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும்,தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

**02. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. மகாவலி விவசாய வலயங்களில் நெல், தானிய வகைகள், பழவகைகள், மரக்கறிச் செய்கை, நன்நீர் மீன்வளர்ப்புச் செயற்பாடுகள் மற்றும் கால்நடை உற்பத்திகளை விருத்தி செய்யும் செயற்பாடுகள்.

2. மகாவலி வலயக் குடியிருப்புகளில், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விற்பனைச் சந்தை மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

3. மகாவலி வலயங்களில் உச்சபட்ச விவசாய உற்பத்திச் செயற்பாடுகளுக்காகக் காணிகளை உபயோகித்தல் மற்றும் முதலீடுகளை விருத்தி செய்தல்.

**03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. ஸ்ரீ லங்கா மகாவலி அதிகார சபை | • (1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஸ்ரீ லங்கா மகாவலி அதிகாரசபைச் சட்டம் |

**14.2 கிராமிய வயல்நிலங்கள் மற்றும் அவை சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

**01. கடமைகளும் பணிகளும்**

நீர்ப்பாசன அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் “உயர்தரத்திலான நீர்ப்பாசன முகாமைத்துவத்தினுள்” சகல நீர் மூலவளங்களைச் சுத்தப்படுத்தி சகலருக்கும் குடிநீர் மற்றும் நீர்ப்பாசன நீரை

வழங்குவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கிராமிய வயல்நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி எனும் விடயத்துடன் தொடர்பான கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளும் அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. ***அதிவிசேட முன்னுரிமைகள்***

1. வயற்காணிகளை செழுமையாக பன்படுத்திக் கொள்ளல் மற்றும் வயல்களை பயிரிடுவதற்குத் தேவையான புதிய குளங்களை சமூக அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் சீர்திருத்திக் கொள்ளல்
2. மழைநீரைக் களஞ்சியப்படுத்துவதற்காக இருக்கின்ற குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்கான கிராமிய மற்றும் ஏனைய குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை விஞ்ஞான ரீதியான தரவளவுகளின்படி மறுசீரமைத்து பராமரித்தல்.
3. ஆற்றுப்பள்ளத்தாக்குகள், கால்வாய் தடைகள், குளங்களின் தாழ்ந்த பகுதிகள் சுத்தப்படுத்தி குளநீரைப் பாதுகாப்பதற்குரிய வேலைத்திட்டமொன்றைத் தொடங்குதல்
4. கமநலச்சேவைகள் அபிவிருத்தித் திணைக்களம், நீர் வளங்கள் சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பவற்றை கூட்டிணைத்து அந்நிறுவனங்கள் குறிப்பிட்ட பிரிவினருடன் இணைந்த திறமுறையொன்றின் கீழ் பணியாற்றுதல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் |
|---|
| 1. கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்த நிறுவனங்கள் |

**15. காணி அமைச்சர்**

01. **விடய எல்லை**

தேசியக் காணிக் கொள்கையின் ஊடாக உயர்ந்தமட்டக் காணி முகாமைத்துவத்தின்மூலம் அபிவிருத்திப் பணிகள், தங்குமிட அலுவல்கள் மற்றும் பொதுத் தேவைகளுக்காகத் துரிதமானதொரு வேலைத்திட்டத்தின் கீழ் காணிகளை வழங்குதலும் எதிர்காலச் சந்ததிகளுக்காக நிலத்தின் பாதுகாப்பைக் கட்டிக்காத்தலும்.

02. **கடமைகளும் பணிகளும்**

2. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப்பிரகடனத்துக்குஅமைவாகவும்அரசினால்செயற்படுத்தஉத்தேசிக்கப்பட்டுள்ள வேறு தேசிய கொள்கையின் பேரிலும் சிறந்த மட்டத்தில் காணிகளை முகாமை செய்வதற்காக" உரிய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய காணி எனும் விடயத்திற்குரிய கொள்கைகளைத் தயாரித்தல், தேசிய வரவு செலவு, அரச முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளையும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும், நடைமுறைப்படுத்துதலும், தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. தச்சுத்தொழில், பிரம்புத்தொழில், பன்புல் கைத்தொழில் சார்ந்ததாகவுள்ள மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளுக்கு கூட்டுறவு முறையொன்றின் கீழ் குறைபயன்பாட்டிலுள்ள அரசகாணிகளை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் அந்த மூலப்பொருட்களைப் பயிரிடுவதற்கான வாய்ப்புகளை ஊக்குவித்தல்.

2. மகாவலி, உமாஓயா, மொரகஹகந்த போன்ற பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களினால் பாதிக்கப்பட்ட நபர்கள், வீடுகள், ஏனைய சொத்துக்கள், காணிகள், விவசாயக் காணிகள் என்பவை தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொண்டு துரிதமாக இழப்பீடுகளை வழங்குதல்.

3. அரசினால் கையேற்கப்பட்டுள்ள தனியார் காணிகள் அரச காணிகள் என்பவற்றை பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்காக குத்தகை அடிப்படையில் வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்குப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் அதற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

4. பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மற்றும் அரச பண்ணைகளுக்கு ஒதுக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்படாத காணிகளில் உள்நாட்டு மற்றும் சர்வதேசரீதியில் கிராக்கியுள்ள பூ வகைகள் மற்றும் சேதனச் செய்கைகளை செய்தல் மற்றும் காலநிலைக்குப் பொருத்தமான மேலதிக உணவுகளை பயிரிடுதல்.

5. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, தொல்பொருள் காரணிகள் இயற்கை வளங்கள் நகரமயப்படுத்தல் எதிர்காலத்தேவைகளைக் கருத்திற்கொண்டு காணிகள் பயன்பாட்டுக்கான தேசியக்கொள்கையொன்றைத் தயாரித்தல்.

6. காணிகள் தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்தல், அதற்கான கட்டமைப்பினை முன்னெடுத்தல்.

7. காணிகளை அளவிடுதல், வரைபடப்படுத்தல், காணித்தகவல்கள் மற்றும் உரிய சேவைகளை துரிதமாக வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப அணுகுமுறையுடன் கூடிய வினைத்திறமைகாண் திறமுறையொன்றைத் தயாரித்தல்

8. காணி கையேற்றல் செயற்பாடு மற்றும் காணிகளை வழங்கும் செயற்பாடு என்பவற்றை மீளாய்வு செய்து காணிகளற்ற குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் மற்றும் அபிவிருத்தி முதலீட்டுக் கருத்திட்டங்கள் உட்பட காணிகளைத் துரிதமாக விடுவிப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்.

9. பிம்சவிய காணிஉரிமையை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்தல். அக்காணிகளை விற்பதனால் காணிகளற்ற சமூகமொன்று உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளலும் காணிகளின் சொந்தத்தின் பெயரில் வங்கி நிதிக் காப்புறுதி நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய வகையிலான கொள்கைகளையும் மற்றும் சட்டரீதியிலான கட்டமைப்பொன்றை ஏற்படுத்துதல்.

10. மீதியாகவுள்ள காணிகளைப் பயன்படுத்துதல் தொடர்பான சிக்கலற்ற தெளிவான கொள்கைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

11. நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான காணிகளை விரைவாகவும் உரியவாறும் பெற்றுக்கொடுத்தல்.

12. மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரச காணிகள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வினைதிறனுடனான பொறிமுறைகளைத் தயாரித்தல்.

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்<br>2. காணி சீர்திருத்த ஆணைக்குழு<br>2. இலங்கை நிலஅளவையாளர் நாயகம் திணைக்களம்<br>3. நிலஅளவையாளர் மற்றும் நிலவரைபட நிறுவகம்<br>4. காணி அளவைச் சபை | • (1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க)காணி சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம்<br>• (1950ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க) காணி கொள்ளல் சட்டம்<br>• (1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்<br>• (1942 ஆம் அண்டின் 61 ஆம் இலக்க) காணி மீட்சி கட்டளைச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க)அரச காணி அளிப்புகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| | • (1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) அரச காணிகள் கட்டளைச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) அரச காணிகள் (ஆட்சி உரிமை மீளப் பெறுதல்) சட்டம்<br>• (2002ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) நில அளவைச் சட்டம் |

**15.1 காணி முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

காணி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "உயர்மட்டத்தில் காணிகளை முகாமை செய்வதற்குரியதாக" விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய காணி முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் அரச தொழில்முயற்சிக் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை தயாரிப்பதில் உதவி செய்தல் தேசிய வரவுசெலவு, அரசாங்க முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. பிம்சவிய வேலைத்திட்டத்தின்கீழ் அரச காணிகளைப் பெற்றவர்களின் காணிஉரிமையை உறுதிப்படுத்துவதற்காகச் சரியான முறையில் அளவைகளை மேற்கொண்டு கொடுப்பனவுப் பத்திரங்களை வழங்குதலைத் துரிதப்படுத்தலக்கான வழிமுறையொன்றை நடைமுறைப்படுத்துதல்.
2. இளம் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் கருத்திட்டமாக அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புகளை வழங்கி ஒரு இலட்சம் காணித்துண்டுகளை வங்கிகள் மற்றும் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு அவற்றை இளைஞர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3. பாவனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய எனினும் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படாத மற்றும் குறைபயன்பாட்டுக் காணிகள் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு அக்காணிகளை உச்சப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை உருவாக்குதல்.
4. அபிவிருத்தித் திட்டங்களுக்குக் கையேற்கப்பட்டு இதுவரை பயன்படுத்தப்படாத தனியார் காணிகளை அபிவிருத்தி தேவைகள் தொடர்பாக உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் அக்காணிகளைப் பயனுள்ள வகையில் அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.
5. இயற்கை அனர்த்தங்கள் அல்லது அரச அபிவிருத்தித் திட்டங்களினால் காணிகளை இழந்தவர்களுக்கு மாற்றுக் காணிகளை அல்லது இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதல்.
6. அரச தொழில்முயற்சிகளுக்கான காணிகள் மற்றும் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்<br>2. காணி உரிமைகள் நிர்ணயத் திணைக்களம் | • (1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) உரிமைகள் பதிவுசெய்தல் சட்டம்<br>• (1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) காணி நிர்ணய கட்டளைச் சட்டம் |

**16 கடற்றொழில் அமைச்சர்**

*01.* **விடய எல்லை**

தேசிய ரீதியில் மீன் பாவனைத் தேவைகளைப் பூர்த்திசெய்து, உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்டு வியாபாரச் சமுதாயத்தினை உருவாக்கி கடற்றொழில் சமூகத்தின் சமூகம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி தேசியப் பொருளாதாரத்தில் உயர் பங்களிப்பைக் காட்டுகின்ற கடற்றொழில் கைத்தொழிலை உருவாக்குதல்.

*02.* **கடமைகளும் பணிகளும்**

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமையவும் மற்றும் அரசினால் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வேறு தேசிய கொள்கைளுக்கு அமைவாகவும் "தன்னிறைவு பெற்ற கடற்றொழில் பொருளாதாரமொன்றை" உருவாக்குவதற்குரிய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கடற்றொழில் எனும் விடயத்துக்குரிய கொள்கைகளைத் தயாரித்தல் தேசிய வரவுசெலவு மற்றும் முதலீட்டு வேலைத்திட்டங்களின் கீழ் உள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*03.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. கரையோர பிரதேசங்களில் மீன்களின் தொகை அளவினைக் கூட்டுவதற்காக விஞ்ஞான ரீதியிலான முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
2. கடற்றொழில் துறைமுகங்களை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேவைப்பாட்டுக்கமைய புதிய துறைமுகங்களை நிர்மாணித்தல்.
3. சர்வதேச கடல் பிரதேசங்களில் கடற்றொழிலை விரிவாக்குவதற்காக தேசிய கம்பனிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
4. ரின்மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காகத் தனியார் கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.
5. உற்பத்தியாளருக்கும் மற்றும் பாவனையாளருக்கும் நியாயம் ஏற்படும் விதத்தில் மீன் உற்பத்தி மற்றும் சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து விரிவாக்குதல்.
6. வடக்கு மற்றும் கிழக்கு கடலில் அத்துமீறி மீன்பிடித்தலை இல்லாதொழித்தலும், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்புப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக இந்தியாவுடனான முரண்பாடுகளைத் தீர்த்துவைத்தல்.
7. மீனவ சமூகத்துக்குப் பயனுறுதியான வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
8. சமுத்திர பல்கலைக்கழகத்தை உபயோகப்படுத்தி இளைஞர் யுவதிகளுக்காக கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்
9. மீனவ சமூகத்தின் நலனோம்புகைச் செயற்பாடுகளை விரிவுபடுத்துதல்

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம்<br>2. நோர்த் சி லிமிட்டெட் | • (1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் சட்டம்<br>• (1990ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க) மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டச் சட்டம் |

**16.1 அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன்கள் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

1. கடற்றொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "தன்னிறைவு பெற்ற கடற்றொழில் பொருளாதாரமொன்றை" உருவாக்குவதற்காக தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் மற்றும் மீன் ஏற்றுமதி எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவியளித்தல், தேசிய வரவுசெலவு அரச முதலீடுகள் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள், மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக்கொண்ட அலங்கார மீன்கள் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்காகத் தேவையான வசதிகளை வழங்குதல்.
2. குளங்கள், களப்பு மற்றும் கரைநிலங்களை அண்டி நன்னீர் மீன்வளர்ப்புச் செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைத் தயார்செய்தல்.
3. பெரிய அளவிலான படகுகளின் வழிநடத்தல் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வதற்காக கடற்றொழில் துறைமுகத்தை விருத்தி செய்தல்.
4. பலநாள் கடற்றொழில் படகுகளுக்காகக் கடல்நீரை உபயோகித்து குளிரூட்டித் தொகுதியினை விருத்தி செய்தல் மற்றும் சூரிய வலுசக்தியைப் பாவிப்பதற்கு ஊக்குவித்தல்.
5. நவீன தொடர்பாடல் வசதிகள், குளிரூட்டிகள், எரிபொருள் வழங்குதல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளுடனான சகல கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூர நிலையங்களை விருத்தி செய்தல்.
6. கடல் மற்றும் நன்னீர் மீன்களை பெருக்குவதற்காக கடற்றொழில் சமூக சங்கங்கள் மற்றும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையோடு கூட்டிணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்.
7. சூழல்நேயமான நவீன அதிதொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன்மூலம் மீன் அறுவடையை விருத்தி செய்வதற்காக நடவடிக்கைகளை எடுத்தல்.
8. மீனவர்கள் மற்றும் அக்கைத்தொழிலில் ஈடுபடுவோரின் தொழில்சார் பயிற்சியையும் அறிவினையும் முன்னேற்றுதல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>2. இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்<br>3. வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றம்<br>4. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்<br>5. தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் | • (1998ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க) தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மைச் சட்டம் |

**17** பெருந்தோட்ட அமைச்சர்

01. **விடய எல்லை**

ஆராய்ச்சிரீதியான முறைகளை புதிய தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் உயர்ந்த நிலப் பயன்பாட்டினூடாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளைப் பல்வகைப்படுத்தலொன்றின் ஊடாக ஏற்றுமதிச் சந்தையை கவர்ந்துகொள்வதை இலக்காகக்கொண்டு முழுமொத்தப் பெருந்தோட்டத் துறையை புதியதொரு திசையை நோக்கித் திருப்புதல்.

*02.* **கடமைகளும் பணிகளும்**

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வேறு தேசிய கொள்கையின் பெயரிலும் “புதிய தொழில்நுட்பம் கலந்த ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பெருந்தோட்டக் கைத்தொழிலொன்றை” உருவாக்குவதற்காக தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதல் மற்றும் அதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய பெருந்தோட்ட விடயத்திற்குரிய தேசிய வரவுசெலவு அரச முதலீடுகள் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள், மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*03.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு நடுகை செய்யப்பட்டுள்ள காணிகளைத் துண்டித்து, குடியிருப்புகளாக்குவதை முழுமையாகத் தடைசெய்தல் மற்றும் அக்காணிகளை உச்சபட்சமாகப் பெருந்தோட்ட மற்றும் உப பயிர்ச்செய்கை அபிவிருத்திக்காக ஈடுபடுத்துதல்.
2. அரச மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகளை உச்சபட்சமாகப் பயிர்ச்செய்கை பல்வகைப்படுத்துவதற்கு உட்படுத்துதல் மற்றும் அவைசார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துதல்.
3. புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி தேயிலைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான பங்களிப்பை வழங்கக் கூடியதாக தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தை மீளமைத்தல்
4. பெருமளவிலான தேயிலை இருப்புக்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக பெறுமதிகள் சேர்க்கப்பட்ட விதத்தில் தேயிலை ஏற்றுமதியை ஊக்குவித்தல்
5. அரச மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டு துறையினதும் ஒத்துழைப்பில் சிலோன் டீ சார்பில் தேயிலைச் சந்தையை விரிவாக்குதல்
6. உள்நாட்டு சுத்தமான தேயிலையை மிகச் சிறந்த உற்பத்தியாக சர்வதேச சந்தையினுள் மேம்படுத்தல்

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேயிலை, இறப்பர் மற்றும் தென்னைத் தோட்டங்கள் (பிரித்தொதுக்குதல், கட்டுப்படுத்துதல்) சபை<br>2. இலங்கை தேயிலைச் சபை<br>3. தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்<br>4. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை<br>5. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | • (1958ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க) தேயிலை, இறப்பர் மற்றும் தென்னைத் தோட்டங்கள் (கூறுபோடுதலை கட்டுப்படுத்துதல்) சட்டம்<br>• (1975 ஆம் அண்டின் 14 ஆம் இலக்க) இலங்கை தேயிலைச் சபைச் சட்டம்<br>• 1957ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க) தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டம்<br>• (1958ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) தேயிலை உதவுதொகைச் சட்டம்<br>• (1959ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு) சட்டம்<br>• (1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க) தேயிலை ஆராய்ச்சிச் சபை சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) தேயிலை சக்தி நிதியச் சட்டம் |

**17.1 கம்பனித் தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

பெருந்தோட்ட அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "புதிய தொழில்நுட்பம் கலந்த ஏற்றுமதியை மையமாகக்கொண்ட பெருந்தோட்டத் தொழிலொன்றினை" உருவாக்குவதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் எனும் விடயம் தொடர்பாக கொள்கைகளை தயாரிப்பதற்கு உதவி புரிதல் தேசியவரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் பின்வரும் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகளின் விடயங்கள் மற்றும் பணிகளும் அதற்குரிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. தோட்டக் கம்பனிகளை உச்சப்பயனுள்ள வகையில் தேயிலை மற்றும் ஏனைய ஏற்றுமதிப் பயிர்களைச் செய்கைபண்ணுவதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் உயர்பெறுமதி மிக்க ஏற்றுமதி உற்பத்திகளாக அவற்றை மாற்றுவதற்குத் தேவையான சர்வதேச சந்தை நிலைமைகளை ஏற்படுத்துதல்.
2. சேதன தேயிலைச் செய்கையை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்.
3. உள்நாட்டுத் தேயிலையின் தரத்தைப் பாதுகாப்பதற்கான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்ததல்.
4. தோட்டத்துறையின் காணிகளை முறையாக பயன்படுத்தும் பொருட்டு திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்
5. தேயிலை, இறப்பர் தோட்டங்களைச் சார்ந்ததாக வேறு பயிர்ச் செய்கைகளை அறிமுகப்படுத்தல்
6. நவீன தொழில்நுட்ப முறைகள் மற்றும் இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்தி தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகளைப் பூரணமாக நவீனமயப்படுத்தலுக்குத் தேவையான நிதி வசதிகளைப் பெறுவதற்காக வங்கிமுறையுடன் தொடர்புபடுத்தல்.
7. கிராமிய மட்டத்திலான தேயிலைச் செய்கை மற்றும் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நிவாரணச் சேவைகள் முறையொன்றை அடிமட்டத்திலிருந்து நடைமுறைப்படுத்துதல்
8. சிறு மற்றும் நடுத்தரளவிலான இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் செய்கைகளை முன்னேற்ற ஊக்குவிப்பதன் மூலம் இறப்பர் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை மலிவுபடுத்தல்
9. உள்நாட்டு வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு இறப்பர் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்தல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்<br>2. வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியன தேயிலைத் தொழிற்சாலை<br>3. சிறிய தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை<br>4. மட்டுப்படுத்தப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி<br>5. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்<br>6. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்<br>7. வரை. இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம் | • (1975ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க) தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகச் சட்டம்<br>• சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சட்டம் (1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)<br>• இறப்பர் மீள்செய்கை நிவாரணச் சட்டம் (1953 ஆம்ஆண்டின் 36 ஆம் இலக்க)<br>• இறப்பர் ஆராய்ச்சி சபை கட்டளைச் சட்டம் (1930 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க)<br>• இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம் (1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) |

**17.2 தென்னை, கித்துல் மற்றும் பனஞ் செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மற்றும் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

1. பெருந்தோட்ட அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "புதிய தொழில்நுட்பம் கலந்த ஏற்றுமதியை மையமாகக்கொண்ட பெருந்தோட்டத் தொழிலொன்றினை" உருவாக்குவதற்காக தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தென்னை, கித்துல் மற்றும் பனஞ் செய்கை மேம்படுத்தல் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் எனும் விடயத்துடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகளை தயாரிப்பதற்கு உதவி புரிதல் தேசிய வரவு செலவு அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்களை செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தனியார் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கூடிய விளைச்சலைத்தரும் தென்னங்கன்றுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் தெங்குச்செய்கை மேற்கொள்ளப்படாத பிரதேசங்களுக்குப் பொருத்தமான தென்னங்கன்று வகைகளை அறிமுகப்படுத்துதல்.
2. வீட்டுத் தோட்டங்களில் தென்னைச் செய்கையை விரிவுபடுத்தும்வகையில் கூடிய விளைச்சல் தரும் தென்னங்கன்றுகளை அந்தந்தப்பிரதேசங்களின் பூகோளநிலைமைகளுக்குஏற்றவாறு பகிர்ந்தளிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.
3. பல்வேறு களைகளைக் கட்டுப்படுத்துவதற்காக உயிரின தொழில்நுட்பத் தீர்வுகளை அபிவிருத்தி செய்தல்.
4. பயிரிடும் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர தெங்கு செய்கையாளர்களை ஊக்குவித்தல்
5. தென்னந்தோட்டங்களில் மிளகாய், இஞ்சி, மஞ்சள், கற்றாளை, அன்னாசி போன்ற உப பயிர்ச்செய்கை உட்பட கால்நடைப் பண்ணைகளுக்கான ஊக்குவிப்புகளை வழங்குதல்.
6. உள்நாட்டு ரீதியில் தேங்காய்க்கான தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் தேங்காய், செவ்விளநீர் என்பவை தொடர்பாகப் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான மூலோபாயங்களைத் தயாரித்தல்.
7. தெங்குடன் சம்பந்தப்பட்ட தொழில்துறைகளை ஊக்குவிப்பதற்கான வசதிளை வழங்குதல்.
8. பெறுமதி சேர்த்தல் மற்றும் தொழில்நுட்பரீதியிலான புத்தாக்கங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி<br>2. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி<br>3. பனை அபிவிருத்தி சபை<br>4. தெங்கு செய்கைச் சபை<br>5. தென்னை அபிவிருத்தி அதிகார சபை<br>6. தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் | • (1971ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) தெங்கு பயிர்ச்செய்கை சபைச் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) துருசவிய நிதியச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கப்புறுக நிதியச் சட்டம்<br>• (1928 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) தெங்கு ஆராய்ச்சிக் கட்டளைச் சட்டம் |

## 17.3 கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

### 01. கடமைகளும் பணிகளும்

பெருந்தோட்ட அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "புதிய தொழில்நுட்பம் கலந்த ஏற்றுமதியை மையமாகக்கொண்ட பெருந்தோட்டத் தொழிலொன்றினை" உருவாக்குவதற்காக தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு எனும் விடயத்துக்குரிய கொள்கைகளைத் தயாரித்தல் தேசிய வரவுசெலவு அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### 02. அதிவிசேட முன்னுரிமைகள்

1. கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உட்பட சிறு பெருந்தோட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினைத் தொடர்புபடுத்தி அவர்களது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்.
2. ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கூடிய விளைச்சலைதரும் பயிரினங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
3. இந்த பயிர்களுடன் சம்பந்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காகப் புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதலும் ஏற்றுமதிகளை விரிவுபடுத்துதலும்.
4. ஐந்து ஏக்கருக்குக் குறைவான பெருந்தோட்ட உரிமையாளர்களின் பயன்பாட்டுக்காக கறுவா தயாரிப்பு மற்றும் பதனிடும் நிலையங்களை விரிவுபடுத்துவதற்காகப் புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல்.
5. திரிபோச மற்றும் விலங்குகளின் உணவுக்காகத் தேவைப்படும் சோளத்தை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காகக் காணிகள் அமைச்சு மற்றும் வங்கிகளுடன் இணைந்து அதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்.
6. மூடப்பட்டுள்ள சகல சீனித் தொழில்சாலைகளையும் தாமதமின்றி மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் தேவைப்பாடுகளுக்கமைய புதிய கைத்தொழில்சாலைகளை நிர்மாணிப்பதற்கான ஊக்குவிப்புகளை வழங்குதல்.
7. பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீரினை செயற்றிறன் மிக்கதாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் மூலதனத் தேவைகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுத்தல்.
8. வீடுகளில் பயன்படுத்துவதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் மிளகுச் செய்கையை மேற்கொள்ளுவதற்காக அப்பயிர்களைச் செய்கைபண்ணும் பிரதேசங்களில் ஏற்றுமதிக் கிராமங்களை ஆரம்பித்தல்

### 03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்<br>2. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி<br>3. கந்தளாய் சீனிக் கம்பனி<br>4. கரும்பு ஆராய்ச்சி நிறுவகம்<br>5. கல்ஓயா பெருந்தோட்டக் (தனியார்) கம்பனி<br>6. சரக்குவகைகள் மற்றும் அதனோடிணைந்த உற்பத்திகள் விற்பனைச் சபை<br>7. ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் | • (1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க) கரும்பு ஆராய்ச்சி நிறுவகச் சட்டம்<br>• ஏற்றுமதி கமத்தொழில் அபிவிருத்திச் சட்டம் (1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) |

## 18 நீர்வழங்கல் அமைச்சர்

### 01. விடய எல்லை

தீவின் அனைத்து வீடுகளும் உள்ளடங்கும் வகையில் நீர் வழங்குதலும், இருக்கின்ற நீர்வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புப் பகுதிகளை உயர்மட்டத் தரத்தில் நடாத்திச் செல்லுதல், பேணுதல், பராமரித்தல் மற்றும் கொள்ளளவை அதிகரிப்பதற்கும், மலசலகூடக் கழிவுகளை அகற்றுவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குமாக தனியார் மற்றும் அரச முதலீடுகளை ஊக்குவித்து தரவளவுகொண்ட குடிநீர் வழங்கலும் விநியோகமும்.

### 02. கடமைகளும் பணிகளும்

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப்பிரகடனத்துக்கு அமைவாகவும் அரசினால் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றைய தேசிய கொள்கையின் பெயரிலும் "அனைவருக்கும் நீர்" வழங்குவதற்காகத் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நீர் வழங்கல் எனும் விடயம் தொடர்பான கொள்கைளை ஆக்குவதற்கு உதவிபுரிதல் தேசிய வரவுசெலவு அரசாங்க முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் அதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### 03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. அனைவருக்கும் நீரினை வழங்குவதற்காகப் புதிய நீர்வழங்கல் நீர்வடிகாலமைப்புக் கருத்திட்டங்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்துதல் ;
2. விவசாய அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் விடய எல்லைகளின் கீழுள்ள முறையே கிராமிய குளங்கள், நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து நீர்பாதுகாப்பு மற்றும் கிராமிய, நகர்ப்புற நீர்வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் ;
3. குடிநீர்க் குழாய்க் கட்டமைப்பு தொகுதியின் நீரினை விநியோகிக்கும் போது ஏற்படும் வீண்விரயத்தையும் நீர் விரயத்தையும் தடுத்தல்.

### 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை<br>2. நீர் வளங்கள் சபை | • 1974ஆண்டின் 02ஆம் இலக்க) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்<br>• (1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) நீர் வளங்கள் சபைச் சட்டம் |

## 18.1 கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

### 01. கடமைகளும் பணிகளும்

நீர்வழங்கல் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "அனைவருக்கும் நீர்" வழங்குவதற்காக விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கிராமிய மற்றும் பிரதேச நீர்க் கருத்திட்ட அபிவிருத்தி எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவிபுரிதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழ் கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*02.* ***அதிவிசேட முன்னுரிமைகள்***

1. சமூக நீர்வழங்கல் மற்றும் அதற்கான கருத்திட்டங்களைச் செயற்றிடனும் ஒரு ஒழுங்கு முறைக்கமையவும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. கிராமப்புற மக்களுக்கு சிறந்த தரத்திலான குடிநீரினை வழங்குவதற்காக சமூக நீர்வழங்கல் திட்டத்தைப் பராமரித்தலும் மேம்படுத்தலும்.

3. கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கலை நிலையாக மேற்கொள்ளல் மற்றும் நீர்த்தேக்கங்கள், நீரேந்து பிரதேசங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் நீரினைப் பாதுகாத்தலும்.

4. தேசிய நீரப்பாசனக் கட்டமைப்பினுடாகக் கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் நடைமுறையிலிருக்கும் நீர்வழங்கல் கருத்திட்டங்கள் சார்ந்த நீர் வழங்கல் திட்டங்களைத் துரிதப்படுத்துதல்

*03.* ***உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்***

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* |
|---|
| 1. தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் |

***19. மின்சக்தி அமைச்சர்***

*01.* ***விடய எல்லை***

நீண்டகால மின்னுற்பத்தித் திட்டத்தைப் பயன்படுத்தி அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் தேவைகளுக்கேற்ப மின்சக்தித் தேவைகளைப் பூர்த்திசெய்தலும் இலங்கையின் வியாபாரச்சந்தை போட்டிகரத்தன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் மின்சக்தியை வழங்குதலும் மற்றும் எரிசக்தி பாதுகாப்பைத் தாபித்தலும்.

*02.* ***கடமைகளும் பணிகளும்***

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாகவும் அரசினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் ஏனைய கொள்கைத் திட்டங்களின் அடிப்படையிலும் "குறைந்த செலவிலான மின்னுற்பத்திக் கலப்பு மற்றும் வினைதிறமையாகப் பயன்படுத்துவதையும் விநியோகிப்பதையும் உறுதிப்படுத்துவதற்காக" தொடர்புடைய இராஜாங்க அமைச்சுக்காக கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய **மின்சக்தி** எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*03.* ***அதிவிசேட முன்னுரிமைகள்***

1. உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியின் செயற்றிறன் மற்றும் உச்சமட்டப் பாவனையை உறுதிப்படுத்துவதற்காக செவ்வையான வலையமைப்பொன்றை அபிவிருத்தி செய்தல் ;

2. லக் விஜய நிலக்கரி மின்சக்தி உற்பத்திக் கருத்திட்டக் கொள்ளளவுக்காக முதலீடுகளை விரிவுபடுத்துதல் ;

3. புதுப்பிக்கத்தக்க மின்சக்தி, அனல் மின்சார நிலையங்கள், இயற்கை வலு நிலையங்களின் கலப்பினைச் சமநிலைப்படுத்தி மின் உற்பத்திக்காகச் செய்யப்படும் செலவினைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியின் போது ஏற்படும் நிர்ணயிக்கப்படாமையை அகற்றுதல் ;

4. நீண்டகால தேவைப்பாட்டை அடிப்படையாகக்கொண்ட மின் உற்பத்தித் திட்டங்களைச் செயற்படுத்துதல் ;

5. மின் பரவும் முறை மற்றும் விநியோகச் செயற்பாடுகளைத் திறன்படுத்துதல் ;

6. பொறிசார் உற்பத்திச் செயற்பாட்டின் போது சர்வதேச போட்டித்தன்மை உள்ளவாறு மின்வலுச் செலவினைக் குறைத்தல்.

*04.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. இலங்கை மின்சார சபையும் அதன் துணைக் கம்பனிகளும்<br>2. வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனி<br>3. இலங்கை மின்சாரக் கம்பனி<br>4. வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி | • (1969ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்<br>• (2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) இலங்கை மின்சாரச் சட்டம் |

**19.1 சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

*01.* **கடமைகளும் பணிகளும்**

*மின்சக்தி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் பேரில் "குறைந்த செலவிலான மின்னுற்பத்திக் கலப்பு மற்றும் வினைதிறமையாகப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக" விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்டம் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.*

*02.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தினை இயற்கைவாயு ரேபைன் சார்ந்த மின்னுற்பத்தி நிலையமாக மாற்றுவதும் கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துதலும் ;

2. உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியின் செயற்றிறன் மற்றும் உச்சப்பயனை உறுதிப்படுத்துவதற்காகச் செம்மையான கட்டமைப்பொன்றை அபிவிருத்தி செய்தல் ;

3. வீடுகள், அலுவலகங்கள் மற்றும் கைத்தொழில்சாலைகளுக்குக் குறைந்த செலவில் மின்சாரம் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு சூரியசக்தியைப் பயன்படுத்தலை ஊக்குவித்தல் ;

4. மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தனியார்துறையினர் மற்றும் தொழில் முயச்சியாளர்களை ஊக்குவித்தல் ;

5. 2020 ஆம் ஆண்டாகும் போது புறோட்லாண்ட் நீர் மின்னுற்பத்தி நிலையம், 2021 ஆம் ஆண்டாகும் போது உமாஓயா திட்டம், 2023 ஆம் ஆண்டாகும் போது மொரகொல்ல திட்டம், 2024 ஆம் ஆண்டாகும் போது தரபிட்டிகல திட்டம் என்பவற்றை சீத்தாவக்க தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைத்தல் ;

6. கொழும்பு பிரதேசத்திலுள்ள அனைத்து பெற்றோலிய மின்னுற்பத்தி நிலையங்களை இயற்கைவாயு ரேபைன் மின்னுற்பத்தி நிலையங்களாக மாற்றுதல் ;

7. 2021 ஆம் ஆண்டாகும் போது மன்னார் காற்றாடி மின்னுற்பத்தி நிலையத்தினூடாக 100 மெ.வோ மின்சாரத்தையும் மன்னார், பூநகரி மற்றும் மொனராகலை பிரதேசத்திலுள்ள காற்றாடி மற்றும் சூரியஒளி எரிசக்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன்மூலம் 800 மெ.வோ மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைத்தல் ;

8. வீடுகளுக்கு, சிறிய வர்த்தக நிலையங்களுக்குக் குறைந்த செலவிலான எரிசக்தியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கூரையில் பொருத்தப்படும் சூரியசக்தி கட்டமைப்பைப் பயன்படுத்தலை ஊக்குவித்தல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகைச் சபை<br>2. இலங்கை அணுசக்தி எரிசக்தி சபை<br>3. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை | • (2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) இலங்கை அணுசக்தி சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை சட்டம் |

## 20. வலுசக்தி அமைச்சர்

01. **விடய எல்லை**

வலுசக்திக் கட்டுக்காப்பை உறுதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் எரிபொருள் இறக்குமதியைக் குறைத்துக் கொள்வதற்காக தேசிய ரீதியிலான தேவைகள் நிறைவுறும் வகையில் பெற்றோலியம் மற்றும் அனல்வாயு உள்ளிட்ட உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்தல், களஞ்சிய வசதிகளை விரிவாக்கல், விநியோக நடவடிக்கைகள் மற்றும் அதற்குரிய தரவளவுகளின் ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகளும் தொடர்புடைய அரச தொழில் முயற்சிகளை வினைத்திறன்மிக்கதாக நடாத்திச் செல்லுதல்.

02. **கடமைகளும் பணிகளும்**

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாகவும் நடைமுறைப்படுத்த எரித்பார்க்கும் ஏனைய தேசியக் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாகவும் “குறைந்த செலவிலான மின்னுற்பத்திக் கலப்பு மற்றும் வினைதிறமையாகப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக” தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வலுசக்தி எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. இலங்கையில் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் தன்னிறைவினை உறுதிப்படுத்துவதற்கான கொள்கை மற்றும் மூலோபாயக் கட்டமைப்பினைத் தாபித்தல் ;
2. இயற்கைவாயு தொடர்பான ஆராய்ச்சிகளைத் துரிதப்படுத்துதல் ;
3. எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்து அவற்றை நவீனமயப்படுத்துதல் ;
4. திருகோணமலையிலுள்ள எண்ணெய் குதங்களைப் புனரமைத்தலும் அபிவிருத்தி செய்தலும் ;
5. மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தனியார்துறை தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல் ;
6. கைத்தொழில் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி மிகவும் செயற்திறன்மிக்க எரிசக்தி உற்பத்தியை ஊக்குவித்தல் ;
7. புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை இயற்றுவதன்மூலம் கட்டிடத்துறையில் வலுசக்தி பயன்பாட்டை உச்ச அளவுக்கு கொண்டு வருதல்

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்<br>2. வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சியத் தொகுதி<br>3. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திப் பணியகம்<br>4. வரையறுக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனி | • (1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க)இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க)பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி சட்டம் |

## 21. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

### 01. விடய எல்லை

இலங்கை இந்திய சமுத்திர வலையமைப்பின் வணிக மற்றும் நிதிசார் மையமாகவும் சர்வதேசப் பொறிசார் மற்றும் சேவை வழங்குகை மையமாகவும் தாபிப்பதற்குத் தேவையான துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை விநியோகத் தொகுதியொன்றைத் தாபித்தல்.

### 02. கடமைகளும் பணிகளும்

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாகவும் நடைமுறைப்படுத்த எரித்பார்க்கும் ஏனைய தேசியக் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாகவும் "போட்டிகரமான வகையில் ஏற்றுமதி, இறக்குமதி வசதிகளை ஏற்படுத்துவதற்கு துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல்" என்பதற்குரியதாக இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### 03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை கடற்துறைமுகங்களை வாணிபம் மற்றும் பயணிகள் துறைமுகங்களாக விருத்தி செய்தலும் முதலீடுகளை விரிவாக்குதலும் ;

2. அம்பாந்தோட்டை துறைமுகத்தை பொறிசார் மற்றும் சேவைத்துறைமுகமாக அபிவிருத்தி செய்தலும் கப்பல்களை பராமரித்தல், புதுப்பித்தல் மற்றும் கப்பல்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குதல் போன்ற சேவைகளை வழங்குவதற்காக உள்நாட்டு வியாபாரங்களுக்கு வசதிகளை ஏற்படுத்தல்.

### 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை துறைமுக அதிகாரசபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்<br>2. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்<br>3. வாணிப கப்பற்றுறைச் செயலகம் | • (1971ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) இலங்கை கப்பற்றொழிற் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டம்<br>• (1865 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) கப்பல் உதவியாளர்கள் கட்டளைச்சட்டம்<br>• (1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க) வணிகக் கப்பற்றொழிற் சட்டம்<br>• (1979ஆண்டின் 51ஆம் இலக்க) இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டம் |

## 21.1 களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள் மற்றும் இயந்திரப்படகுகள் மற்றும் கப்பற்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

### 01. கடமைகளும் பணிகளும்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் பேரில் "போட்டிகரமான வகையில் ஏற்றுமதி, இறக்குமதி வசதிகளை ஏற்படுத்துவதற்கு துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல்" என்பதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள் துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப்படகுகள் மற்றும் கப்பற்தொழில் அபிவிருத்தி எனும்

விடயத்துடனும் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. தனியார் துறையின் பங்குகொள்ளலில் பேலியகொட, வியங்கொட மற்றும் இரத்மலானை ஆகிய பிரதேசங்களில் வீதிகள் மற்றும் புகையிரதத் தொடர்பினை அடிப்படையாகக் கொண்ட கொள்கலன் முனையங்களை அபிவிருத்தி செய்தல்.

2. மீள்க்கப்பல் ஏற்றுகைகள் வழிநடத்தும் இயலளவு, களஞ்சிய வசதிகள் கொள்கலன் முனையங்கள், வழங்கல் வசதிகள் மற்றும் இயந்திரப் படகுகள் மற்றும் அத்துடன் கப்பற்றுறை அபிவிருத்தியை மேம்படுத்தல்.

3. பிராந்திய தேவைகள் மற்றும் தேசிய பொருளாதாரத்தின் தேவைக்கேற்ப காலி, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.

4. தேசிய கைத்தொழிலாக கடற்றொழில், கப்பற்றுறை மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றிற்குத் தேவையான இயந்திரப் படகுகளைத் தயாரித்தலும், மேம்படுத்தலும்.

5. வெளிநாட்டுச் சந்தை தேவைகளை இலக்காகக் கொண்டு ஏற்றுமதிக்காக கப்பல்கள் மற்றும் இயந்திரப் படகுகளை பராமரித்தல், பழுதுபார்த்தல், தயாரித்தல் பணிகளை விரிவாக்குதலும் ஊக்குவித்தலும்.

6. கப்பல்கள் மற்றும் இயந்திரப் படகுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வசதிகளும் அந்த தயாரிப்புகளுக்குத் தேவையான தடாகங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

7. இலங்கைத் துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கைச் சுங்கத்துடன் ஒருங்கிணைந்து செயற்படல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதியான சட்டகம்**

| செயற்படுத்த வேண்டிய சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் |
|---|
| • கிரேவிங் டொக் மற்றும் காப்புரிமை கப்பல் கட்டளைச் சட்டம் (1908 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) |
| • இயந்திரப் படகுகள் கட்டளைச் சட்டம் (1900 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) |

22. **நெடுஞ்சாலைகள் அமைச்சர்**

01. **விடய எல்லை**

பொதுமக்கள் போக்குவரத்துக்குத் தேவையான வீதி வசதிகளை வழங்குதல் மற்றும் இலங்கையை அபிவிருத்தியடைந்த தொரு பொருளாதாரத்தை நோக்கி எடுத்துச் செல்வதற்குத் தேவையான வீதித் தொகுதியினைத் தாபித்தல்

02. **கடமைகளும் பணிகளும்**

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் ஏனைய கொள்கைத் திட்டங்களின் அடிப்படையில் "அத்துடன் தொடர்பான நவீன வீதித் தொகுதியொன்றை" என்பதற்குரியதாக இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நெடுஞ்சாலைகள் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. தொடர்புடைய பொருளாதார, முதலீட்டு வலயங்கள் மற்றும் கிராமீய அத்துடன் நகர வீதிகளை இணைத்து அபிவிருத்தி செய்யப்படாத வீதிகளை சீர்திருத்தலும், வீதித் தொகுதியை பராமரித்தலும் ;

2. கொழும்பு கண்டி துறைமுகத்திற்கு பிரவேசிக்கும் உயர்அதிவேகப் பாதை, வடக்கு அதிவேகப்பாதை, ருவன்புர அதிவேகப் பாதை, புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துருகிரிய அதிவேகப்பாதையைப் பூர்த்தி செய்தல் ;

3. செயற்திறன்மிக்க வீதி போக்குவரத்துத் திட்டமொன்றைச் செயற்படுத்தி வாகன நெரிசலைக் குறைப்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் தொகுதியொன்றை ஆக்குதலும், குறித்த ஒவ்வொரு பிரதான நகரத்திலும் பொறிசார் நிலைக்குத்து வாகனத் தரிப்பிடங்களை அமைத்தல்.

4. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம் :**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. வீதி அபிவிருத்தி அதிகார சபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | • (2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) தேசிய பொது வழிகள் சட்டம்<br>• (1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க) வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் |

**22.1 கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

நெடுஞ்சாலைகள் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "அத்துடன் தொடர்பான நவீன வீதித் தொகுதியொன்றை" தாபிப்பதற்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் எனும் விடயத்துடன் தொடர்பான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவியளித்தலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. கிராமிய பாதை வலையமைப்பை அபிவிருத்தி செய்தலும் நவீனமயப்படுத்தலும் ;
2. பிரதான பாதைகள் மற்றும் அதிவேகப் பாதைகளுக்காக உயர்மட்டத்திலான பிரவேசத்திற்காக மாற்று பாதைத் தொகுதியொன்றை தயாரித்தல் ;
3. பாதை வலையமைப்புடன் இணைந்த பாலங்கள் தொகுதியை நவீனமயப்படுத்தல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* |
|---|
| 1. மகநெகும |

**23. போக்குவரத்து அமைச்சர்**

01. **விடய எல்லை**

பயணிகள் மற்றும் பண்டங்களை ஏற்றிச்செல்லல், சுற்றுலாப் பயணிகளுக்குரிய வசதிகள், தொடர்புடைய உட்டகட்டமைப்பு வசதிகள், சேவைத் தரவளவுகள், வீதி இடநெருக்கடிகள் மற்றும் விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளும் முழுமொத்தப் போக்குவரத்துச் சேவையை பொதுவானதொரு நேரசூசிகைக்கு அமைய செயற்படும் மக்களின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்படும் போக்குவரத்துச் சேவையினைப் பேணுதல், தாபனக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரப்பாதைகளை அடிப்படையாகக் கொண்ட சூழல்நேய அத்துடன் மக்கள்நேய போக்குவரத்துத் தொகுதியொன்றைத் தாபித்தல்.

02. **கடமைகளும் பணிகளும்**

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் ஏனைய கொள்கைகளின் அடிப்படையில் "வினைத்திறன்மிக்க அத்துடன் சூழல்நேய பொதுப்

போக்குவரத்துத் தொகுதியொன்றுக்காக போக்குவரத்து வலையமைப்பை விருத்தி செய்வதற்கு'' இராஜாங்க அமைச்சுக்குரிய கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய **போக்குவரத்து** எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. சூழல்நேய போக்குவரத்து தொகுதியொன்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளையும், ஒழுங்குவிதிகளையும் தயாரித்தல் ;
2. பொதுப்போக்குவரத்துத் தொகுதியின் மீது மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக உயர்தரத்திலான வீதி வசதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் ;
3. வீதி நெருக்கடி, பயணிகள் நெருக்கடி மற்றும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிகளையும் சட்டதிட்டங்களையும் அறிமுகப்படுத்தல் ;
4. அரசாங்கம் மற்றும் தனியார்துறை போக்குவரத்துச் சேவைகளையும், புகையிரதச் சேவைகளையும் பொதுவானதொரு நேரசூசிக்கமைய இணைந்ததொரு திட்டத்தின் கீழ் ஏற்படுகின்ற போக்குவரத்துச் சேவையாக செயற்படுத்துவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்ப ஈ-டிக்கட் முறையொன்றை அறிமுகப்படுத்தல் ;
5. புகையிரதம் மற்றும் பேரூந்து தரிப்பிடங்களைச் சார்ந்ததாக பொது வசதிகளையும், பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் ;
6. புகையிரத மற்றும் பேரூந்து சேவைக்குத் தேவையான புகையிரதங்கள் மற்றும் பேரூந்துகளை பராமரித்தல் ;
7. புகையிரதப் பெட்டிகள் மற்றும் பேரூந்துகள் தயாரிப்பு மற்றும் போக்குவரத்துத்துறைக்குரியதாக உள்நாட்டு கைத்தொழில் தொகுதியொன்றை கட்டியெழுப்புவதற்குத் தேவையான பெறுகை முறைகளை அறிமுகப்படுத்தல் ;
8. கொழும்பு அம்பாந்தோட்டை காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு புகையிரதங்கள் மூலம் பொருட்களை கொண்டு செல்வதற்குத் தேவையான வசதிகளை தாபித்தலும் விரிவாக்குதலும் ;
9. தகவல் தொழில்நுட்பத்தில் ஈடுபடுவதன் மூலம் மோட்டார் வாகனப் பதிவை மக்கள் நேயமிக்க வினைத்திறமையான அத்துடன் ஊழலற்ற செயல்நெறியாக மாற்றுதல்.

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு<br>2. வீதிப் பாதுகாப்புப் பற்றிய தேசிய மன்றம்<br>3. இலங்கை புகையிரதத் திணைக்களம் | • (1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) தேசிய போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டம்<br>• (1950ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) புகையிரதச் சட்டம் |

**23.1 வாகனங்களை ஒழுங்குபடுத்தல், பஸ் வண்டி போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் ''வினைத்திறமைமிக்க அத்துடன் சூழல்நேய பொதுப் போக்குவரத்துத் தொகுதியொன்றுக்காக போக்குவரத்து வலையமைப்பை விருத்திசெய்வதற்கு'' உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்துப்

போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. இலங்கைப் போக்குவரத்துச் சபையை இலாபம் உழைக்கும் நிறுவனமாக நவீனமயப்படுத்தலும் பிரதான பஸ் தரிப்பு நிலையங்களில் பொது வசதிகளை விருத்தி செய்தலும் ;
2. தற்கால பஸ் குழாங்களை மீள்தாபித்து கொழும்பு மற்றும் பிரதான நகர எல்லைகளினுள் செலுத்துவதற்காக சூழல்நேய புதிய பேரூந்துகளை அறிமுகப்படுத்தலும் தனியார் பயணிகள் போக்குவரத்துச் சேவையினையும் பசுமை பாய்ச்சலுக்கமைய மேற்கொள்வதற்குரிய வேலைத்திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும் ;
3. புகையிரதப் பெட்டிகள் பேரூந்துகள் மற்றும் மோட்டார் வாகனங்களை உள்ளூர் ரீதியில் தயாரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்தல் என்பவற்றிற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் போக்குவரத்துச் சேவையொன்றை உருவாக்குதல் ;
4. பாடசாலை பேரூந்துச் சேவைகளை மாணவர்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்தும் வகையில் தரவளவுகளின் கீழ் வலுப்படுத்தல் ;
5. கிராமிய பிரதேசங்களுக்கு பொதுப்போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுவதை விதிமுறைப்படுத்துவதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையை பயணிகள் மற்றும் பண்டங்களை ஏற்றிச் செல்வதில் ஈடுபடுத்தல் ;
6. பயணிகள் மற்றும் போக்குவரத்து ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் போக்குவரத்துச் சேவைகளை உயர் மட்டத்தில் ஒழுங்குபடுத்தல் ;
7. சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போதும், மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் போதும் ஏற்படும் பலவித மோசடிகளை அகற்றி வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்குதல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் கம்பனி<br>2. இலங்கை போக்குவரத்துச் சபை<br>3. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்<br>4. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | • (2005ம் ஆண்டின் 27ஆம் இலக்க) இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டம்<br>• (1997ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம் |

24. **இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்**

01. **விடய எல்லை**

அபிமானம் மிக்க, சமநிலையான ஆளுமைகொண்ட, பலம்வாய்ந்த இளம் சமுதாயத்தை உருவாக்குதல், வெளிவாரிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி ஆரோக்கியமான சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்தினை உருவாக்குதல், விளையாட்டு நேயமிக்க மக்கள் சமூகம், நகர அபிவிருத்தி, சுற்றுலா, வணிக மற்றும் சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்பும் விளையாட்டுக் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புதல்.

02. **கடமைகளும் பணிகளும்**

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் ஏனைய கொள்கைகளுக்கு அமைவாக "அபிமானம் மிக்க, சமநிலையான ஆளுமைகொண்ட, பலம்வாய்ந்த இளம் சமுதாயத்தை உருவாக்குதலுக்காக" தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு

கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. நாட்டின் கல்வி, சமூக, பொருளாதார, அரசியல், கலாசார தூரநோக்குக்காக இளைஞர்களின் கலந்துகொள்ளலுடன் முனைப்பான பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான திறமுறைகளைத் தயாரித்தல் ;
2. பொருளாதாரத்துறையினுள் இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு உச்சகட்ட வாய்ப்புக்களை வழங்கி ஊக்குவித்தலும், புதிய வாய்ப்புக்களை அறிமுகப்படுத்துவதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தலும், செயற்படுத்தலும் ;
3. அரச தனியார் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களுக்காக ஏற்ற இலங்கை இளைஞர்களை சரியாக இனமறிவதை இலகுபடுத்துவதற்காக இளம் மனிதவள தரவு வங்கியொன்றை ஆரம்பித்தல் ;
4. சர்வதேச, தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான செயல்களுக்காக திறன்கள் அபிவிருத்தியை விஸ்தரித்தல் ;
5. விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, சுற்றுலா, நகரச் செயற்பாடுகள் என்பவற்றின் மூலம் சர்வதேச தொடர்புகளை கட்டியெழுப்பும் விளையாட்டுத்துறை பொருளாதாரமொன்றை இலங்கையில் தாபித்தல் ;
6. இலங்கையில் இளைஞர் யுவதிகளிடையே பல திறமைகள் நிறைந்த விளையாட்டுப் பங்களிப்பினை ஏற்படுத்தி சர்வதேச விளையாட்டுச் சூழலொன்றை உருவாக்குதல் ;
7. விளையாட்டுச் சங்கங்கள், அமைப்புக்கள் மற்றும் வியாபார சமூகத்தினரை விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளக் கூடியதாக ஊக்குவித்தல் ;
8. தேக ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் உடற்பயிற்சிகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை அதிகரிப்பதற்கான வழிகாட்டல்களையும் ஊக்குவிப்புகளையும் வழங்குதல்.

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. விளையாட்டுத்துறை அபிவிருரத்தித் திணைக்களம்<br>2. தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம்<br>3.. தேசிய இளைஞர் படையணி<br>4. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு<br>5. தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்<br>6. மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்புத் திணைக்களம்<br>7. ஸ்மார்ட் ஸ்ரீ லங்கா | • (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) தேசிய இளைஞர் சேவை மன்றச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இளைஞர் படையணிச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் பற்றிய கட்டளைச் சட்டம்<br>• (1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) தேசிய அரசப் பேரவையின் விளையாட்டுத்துறைச் சட்டம்<br>• (2019 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க) விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளைத் தடுக்கும். |

**24.1 கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "பலம்வாய்நத இளம் சமுதாயத்தை உருவாக்குதலுக்காக" விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு எனும் விடயத்துடனும்

பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. இளமையின் பலம் சமூக விரோதி பிரிவுகள் மீது பிரவேசிப்பதை தவிர்த்துக் கொண்டு பாடசாலைக் கல்வியிலிருந்து பாடங்களுக்குப் புறம்பான செயற்பாடாகவும் இளைஞர் மன்றங்கள், விளையாட்டு மன்றங்கள் என்பவற்றினூடாகவும் இளைஞர்களுக்கிடையில் விளையாட்டுக்களை அறிமுகப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.

2. கல்விக்கு மேலதிகமாக உடற்கல்வி மற்றும் விளையாட்டுகளில் பாடசாலைப் பிள்ளைகளை கவர்ந்து கொள்வதன் மூலம் ஆரோக்கியமான சிறுவர் சந்ததியொன்றை உருவாக்குவதற்குரிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

3. நாடு பூராவும் பரந்திருக்கும் கிராமீய பாடசாலைகளில் விளையாட்டுக்களில் திறமை கொண்டுள்ள பிள்ளைகளை சிறு பிராயத்திலிருந்தே இனமறிந்து அவர்களின் திறமைகளை சர்வதேச மட்டத்தை நோக்கி கொண்டு செல்வதற்குத் தேவையான தகுந்த போசணை பயிற்சி உட்பட வேறு வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

4. கல்விக்கு மேலதிகமாக உடற்கல்வி மற்றும் விளையாட்டுக்களுக்காக பாடசாலைப் பிள்ளைகளை கவரும் வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்தல்.

5. நாடுபூராக அமைந்துள்ள விளையாட்டரங்குகள் மற்றும் விளையாட்டு நிலங்களை அங்கீகரிக்கப்பட்ட தரவளவுக்குட்படுத்தி அவற்றை அதற்கேற்றவாறு அபிவிருத்தி செய்தல்.

6. உள்ளூர் சம்பிரதாயமாகவிருக்கும் விளையாட்டுக்களை மேம்படுத்துவதற்குரிய வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

7. சர்வதேச தரவளவுகளுக்கமைய விளையாட்டுக் கல்வியை விஸ்தரித்தல்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசிய விளையாட்டுத்துறை அபிவிருத்திக் கல்லூரி<br>2. தேசிய விளையாட்டுத்துறை மன்றம்<br>3. சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகாரசபை<br>4. விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்<br>5. இலங்கையின் ஊக்கமருந்துப் பொருட்களைத் தடுப்பதற்கான முகவராண்மை நிறுவனம் | • (1999ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) சுகததாச தேசிய விளையாட்டுத்துறை கட்டிடத் தொகுதி அதிகாரசபைச் சட்டம்<br>• (2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) விளையாட்டு நடவடிக்கைகளின்போது ஊக்க மருந்துப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டம் |

25. **சுற்றுலாத்துறை அமைச்சர்**

01. **விடய எல்லை**

இலங்கையின் கலாசாரம், உயிரினப் பல்வகைத்தன்மை, மக்கள்நேயம் மற்றும் நட்புறவுமிக்க மக்களின் தனித்துவம் என்பவற்றை மேலெழுப்பி இலங்கையை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாடாக மாற்றி உயர் வருமானம் பெறும் தொழில்கள் மற்றும் வாழ்வாதார துறையினையும் உயர்ந்த அந்நியச் செலாவணியை உழைக்கும் பொருளாதாரத்துறையாகச் சுற்றுலாக் கைத்தொழிலை வலுப்படுத்துதல்.

02. **கடமைகளும் பணிகளும்**

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் கொள்கைகள் என்பவற்றுக்கு அமைய "உயர்ந்த அந்நியச் செலாவணியைக் குறிக்கோளாகக்கொண்ட சூழல் மற்றும் உள்நாட்டு கலாசாரநேய சுற்றுலாக் கைத்தொழிலொன்றை" ஏற்படுத்துவதற்காக இராஜாங்க அமைச்சுக்காக கொள்கை ரீதியான வழிகாட்டலை மேற்கொள்ளல் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய சுற்றுலாத்துறை எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. அதிகளவிலான ஆட்களின் கலந்துகொள்ளலுடன் சுற்றாடல் மற்றும் உள்ளூர் கலாசார நேயமிக்க சுற்றுலா கைத்தொழிலொன்றை அபிவிருத்தி செய்வதற்குரிய வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.
2. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புத் தொடர்பாக விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.
3. வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக புதிய அத்துடன் கவர்ச்சிகரமான இடங்களை அடையாளங் காணுதல்.
4. சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக வியாபார மாநாடுகள், விழாக்கள், கண்காட்சிகள் என்பவற்றை நடாத்துவதற்கு வசதியளித்தல்.
5. சுற்றுலாக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் துறைக்கு முதலீடுகளையும் வேறு வசதிகளையும் வழங்குதல்.
6. பிரதான சுற்றுலா நகரங்களை இணைக்கும் வீதிச் சந்திகளில் சுற்றுலாச் சேவை நிலையங்களை அமைத்தல்.
7. பிரதேச அலுவலகங்களைத் தாபிப்பதன் மூலம் சுற்றுலா வசதிகளை அங்கீகரிக்கும் செயற்பாட்டை விதிமுறைப்படுத்தல்.
8. பிரதான சுற்றுலா நகரங்களில் சுற்றுலாப் பயிற்சி பாடசாலைகளை தாபித்தலும் கவர்ச்சிகரமான திறன்கள் அபிவிருத்தி பாடநெறிகளை அறிமுகப்படுத்தலும்.
9. வீடுகளைச் சார்ந்ததாகவும், சமுதாயம் சார்ந்ததாகவும் சுற்றுலாக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.
10. அனைத்து சுற்றுலா வழிகாட்டிகளையும், சாரதிகளையும் பதிவு செய்தலும், பயிற்றுவித்தலும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிகைகளை எடுத்தல்.
11. சுற்றுலா வியாபாரத்தைச் சார்ந்ததாக தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு விசேட வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.
12. தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் சற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை எற்படுத்திக் கொடுத்தல்
13. தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு வசதிகளை அளித்தலானது One Stop எண்ணக்கருவின் கீழ் ஒரு கூட்டிணைப்பு நிலையத்தினூடாக மேற்கொள்ளும் திறமுறையினை நடைமுறைப்படுத்தல்.
14. உயர் தரத்திலான சுற்றுலா ஹோட்டல்களைத் தாபித்தலும் தற்போதிருக்கின்ற ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை இருமடங்காக அதிகரித்தலும்.
15. சுற்றுலா பயணிகளுக்கிடையே தேசிய மரபுரிமைகள் மற்றும் தொல்பொருளியல் இடங்கள் தொடர்பாக சரியான தகவல்களை சுற்றுலா பயணிகளுக்கிடையே பிரபல்யப்படுத்துவதற்காக சுற்றுலா வழிகாட்டிகளுக்கு சரியான அறிவினையும், தகவல்களையும் வழங்கும் முறையொன்றை அறிமுகப்படுத்தல்.

04. **தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்<br>2. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை<br>3. இலங்கை சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்<br>4. இலங்கை சம்மேளனப் பணியகம்<br>5. தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம் | • (2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) சுற்றுலாத்-துறைச் சட்டம்<br>• (1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தாவரவியல் பூங்கா கட்டளைச் சட்டம் |

## 25.1 விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

### 01. கடமைகளும் பணிகளும்

சுற்றுலாத்துறை அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் “உயர்ந்த அந்நியச் செலாவணியைக் குறிக்கோளாகக்கொண்ட சூழல் மற்றும் உள்நாட்டு கலாசாரநேய சுற்றுலாக் கைத்தொழிலொன்றை” விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

### 02. அதிவிசேட முன்னுரிமைகள்

1. இருக்கின்ற சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் கைத்தொழில் நகரங்களை உச்சக்கட்ட வினைத்திறமையோடு பயன்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலும், தாமதமின்றி நவீனமயப்படுத்தலும்.
2. கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாம் ஓடுபாதை மற்றும் பயணிகள் முடிவிடத்தை அபிவிருத்தி செய்தல்.
3. கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ளக விமான பயணிகள் முடிவிடமொன்றை அபிவிருத்தி செய்தல்.
4. நுவரெலியா விமான நிலையம் உட்பட உள்ளக விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.
5. மத்தள விமான நிலையத்தில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தலும், வசதிகளை மேம்படுத்தலும்.
6. ஸ்ரீலங்கன் விமானச் சேவையை உயர்மட்ட சர்வதேச தரவளவு வரை உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
7. விமானப் பொதிகளை ஏற்றுமதி செய்வதை விரிவாக்குதல்.

### 03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. சிவில் விமான சேவைகள் அதிகாரசபை<br>2. வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனி<br>3. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லயின் மற்றும் அதன் துணைக் கம்பனிகள் | • இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபைச் சட்டம் (2002ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க)<br>• (2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) சிவில் விமானச் சேவைகள் சட்டம்<br>• (1982 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) வான்செலவு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) விமானப் போக்குவரத்துச் சட்டம்<br>• (1950 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) விமானத் தரிப்பிடம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சட்டம் |

## 26. வர்த்தக அமைச்சர்

### 01. விடய எல்லை

பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து போட்டிகரமான உள்நாட்டு வர்த்தக வலைப்பின்னலொன்றினூடாக மக்களுக்குத் தேவையான நுகர்வுப்பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

02. **கடமைகளும் பணிகளும்**

1. “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் ஏனைய கொள்கைகளுக்கு அமைவாக “பாவனையாளர் பாதுகாப்பு மற்றும் பலமான கூட்டுறவு இயக்கமொன்றை” ஏற்படுத்துவதற்காகத் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வர்த்தகம் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. சந்தைச் சமச்சீரற்ற நிலைமையினால் ஏற்படும் பொருட்களுக்கான பற்றாக்குறை மற்றும் விலைகளின் ஸ்திரத்தன்மை இல்லாமல் போவதைத் தவிர்த்தல்.
2. உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கான சந்தை வசதிகளை அதிகரித்தல்.
3. இறக்குமதி மற்றும் உள்நாட்டு உற்பத்திகள்மூலம் சந்தையில் தரமான பொருட்களை வழங்குதலை விஸ்தரித்தல்.
4. கூட்டுறவு வர்த்தக வலைப்பின்னலைப் பலப்படுத்ததல்

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச<br>2. வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி<br>3. கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம்<br>4. அளவுக்கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்<br>5. உணவு ஆணையாளர் திணைக்களம்<br>6. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்யும் பதிவாளர்)<br>7. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு<br>8. இசைவு மதிப்பீடுகள் பற்றிய இலங்கை மதிப்பீட்டுச் சபை<br>9. இலங்கை தரவளவு நிறுவனம்<br>10. இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகம் | • (1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க) வியாபாரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம்<br>• (1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) அளவீட்டுக்கூறு நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம்<br>• (1946 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) நிறுவைகள், அளத்தல்கள் கட்டளைச் சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க) மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் சட்டம்.<br>• (2005ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க) இசைவு மதிப்பீடுகள் தொடர்பான இலங்கை மதிப்பீட்டுச் சபைச் சட்டம்<br>• (1984 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) இலங்கைத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனச் சட்டம்<br>• (2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க) புலமைச் சொத்துக்கள் சட்டம் |

**26.1 கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

1. வர்த்தக அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் “பாவனையாளர் பாதுகாப்பு மற்றும் பலமான கூட்டுறவு இயக்கமொன்றை” ஏற்படுத்துவதற்காக விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு எனும் விடயத்துக்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவியளித்தல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

2. புதிய தொழில்நுட்பம் கலந்த வலுவான அத்துடன் செயற்றிறன்மிக்க வர்த்தக வலையமைப்பொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. கூட்டுறவுக் கட்டமைப்பினை பன்முகப்படுத்தப்பட்ட வர்த்தக மாதிரியொன்றின்கீழ் இலாபமீட்டும் நிறுவன வலைப்பின்னலாக மாற்றுதல்.
2. விவசாயம், பாலுற்பத்தி, மீன்பிடி, உள்நாட்டு விவசாய உற்பத்திகள், சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை போன்ற துறைகள்சார்ந்து விரிவாகப் பரவியுள்ள முன்னேற்றகரமான மற்றும் பலமான உற்பத்திகளுக்கான கூட்டுறவு முறையொன்றை ஆரம்பித்தலும் கூட்டுறவு மற்றும் சதொச வர்த்தக வலைப்பின்னலூடாக நேரடிச் சந்தையை ஏற்படுத்திக்கொடுத்தல்.
3. உற்பத்திக் கூட்டுறவு முறையினூடாக இளைஞர் மற்றும் பெண்கள் தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்ட பெறுமதி சேர்ப்பும் வர்த்தகத்துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான ஊக்குவிப்புகளும்.
4. பாரம்பரிய கைத்தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், மூலதனம் மற்றும் சந்தை வசதிகளை அறிமுகப்படுத்தும் பொறுப்பினை உற்பத்திசார் கூட்டுறவுத்துறைக்கு ஒப்படைத்தல்.
5. மூலதனத்தை வழங்குவதற்காகச் சகல கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பைப்பெற்று கூட்டுறவு அபிவிருத்தி வங்கியொன்றைத் தாபித்தல்.
6. சுகாதாரத்துக்குப் பாதகமான நுகர்வுப்பொருட்கள் சந்தைக்குள் வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.
7. நுகர்வுப்பொருட்கள் தொடர்பாக சுகாதாரப் பாதுகாப்பு முறைகள் உள்ளடங்கிய தரப்படுத்தலை ஏற்படுத்துதல்

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபை<br>2. தேசியக் கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்<br>3. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யும் பதிவாளர்<br>4. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | • (2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம்<br>• (2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனங்களைக் கூட்டிணைக்கும் சட்டம்<br>• கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டம் (1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)<br>• கூட்டுறவு சங்கங்கள் சட்டம் (1922 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) |

27. **கைத்தொழில் அமைச்சர்**

01. **விடய எல்லை**

கைத்தொழில் பல்வகைத்தன்மையினூடாக உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச வழங்கல் வலையமைப்புடன் தொடர்புற்று உலக போட்டிகரத் தன்மையினுள் இணையான இலாபங்களை அணுகக்கூடிய வகையில் உள்நாட்டுக் கைத்தொழில்துறையை நவீன திறமுறைகளினூடாக வலுப்படுத்தலும் மேம்படுத்தலும்.

02. **கடமைகளும் பணிகளும்**

"சுபீட்சத்தின்நோக்கு" கொள்கைப்பிரகடனத்துக்குஅமைவாக "உள்நாட்டுக்கைத்தொழில்களைக்கட்டியெழுப்புவதற்காக நேயம்மிக்க வியாபாரச் சூழலொன்றை உருவாக்குவதற்குவதற்காக' ' தொடர்புடைய இராஜாங்க அமைச்சுக்களுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கைத்தொழில் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட

நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. சகல கைத்தொழிலாளர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தீர்த்து வைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.
2. ஏற்றுமதி இறக்குமதிச் செயற்பாட்டினை இடையூறில்லாமல் குறைந்த காலத்துக்குள் செயற்றிறன் மிக்கதாக நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றை ஏற்படுத்துதல்.
3. ஏற்றுமதி தொடர்பான உற்பத்திச் செயற்பாட்டினைப் பலப்படுத்துவதற்காகச் சகல மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதலும் செயற்படுத்துதலும்
4. நடைமுறையிலுள்ள கைத்தொழில்துறைகளைப் பொருளாதாரரீதியில் பலப்படுத்துவதுடன் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்து புதிய கைத்தொழில்துறைகளுக்கான அணுகுமுறைகளை ஏற்படுத்தத் தேவையான வழிமுறைகளைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
5. வீழ்ச்சியடைந்துள்ள தொழில்முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அறிமுகப்படுத்தலும், நடைமுறைப்படுத்தலும்.
6. உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வர்த்தகர்களைப் பாதுகாப்பதும் அவர்களைப் பலப்படுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.
7. ஏற்கனவே முதலீட்டுச் சபையுடனும் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவுடனும் ஒருங்கிணைந்து ஏறாவூர் பிரதேசத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதற்கான சகல உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
8. தற்போது நிலத்துக்குக் கீழும் கடலுக்கு அடியிலும் இருப்பதாகக் கருதப்படும் கனிய வளங்களை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்வதும் நாட்டில் அவற்றை உற்பத்தி செய்வதற்கான செயற்பாட்டை பலப்படுத்தலும்.

04. **தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>2. லங்கா லேலன்ட் லிமிட்டட்<br>3. லங்கா அசோக் லேலன்ட் லிமிட்டட்<br>4. வரை. தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்<br>5. வரையறுக்கப்பட்ட கஹகொல்ல பொறியியலாளர் சேவைகள் கம்பனி (KESCO)<br>6. மாந்தை சோல்ட் லிமிட்டட்<br>7. ஆனையிறவு உப்பளம்<br>8. ரொபோ தொழில்நுட்பத்துக்கான அதிசிறப்பு நிலையம்<br>9. வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனி<br>10. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்<br>11. இலங்கை கனிய மணல் கம்பனி<br>12. பரந்தன் இரசாயனக் கம்பனி<br>13. கஹட்டகஹ கிறைபைட்<br>14. வரை. லங்கா பொசுபேட் கம்பனி<br>15. இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் (செங்கல் மற்றும் ஓடு)<br>16. வரையறுக்கப்பட்ட பீ.சி.சி கம்பனி<br>17. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை<br>18. அபேகம | • (1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) கைத்தொழில் மேம்பாட்டுச் சட்டம்<br>• தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரச்சபை சட்டம் (2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) |

**27.1 பத்திக், கைத்தறித் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சர்**

*01.* **கடமைகளும் பணிகளும்**

கைத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "உள்நாட்டுக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்காக நேயம்மிக்க வியாபாரச் சூழலொன்றை உருவாக்குவதற்குவதறாக" விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

*02.* **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. இலங்கையை வெளிநாட்டுச் சந்தையில் ஆடை உற்பத்தித் துறையில் முன்னணிவகிக்கும் நாடாக மாற்றியமைப்பதற்காக விசேட இலக்கினைக்கொண்ட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.
2. பத்திக் உற்பத்தித்துறைக்குத் தேவையான ஆடை வகைகள் உட்பட உயர் தரத்திலான மூலப்பொருட்களை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்தல்.
3. உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக பத்திக் மற்றும் கைத்தறி நெசவுத் துறையைப் பிரபல்யப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.
4. ஆடைகளை விற்பனை செய்வதற்கான நகரமொன்றை ஏற்படுத்தல்.
5. ஆடை உற்பத்திக்கான சந்தையை பகிரங்க மற்றும் போட்டி அடிப்படையில் செயற்பட இடமளித்தல்.
6. பாரிய அளவிலாள உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு அதிதொழில்நுட்பத்துடனான உற்பத்திகளைப் புதிதாக ஆரம்ப்பிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வேலைத்திட்டங்களைத் தயாரித்தலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும்.

*03.* **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவ-கங்களும்<br>2. நெசவுக் கைத்தொழில் திணைக்களம்<br>3. லங்கா ரெக்ஸ்ரைல் மில்ஸ் எம்போரியம் லிமிட்டட்<br>4. லங்கா சலுசல லிமிட்டட்<br>5. இலங்கை கைத்தொழில் சபை (லக்சல)<br>6. தேசிய வடிவமைப்பு நிலையம்<br>7. தேசிய அருங்கலைகள் பேரவை | • (2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனச் சட்டம்<br>• (1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) புடவைப் பங்குச் சபைச் சட்டம் |

**27.2 இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்**

*01.* **கடமைகளும் பணிகளும்**

கைத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "உள்நாட்டுக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்காகநேயம்மிக்கவியாபாரச்சூழலொன்றைஉருவாக்குவதற்குவதற்காக" விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய இரத்தினக்கல், தங்க ஆபரணங்கள் மற்றும் கனிய வளங்கள்சார்ந்த கைத்தொழில் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. தனியார் துறையுடன் போட்டாபோட்டி அடிப்படையில் இரத்தினக்கல் மற்றும் கனிய வளங்கள் சார்ந்த கைத்தொழில்களை ஆக்கபூர்வமான அணுகுமுறையொன்றின் ஊடாக நவீனமயப்படுத்துதல்.

2. பெறுமதி சேர்க்கப்படாது ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக்கற்கள் மற்றும் கனிய வள ஏற்றுமதியை மட்டுப்படுத்தி அதனுடன் சார்ந்த கைத்தொழில்துறைகளுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட உச்சஅளவிலான ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏற்றுமதி உற்பத்திகளாக அவற்றை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

3. பட்டம்தீட்டப்பட்ட இரத்தினக்கல் ஏற்றுமதிக்குப் பதிலாக இரத்தினக்கற்கள் அடங்கிய தங்க ஆபரண உற்பத்திகளை மேற்கொள்ளுவதற்கான நவீன தொழில்நுட்பக் கருவிகள் இறக்குமதி செய்யப்படுதலுக்கு வரிச்சலுகைகளை வழங்குதல்.

4. இரதினக்கல் மற்றும் கனிய வளங்கள் சார்ந்த கைத்தொழில் துறைகள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய சூழல் மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாட்டினை மீளாய்வு செய்து அவற்றை இலகுபடுத்தலும் கைத்தொழிலாளர்களுக்கு அச்சேவைகள் வழங்கப்படுதலை இலகுபடுத்தலும்.

03. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை<br>2. இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி நிறுவகம் | • (1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டம் |

**27.3. பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச்சர்**

01. **கடமைகளும் பணிகளும்**

கைத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைய "உள்நாட்டுக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்காக நேயம்மிக்க வியாபாரச் சூழலொன்றை உருவாக்குவதற்குவதற்காக" விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

02. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், தளபாடங்கள் உட்பட கிராமியக் கைத்தொழில்களின் பெறுமதியை அதிகரிக்கக்கூடிய வகையில் அவற்றை மேம்படுத்தலும் முன்னுரிமை வழங்கி ஊக்குவிப்புகளை வழங்குதலும்.
2. தச்சுத்தொழில், பிரம்பு உற்பத்தித்தொழில், பன்ன உற்பத்திகள் சார்ந்த மூலப்பொருட்கள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வாக கூட்டுறவு முறையொன்றின்கீழ் பயன்படுத்தப்படாத அரச காணிகளில் நீண்டகால அடிப்படையில் அந்த மூலப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்.
3. தளபாட உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கியுள்ள மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்பவதற்கான நெருக்கடிகளுக்குத் தீர்வாகச் சுங்கத் தீர்வையற்ற பட்டைகளுடனான மரக்குற்றிகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குதல்.
4. உருக்குத்தொழில் போன்ற பாரம்பரிய கைத்தொழில் துறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.

03. **தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. மரப்பொருட்கள் ஆக்க நிலையம்<br>2. விதாதா நிலையம்<br>2. தேசிய அருங்கலை பேரவை | • (1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவையுடன் ஒருங்கிணைந்த நிறுவனங்கள் சட்டம்<br>• (1996 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் ஒருங்கிணைந்த நிறுவனங்களுக்கான விசேட ஏற்பாட்டுச் சட்டம் |

28 **வெகுசன ஊடக அமைச்சர்**

01. **விடய எல்லை**

பேச்சு மற்றும் எழுத்தின் சுதந்திரம் அடங்கலாக சரியான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தும் தகவல் அறிவு மற்றும் அபிப்பிராயங்களை சரிசம நிலையில் பிரசாரம் செய்வதற்கு உகந்த வெகுசன ஊடகக் கலாசாரமொன்றை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

02. **கடமைகளும் பணிகளும்**

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்தும் ஏனைய கொள்கைகளுக்கு அமைய “வெளிப்படைத்தன்மையுடனான வெகுசன ஊடகக் கலாசாரத்தை அறிமுகப்படுத்துவதற்காக” தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வெகுசன ஊடகம் எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

03. **அதிவிசேட முன்னுரிமைகள்**

1. வெளிப்படைத் தன்மையுடனான வெகுசன ஊடகக் கொள்கையை அறிமுகப்படுத்துதல்.
2. தேசிய மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஊடகத் தரங்களைப் பேணுதல்.
3. ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள், சமூகக் கலாசாரப் பெறுமதிகள் மற்றும் சமூக விழுமியக் கட்டமைப்புகளை மீறாதவாறு செயற்படுவதற்கான பின்னணியை உருவாக்குதல்.
4. இலங்கைப் பத்திரிகையாளர் சபையை மறுசீரமைத்தல்.
5. ஊடகவியலாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக மாகாண அடிப்படையில் ஊடக சங்கங்களை நிறுவுதல்.
6. இலங்கை தபால் சேவையை மக்களின் தேவைக்காக விஸ்தரித்தல்

04. **உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழு<br>2. அரச அச்சகத் திணைக்களம்<br>3. தகவல் திணைக்களம்<br>4. இலங்கை பத்திரிகை சபை<br>5. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | • (2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க) தகவல் அறியும் உரிமைபற்றிய சட்டம்<br>• (1973ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம்<br>• (1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் |

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 6. சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு<br>7. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்<br>8. வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி<br>9. வரையறுக்கப்பட்ட லங்கா பத்திரிகை நிறுவனம்<br>10. செலசினே தொலைக்காட்சி நிறுவகம்<br>11. இலங்கை மன்றக் கல்லூரி | • இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1996ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க)<br>• (1986ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1973ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க)அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1839ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க) பத்திரிகைக் கட்டளைச் சட்டம்<br>• (1973ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க) இலங்கை மன்றச் சட்டம் |

### 28.1 தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**01. கடமைகளும் பணிகளும்**

வெகுசன ஊடக அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "வெளிப்படைத்தன்மையுடனான வெகுசன ஊடகக் கலாசாரத்தை அறிமுகப்படுத்துவதற்காக" விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

**02. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. சமூக ஊடக வலைத்தளங்கள் உட்பட புதிய ஊடகப் பாவனை மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பான அறிவினையும் புரிந்துணர்வினையும் வழங்குவதற்காக சமூகக் கற்கைகளுக்காக செயல்முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
2. சர்வதேச தரங்களுக்கு ஏற்றவகையில் ஊடகத்துறையில் உயர்கல்விக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
3. புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்டு புதிய வாய்ப்புகளுக்கு ஏற்றவகையில் செயற்றிறன்மிக்க மக்களைக் கேந்திரமாகக்கொண்ட டிஜிட்டல் தபால் சேவைகளுக்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தலும் நடைமுறைப்படுத்துதலும்.

**03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
|---|---|
| 1. தபால் திணைக்களம் | • (1909 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) முத்திரை கட்டளைச் சட்டம்<br>• (1908 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) தபால் அலுவலகக் கட்டளைச் சட்டம் |